Registered as a news paper.

பொதுசன நூலகம்
யாழ்ப்பாணம்

பக்கங்கள்: பன்னிரண்டு

விலை: ரூபா 7.00

நமது ஈழநாடு

தமிழர் தாயகத்தின் முன்னோடி நாளிதழ்

12 வருடங்களின் பின்னர் மீண்டும்
திருமறைக் கலாமன்றம்
தயாரித்து வழங்கும்
ஞானசௌந்தரி
(இசை நாடகம்)
ஜூலை 9, 10, 11,- 2004 (வெள்ளி, சனி, ஞாயிறு)
மன்ற அரங்கில் மாலை 7.00 மணிக்கு
அன்பளிப்பு 30/=
அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்
238, பிரதான வீதி,
யாழ்ப்பாணம்.
-திருமறைக் கலாமன்றம்

மலர் : 02 திருவள்ளுவர் ஆண்டு: 2035 ஆனி 21 ஆம் நாள், ஹிஜ்ரி 1427 ஜ.அவ்வல் 16 (05.07.2004) திங்கட்கிழமை இதழ் :276

# ராணுவ உளவுப்பிரிவு தொடர்ந்தும் கருணா குழுவுக்கு உதவிவருகின்றது!

## புலிகள் மீண்டும் எச்சரிக்கை

(மட்டக்களப்பு)

விடுதலைப் புலிகள் அமைப்பிலிருந்து நீக்கப்பட்ட கருணாவின் குழுவைச் சேர்ந்தவர்களுக்கு இராணுவப் புலனாய்வுத்துறை தொடர்ந்தும் உதவிகளைச் செய்து வருவதுடன் -

இவர்களைப் பயன்படுத்தி மக்கள் மத்தியில் ஊடகங்கள் மூலம் குழப்பங்களை ஏற்படுத்த முனைவதாகவும், இது தொடர்பாக ஆதாரபூர்வமாக தமக்குத் தகவல்கள் கிடைத்திருப்பதாகவும் விடுதலைப் புலிகள் குற்றம் சாட்டியுள்ளனர்.

அத்துடன் - தமது பொறுமையைப் படையினர் தப்பாக எடை போட்டுவிடக் கூடாது என்றும் புலிகள் எச்சரிக்கை விடுத்துள்ளனர். இது தொடர்பாக மேலும் தெரியவருவதாவது -

சட்ட விரோதமான முறையில் ஆயுதங்களை வைத்திருந்தாகத் தெரிவித்து பொலிஸாரால் கைது செய்யப்பட்டு, மட்டக்களப்பு சிறைச்சாலையில் வைக்கப்பட்டுள்ள கருணா குழுவைச் சேர்ந்த சச்சு மாஸ்ரர் (கணபதிப்பிள்ளை மகேந்திரன்) என்பவருக்கு இராணுவப் புலனாய்வுத் துறை தொலைபேசி வசதிகளைச் செய்து கொடுததிருக்கிறது.

தொலைபேசி வசதி அளிக்கப்பட்ட சச்சு மாஸ்ரர் சிறைச்சாலையில் இருந்து தமிழ் வார இதழ் ஒன்றுக்கும், வானொலி ஒன்றுக்கும் நேர்காணலை நடத்தி வருவதாகவும் இவை இரண்டும் இராணுவப் புலனாய்வுத் துறையின் பின்னணியில் இயங்கி வருவதாகவும் அவர்கள் மேலும் தெரிவித்துள்ளனர்.

சச்சு மாஸ்ரர் என்ற பெயரை உடைய கணபதிப்பிள்ளை மகேந்திரன் இந்த நேர்காணலில் தனது பெயரை மாறன் எனப் பயன்படுத்தி வருவதாகவும் தெரிவித்த விடுதலைப்புலிகளின் கிழக்குப் பகுதி முக்கியஸ்தர் ஒருவர் இவருக்கு இந்த வசதிகள் அளிக்கப்பட்டமை தொடர்பான தகுந்த ஆதா

(12 ஆம் பக்கம் பார்க்க)

## இளையோர் தடகள விளையாட்டு விழா நேற்றுடன் சிறப்பாக நிறைவுபெற்றது!



(யாழ்ப்பாணம்)

கரும்புலிகள் தினத்தை முன்னிட்டு நடத்தப்பட்ட முதலாவது தமிழ்த்தேசிய இளையோர் தடகள விளையாட்டு விழாவின் பரிசளிப்பு வைபவம் யாழ்.மாவட்ட விளையாட்டுத்துறை அதிகாரி றொகான் ராஜசிங்கம் தலைமையில் யாழ்ப்பாணம் பொதுமைதானத்தில் நேற்று மாலை நடைபெற்றது.

இந்த நிகழ்வில் யாழ்.மாவட்ட அரசாங்க அதிபர் பத்மநாதன், யாழ். பல்கலைக்கழக துணைவேந்தர் பேராசிரியர் (12 ஆம் பக்கம் பார்க்க)

## அரசாங்க சேவைகளில் 30 ஆயிரம் பேரை இணைத்துக்கொள்ள அடுத்த மாதம் விண்ணப்பம் கோரப்படும்!

(கொழும்பு)

கூட்டுத்தாபனங்கள், திணைக்களங்கள் உட்பட - அரசாங்க நிறுவனங்களில் நிலவும் 57 ஆயிரம் வெற்றிடங்களை நிரப்புவதற்கு அடுத்த மாதம் விண்ணப்பங்களைக் கோருவதற்கு ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி அரசாங்கம் தீர்மானித்துள்ளது.

யுவதிகள் 30 ஆயிரம் பேருக்கு தொழில் வழங்குவதற்கு அரசு நடவடிக்கை எடுத்துள்ளது.

வங்கி உத்தியோகஸ்தர்கள், எழுதுவினைஞர்கள், தொழிலாளர்கள் உட்பட பலவித தரங்களில் அரச நிறுவனங்களில் வெற்றிடங்கள் உள்ளன என்று ஆளுங் கட்சியின் பிரதான அமைப்பாள

## இன்று தமிழர் தாயகப் பகுதியெங்கும் கரும்புலிகள் நினைவு நாள் உணர்வுபூர்வமாக அனுஷ்டிப்பு!

தாயக விடுதலைப் போரில் இன்னுயிர் அர்ப்பணித்த கரும் அமைக்கப்பட்டும், கரும்புலி நினைவு பதாகைகள் கட்டப்பட் கான பிரதான நிகழ்வுகள் முல் லைத்தீவு நகரிலும், மாங்குளம்

வெற்றிடங்களை நிரப்புவதற்கு அடுத்த மாதம் விண்ணப்பங்களைக் கோருவதற்கு ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி அரசாங்கம் தீர்மானித்துள்ளது.

ஏற்கனவே 27 ஆயிரம் பட்டதாரிகளுக்கு தொழில் வழங்கும் நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

அதற்கு மேலதிகமாக க.பொ.த. சாதாரண தரம் மற்றும் உயர் தரம் சித்தியடைந்த இளைஞர், எழுதுவினைஞர்கள், தொழிலாளர்கள் உட்பட பலவித தரங்களில் அரச நிறுவனங்களில் வெற்றிடங்கள் உள்ளன என்று ஆளுங் கட்சியின் பிரதான அமைப்பாளரும், வர்த்தக நுகர்வோர் அமைச்சருமான ஜெயராஜ் பெர்னாண்டோ புள்ளே தெரிவித்தார்.

எவ்வித அரசியல் பேதங்களுமின்றி வெற்றிடங்கள் நிரப்பப்படும். எட்டாம் தரம் சித்தியடைந்த

(12 ஆம் பக்கம் பார்க்க)

தாயக விடுதலைப் போரில் இன்னுயிர் அர்ப்பணித்த கரும்புலி மாவீரர்களின் நினைவு நாள் நிகழ்வுகள் இன்று தாயக ரீதியாகவும், சர்வதேச ரீதியாகவும் இடம் பெறவுள்ளது.

கரும்புலி நாள் நினைவை அனுஷ்டிக்கும் வகையில் தமிழீழ பிரதேசம் எங்கும் பந்தல்கள் அமைக்கப்பட்டும், கரும்புலி நினைவு பதாகைகள் கட்டப்பட்டும் வீதி வளைவுகள் அமைக்கப்பட்டும் சிவப்பு மஞ்சள் கொடிகளால் அலங்கரிக்கப்பட்டும் காணப்படுகின்றன.

இதேவேளை யாழ்ப்பாணத்துக்கான பிரதான நிகழ்வு நெல்லியடியிலும், புங்குடுதீவிலும் நடைபெறவுள்ளன.

முல்லைத்தீவு மாவட்டத்துக்கான பிரதான நிகழ்வுகள் முல்லைத்தீவு நகரிலும், மாங்குளம் லெப்டினன்ட் கேணல் போர்க்கின நினைவுத்தூபி அருகிலும் நடைபெறவுள்ளன.

வவுனியா மாவட்டத்துக்கான பிரதான நிகழ்வு பண்டாரிக்குளம் பைசர் விளையாட்டு மைதானத்திலும், மன்னார் மாவட்டத்துக்கான சிறப்பு நிகழ்வு ஆண்டான்

(12 ஆம் பக்கம் பார்க்க)

## கிழக்கில் படையினருடனான சந்திப்புக்களிலிருந்து

# விடுதலைப் புலிகள் விலகிவிட்டதாக கண்காணிப்புக்குழு அரசுக்கு அறிவிப்பு

(கொழும்பு)

மட்டக்களப்பு - அம்பாறை மாவட்டங்களில் இரண்டு வாரங்களுக்கொரு முறை படையினருடன் நடைபெறும் சந்திப்புக்களிலிருந்து விடுதலைப் புலிகள் விலகியுள்ளதாக போர் நிறுத்தக் கண்காணிப்புக்குழு இலங்கை அரசாங்கத்துக்கு அறிவித்துள்ளது.

போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழுவின் பேச்சாளர் ஹக்ரப் ஹொகலன்ட் நேற்றுமுன்தினம், உத்தியோக பூர்வமாக அரசாங்கத்திற்கும், படையினருக்கும் இந்த அறிவிப்பை விடுத்ததாகத் தெரிவித்தார்.

விடுதலைப் புலிகள் அமைப்பிலிருந்து வெளியேற்றப்பட்ட கருணாவுக்கு படையினர் பாதுகாப்பு அளித்து வருவதாகத் தெரிவித்தே புலிகள் இந்தச் சந்திப்பிலிருந்து விலகியுள்ளதாக அவர் தெரிவித்தார்.

இது தொடர்பாக புதிய இராணுவத் தளபதி தெரிவிக்கையில்- படையினருடான சந்திப்புக்களை கிழக்குப் பகுதியில் புலிகள் இரத்துச் செய்துள்ளனர் என்பதை கண்காணிப்புக்குழு உறுதிப்படுத்தியிருப்பதால் அதனை அவர்கள் படையினருக்குத் தெரியப்படுத்தியிருப்பர்.

இந்தச் சந்திப்புக்கள் இரத்துச் செய்யப்பட்டது மிகவும் கவலை தரும் விடயம். இதனால், படையினருக்கும் புலிகளுக்கும் இடையிலான உறவு தாழ்நிலைக்குச் சென்

(12 ஆம் பக்கம் பார்க்க)

# ஈ.பி.டி.பி. உறுப்பினர் ஒருவருக்கு ஈச்சமோட்டையில் கத்திக்குத்து!

(யாழ்ப்பாணம்)

பொதுமக்களுடன் முரண்பட்ட ஈ.பி.டி.பி. உறுப்பினருக்கு கொழும்புத்துறையில் வைத்து கத்தியால் குத்தப்பட்டதாகத் தெரிவிக்கப்படுகிறது.

கொழும்புத்துறை - ஈச்சமோட்டை பகுதியில் இடம்பெற்ற இந்தச் சம்பவத்தில் அதே இடத்தைச் சேர்ந்த முன்னாள் யாழ். மாநகர சபை உறுப்பினரும் ஈ.பி.டி.பியின் முக்கியஸ்தருமான ரி.றீகன் (வயது-37) என்பவரே மார்புப் பகுதியில் கத்தியால் குத்தப்பட்டு காயமடைந்த நிலையில் யாழ். போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டார்.

இந்தச் சம்பவம் பற்றி பொது மக்கள் தரப்பில் தெரிவிக்கப்பட்டதாவது -

வீதியால் சைக்கிளில் சென்று கொண்டிருந்த இருவரை மோட்டார் சைக்கிளில் வந்த ஈ.பி.டி.பி. உறுப்பினர் மோதி கீழே வீழ்த்தியுள்ளார்.

கீழே வீழ்ந்த இருவரில் ஒருவரான பிரபு என்பவர் ஈ.பி.டி.பி. உறுப்பினரிடம் நியாயம் கேட்ட போது அவரை ஈ.பி.டி.பி. உறுப்

(12 ஆம் பக்கம் பார்க்க)




இலங்கையில் முன்னணி வகிக்கும் உள்ளூர் விமான சேவை...
ஒதுக்கீடுகளுக்கு அழையுங்கள் 021-2223891, 2226297, 077-2349999, 011-2372952-3, 011-2360290, 011-2360291
email: jaffna@expoavi.com, reservations@expoavi.com.
EXPOAIR
Your friend in the skies...

# இளையோர் தேசிய தடகள போட்டியின் இறுதிநாள் நிகழ்விலிருந்து சில காட்சிகள்


முதலிடம் பெற்ற யாழ். மாவட்டத்துக்கான கிண்ணம் வழங்கப்படுகிறது.

பரிசளிப்பு நிகழ்வில் பிரமுகர்கள்



இரண்டாம் இடம் பெற்ற திருமலை மாவட்டத்துக்கான கிண்ணம் வழங்கப்படுகிறது.


தடகள விளையாட்டு விழாவில் சாதனை படைத்த வீரர்களுக்கு விருது வழங்கப்படுகிறது.


தடகள விளையாட்டு விழாவில் சாதனை படைத்த வீரர்களுக்கு விருது வழங்கப்படுகிறது.


தேசிய ரீதியில் போட்டியிட்டு வென்றவர்களுக்கு கௌரவிப்பு


தேசிய ரீதியில் போட்டியிட்டு வென்றவர்களுக்கு கௌரவிப்பு

பொதுசன நூலகம் யாழ்ப்பாணம்

# சுழற்சி முறையில் பிரதமர் பதவி: சிறிலங்கா சுதந்திரக்கட்சி திட்டம்

(கொழும்பு)

ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி அரசாங்கத்தின் பிரதமர் பதவியை - அநுரா பண்டாரநாயக்க மற்றும் ரட்ணசிறி விக்கிரமநாயக்க ஆகியோருக்கும் சுழற்சி முறையில் வழங்குவதற்கு சிறிலங்கா சுதந்திரக்கட்சி தீர்மானித்துள்ளது.

இதுதொடர்பாக கட்சியின மத்திய குழு கூட்டத்தில் பிரேரணை ஒன்றைச் சமர்ப்பிக்க கட்சியின் உயர்பீடம் நடவடிக்கைகள் எடுத்து வருவதாக தெரியவருகிறது.

இந்தப் புதிய ஆலோசனையின் படி, அநுரா பண்டாரநாயக்கா, ரட்ணசிறி விக்கிரமநாயக்க ஆகியோருக்கும் பிரதமர் பதவி சுழற்சி முறையில் வழங்கத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

தற்போதைய பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவுக்கு கடந்த ஏப்ரல் ஆறாம் திகதி பிரதமர் பதவி வழங்கப்பட்டது. இந்தப் பதவி வழங்கப்பட்ட கால த்திலிருந்து 90 நாட்கள் வரை ராஜபக்ஷ பிரதமர் பதவியில் செயற்பட வேண்டுமென்பது அரசியல் பிரிவுகளின் கருத்தாக இருந்தது.

இதற்கு காரணம் புதிய அரசு பதவிக்கு வந்து மூன்று மாத்திற்குள் அரசியல் யாப்புத் திருத்தியமைக்கப்படும். இதன்மூலம் நிறைவேற்று அதிகார ஜனாதிபதி பதவியை நீக்கிவிட்டு, ஜனாதிபதி சந்திரிகா குமார துங்கவுக்கு பிரதமர் பதவியை வழங்குவதற்கு ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி திட்டமிட்டிருந்தது.

ஆனால், எதிர்பார்க்கப்பட்ட காலப்பகுதிக்குள் அந்தத் திட்டத்தை நிறைவேற்ற முடியாது போனமையால், பிரதமர் பதவியை மாற்றுவது குறித்து தீர்மானிக்கப்பட்டுள்ளது. இந்த பதவிமாற்ற முறையில் புதிய பிரதமர் நியமிக்கப்பட்டதன் பின் அரசியல் யாப்பைத் திருத்தி அமைப்பதற்கான நடவடிக்கை முன்னெடுக்கப்படவுள்ளது. (தே)

# சொல்ஹெய்மைச் சந்திக்க ரவூப் ஹக்கீம் மறுப்பு!

(கொழும்பு)

கடந்த வாரம் இலங்கைக்கு விஜயம் செய்த நோர்வேயின் விசேட சமாதானத் தூதுவர் எரிக்சொல்ஹெய்மைச் சந்திப்பதற்கு, சிறிலங்கா முஸ்லிம் காங்கிரசின் தலைவர் ரவூப் ஹக்கீம் மறுப்புத் தெரிவித்தாகத் தெரியவருகிறது.

அரசுக்கும், விடுதலைப் புலிகளுக்கும் இடையில் சமாதானப் பேச்சுக்களை மீளவும் ஆரம்பிப்பது தொடர்பாக ஆராயும் நோக்கில் நான்கு நாள் விஜயமாக எரிக் சொல்ஹெம் கொழும்பு வந்திருந்தார்.

இவரைச் சந்திப்பதற்கு நோர்வே தூதரகம் ரவூப் ஹக்கீமுக்கு அழைப்பு விடுத்தது. ஆனால், இந்த அழைப்பை ரவூப் ஹக்கீம் நிராகரித்துவிட்டார்.

எதிர்வரும் 10ஆம் திகதி நடைபெறவுள்ள மாகாணசபைத் தேர்தல் காரணமாக அதிக வேலைப்பழுவுடன் ஹக்கீம் இருப்பதாலேயே இந்தச் சந்திப்புக்கு அவர் மறுப்புத்தெரிவித்ததாக முஸ்லிம் காங்கிரஸ் வட்டாரங்கள் தெரிவித்தன.

ஆயினும், சமாதானப் பேச்சுக்களில் முஸ்லிம்களைத் தனித்தரப்பாக அங்கீகரிக்க வேண்டும் என்று கோரிவரும் ரவூப் ஹக்கீம், இது தொடர்பாக நோர்வே அக்கறை எடுக்கவில்லை என்று விசனம் வெளியிட்டிருந்தது குறிப்பிடத்தக்கது.

# கரையோரக் காவல் படையை அமைப்பதற்கு திட்டம் தயாரிப்பு

கரையோரக் காவல் படை ஒன்றை அமைப்பதற்கான திட்டத்தை தேசியப் பாதுகாப்புச் சபை தயாரித்துள்ளது.

இலங்கைக்குள் போதைப் பொருட்கள் மற்றும் ஆயுதங்கள் கடத்தப்படுவதைத் தடுத்து நிறுத்துவதற்காகவே கரையோரக் காவற்படையை அமைக்கத் திட்டமிடப் பட்டுள்ளது.

பொதுப் பாதுகாப்பு, சட்டம் மற்றும் ஒழுங்கு அமைச்சின் செயலாளர் திலக் ரணவிராஜா இது குறித்துத் தெரிவிக்கையில் -

இலங்கைக்குக் கரையோரக் காவல் படை ஒன்றை அமைப்பது மிகவம் அவசர தேவையாகும். இது ஒரு தீவு நாடாக இருப்பதால் இப்படைப்பிரிவு அமைக்கப்படுதல் நல்லது. ஆனால் கரையோரக் காவல் படை ஒன்றை அமைக்கும் திட்டத்தை கடற்படையினர் விரும்பவில்லை என்றும் தெரிவித்தார்.

## நாடாளுமன்றில் 20 ஆம் திகதி

# அரசாங்கம் பெரும்பான்மையை நிரூபிக்கும் என்பது கேலிக்குரியது!

### — என்கிறார் ஜயலத் ஜெயவர்த்தனா

எதிர்வரும் 20 ஆம் திகதி நாடாளுமன்றம் கூடும்போது ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி தலைமையிலான அரசின் பெரும்பான்மையை நிரூபிப்போம் என பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ கூறியுள்ளமை நகைப்புக்கிடமானது-

என்று ஐக்கிய தேசியக்கட்சியின் கம்பஹா மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் ஜயலத் ஜெயவர்த்தன 'திவயின' சிங்கள நாளிதழுக்கு வழங்கிய செவ்வியில் தெரிவித்தார்.

அந்தச் செவ்வியில் அவர் மேலும் தெரிவித்ததாவது-

ஐக்கிய தேசியக்கட்சி போர் நிறுத்த ஒப்பந்தத்தில் விடுதலைப் புலிகளுடன் கையொப்பமிட்டு இந்த நாட்டிலிருந்த யுத்தத்திற்கு தீர்வு காண நடவடிக்கை எடுத்து இதன் மூலம் ஐக்கியப்பட்ட இலங்கைக்குள் அரசியல் தீர்வினை வழங்குவதற்கு நாம் நடவடிக்கை எடுத்தோம்.

ஆனால், ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி அரசின் தற்போதைய நடவடிக்கைகளால் இவையனைத்தும் பயனற்றுப் போய் விட்டன. நாம் மிகவும் கடினமாக கட்டியெழுப்பிய சமாதான முயற்சிகளை தற்போதைய அரசு சீர்குலைத்துள்ளது.

தற்போது மீண்டும் உக்கிரமான யுத்தம் ஏற்படுவதற்கான நிலையில் பிரச்சினைகள் ஏற்பட்டுள்ளது. இது மிகவும் வேதனைக்குரிய விடயமாகும்.

சமாதானச் செயற்பாடுகள் நின்று போவது குறித்து இந்த நாட்டு மக்கள் மட்டுமல்ல சர்வதேச சமூகம் கூட விரக்தியடைந்துள்ளது.

இவர்கள் இந்த வர்க்கவாத யுத்தத்தை அன்றிலிருந்து நடாத்தி வருவது அரசியல் இலாபங்களைப் பெற்றுக் கொள்வதற்காகும்.

மீண்டும் அதனை நிறைவேற்றவே அவர்கள் முயற்சி செய்கின்றார்கள். யுத்தத்துடன் விளையாடும் நிலை தற்போது ஏற்பட்டுள்ளதெனவும் அவர் தெரிவித்தார். (தே)

# இவ்வருடம்பல்கலைக்கழகங்களுக்கு ஆயிரம் பேருக்கு மேலதிக அனுமதி

கடந்த மே மாதம் நடைபெற்ற - கல்விப் பொதுத் தராதரப்பத்திர உயர்தரப் பரீட்சைக்குத் தோற்றிய மாணவர்களில் 14 ஆயிரம் பேர் பல்கலைக் கழக அனுமதி பெறவிருப்பதாகப் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு அறிவித்துள்ளது.

கடந்த வருடம் பல்கலைக் கழகத்துக்கு 13 ஆயிரம் மாணவர்கள் அனுமதிக்கப்பட்டனர். இந்த முறை சுமார் ஆயிரம் மாணவர்களை மேலதிகமாகச் சேர்க்க முடிவு செய்யப்பட்டிருக்கிறது.

இதேவேளை கடந்த மே மாதம் நடைபெற்ற க.பொ.த. உயர்தரப் பரீட்சைப் பெறுபேறுகள் அடுத்த மாத முற்பகுதியில் வெளிவரும் என்று பரீட்சைத் திணைக்கள வட்டாரங்கள் தெரிவித்தன.

# உயிரிழந்த விமானப்படையினருக்கு இரத்மலானையில் அஞ்சலி நிகழ்வு

வடக்குக் கிழக்கில் கடந்தகால யுத்தநடவடிக்கையின்போது உயிரிழந்த விமானப்படையினருக்கு அஞ்சலி செலுத்தும் நிகழ்வு நேற்று முன்தினம் இரத்மலானையில் இடம்பெற்றது.

நேற்றுக்காலை இரத்மலானையில் அமைந்துள்ள படையினரின் நினைவுத்தூபிக்கு முன்பாக இந்த நிகழ்வு இடம்பெற்றது.

இந்த நிகழ்வில் விமானப்படைத் தளபதி எயர் மார்ஷல் டொனல் பெரேரா, சிரேஷ்ட விமானப்படை அதிகாரி உட்பட இராணுவ உயரதிகாரிகளும் கலந்து கொண்டனர். உயிரிழந்த விமானப்படையினரின் உறவினர்களும் இந்த நிகழ்வில் கலந்துகொண்டனர்.

## நீருக்கடியில் தாக்குதல் நடத்தும்

# ஸ்கூட்டர்களைப் பயன்படுத்தி கடற்புலிகள் அணி பயிற்சியாம்

### — சிங்களப் பத்திரிகை கூறுகின்றது

கடலுக்கு அடியில் சென்று - கடற்படைத் துறைமுகங்கள் மற்றும் கப்பல்களைத் தாக்கக் கூடிய வாட்டர் ஸ்கூட்டர்களைப் பயன்படுத்தும் தொழில் நுட்பத்தில் கடற்புலிகள் பயிற்சிகளைப் பெற்றிருப்பதைக் கடற்படை உறுதிப் படுத்தியிருப்பதாக - சிங்களப்பத்திரிகை ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது.

இது தொடர்பாக இந்தப் பத்திரிகை மேலும் தெரிவித்திருப்பதாவது-

வாகரைப் பொன்னன்கேணிப் பிரதேசத்தில் கடற்புலிகள் இப்போதும் வாட்டர் ஸ்கூட்டர்களைப் பயன்படுத்தி பயிற்சிகளை மேற்கொண்டு வருகின்றனர்.

நீர்ப்பெருக்கு, வற்று ஆகிய வற்றை ஊடறுத்துக் கொண்டு - 3 நொட்ஸ்வேகத்தில் இந்த ஸ்கூட்டரில்சென்று நீருக்கு அடியிலான தாக்குதல்களைத் தொடுக்க முடியும்.

புலிகள் இந்த ஸ்கூட்டர்களைப் பயன்படுத்தி பயிற்சி பெற்று வருவதையிட்டு - இது குறித்து அவதானமாக இருக்கும்படி அனைத்து கடற்படைத் தளபதிகள் மற்றும் கடற்படைத்தளங்களின் கட்டளை அதிகாரிகளுக்கும் புலனாய்வுத் துறையினரால் எச்சரிக்கை அறிக்கை அனுப்பி வைக்கப்பட்டது.

டென்மார்க்கிலிருந்து கொள்வனவு செய்யப்பட்ட இந்த வாட்டர் ஸ்கூட்டர்களை புலிகள் சமாதானப் பேச்சுக்களுக்காக வெளிநாடு சென்று திரும்பும் போது இலங்கைக்குக் கொண்டுவந்ததாகவும் இந்தப் பத்திரிகை மேலும் செய்தி வெளியிட்டுள்ளது. (தே)

# கஷ்டப்பிரதேச ஆசிரியர்களுக்கு ஊக்குவிப்புக் கொடுப்பனவு!

கஷ்டப்பிரதேசங்களில் கடமையாற்றும் ஆசிரியர்களுக்கு விசேட ஊக்குவிப்புக் கொடுப்பனவை வழங்குவதற்கு முடிவு செய்யப்பட்டுள்ளது.

2000 ரூபாவுக்கும் 2500 ரூபாவுக்கும் இடையிலான கொடுப்பனவு இவர்களுக்கு வழங்கப்பட வேண்டுமென்று மாகாண ஆளுநர்கள் இணக்கம் தெரிவித்துள்ளனர்.

பெந்தோட்டையில் நேற்றுமுன்தினம் ஆரம்பமான அளுநர்களின் மாநாட்டி லேயே இந்தத் தீர்மானம் எடுக்கப்பட்டது.

# பேச்சுவார்த்தையை மீள ஆரம்பிக்க அரசாங்கம் முயற்சி செய்யவில்லை

### — ரவிராஜ் எம்.பி. குற்றச்சாட்டு

(கொழும்பு)

சமாதான செயற்பாடுகள் குறித்து எமக்கு எவ்வித நம்பிக்கையும் இல்லை. பேச்சுவார்த்தையை ஆரம்பிப்பதற்கு அரசாங்கம் முயற்சி செய்யாத காரணத்தால் சமாதான பேச்சுவார்த்தையை அண்மித்துக் கொள்வது இயலாமல் உள்ளது. இதற்கு விடுதலைப் புலிகளை காரணமாகக் கூற முடியாது.

இவ்வாறு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினரான என்.ரவிராஜ், 'லங்காதீப' பத்திரிகைக்கு வழங்கிய செவ்வியில் தெரிவித்தார். அந்தச் செவ்வியில் அவர் மேலும் தெரிவித்ததாவது-

சமாதான செயற்பாடுகளுக்கு எதிராக அரசாங்கத்திலுள்ள சில பிரிவுகளைச் சேர்ந்தோர் வெளிப்படையாகவே கருத்துக்களை வெளியிடுகின்றனர். தற்போதைய அரசு சமாதானப் பேச்சுவார்த்தையை முன்னெடுப்பதாகக் கூறிக்கொண்டே அதிகாரத்திற்கு வந்தது. ஆனால், இது வரை அந்த வாக்குறுதியை மீறிய அரசாங்கம் தனது அதிகாரத்தைப் பாதுகாக்க முயற்சி செய்து கொண்டிருக்கிறது.

சமாதானப் பேச்சுவாத்தைகள் தொடர்பாக விடுதலைப் புலிகள் எப்பொழுதும் அர்ப்பணிப்புடன் செயற்பட்டு வருகின்றார்கள். இடைக்கால நிர்வாகசபைத் திட்டத்தை சமர்ப்பித்த அவர்கள் அதனடிப்படையில் பேச்சுவார்த்தையை நடத்துவோம் என்று கூறுகிறார்கள்.

விடுதலைப் புலிகளுடன் பேச்சுவார்த்தை நடத்தத் தயார் எனக் கூறிக்கொண்டு, அந்த அமைப்பிலிருந்து நீக்கப்பட்ட கருணாவைப் பாதுகாக்கும் நடவடிக்கையில் அரசு ஈடுபட்டுள்ளது.

கருணாவுடனான தொடர்புகளை அரசாங்கம் நீக்கிக் கொள்ளும் வரை இராணுவத்துடன் எந்தவொரு பேச்சுக்கும் வரமாட்டோமென விடுதலைப் புலிகள் தெளிவாகவே கூறியுள்ளனர். விடுதலைப் புலிகளின் இந்தத் தீர்மானத்திற்கு எமது முழுமையான ஆதரவினை நாம் வழங்குவோம்.

சமாதான செயற்பாடுகளுக்கு மீளவும் உயிர் கொடுப்பதெனில் கருணாவுடனான தொடர்பை அரசாங்கம் கைவிட வேண்டுமெனவும் அவர் தெரிவித்தார். (தே)

# சட்டவிரோத ஆயுதங்களை கையளிக்க அரசாங்கம் ஒரு மாத கால அவகாசம்

சட்டவிரோத ஆயுதங்களை வைத்திருப்போர் அவற்றைக் கையளிப்பதற்காக ஒரு மாதகால கால அவகாசம் வழங்கப்படவுள்ளதாக அரசாங்கம் அறிவித்துள்ளது.

இதன்படி, எதிர்வரும் ஓகஸ்ட் மாதம் முதலாம் திகதியிலிருந்து செப்ரெம்பர் மாதம் இறுதி வரையுள்ள காலப்பகுதியில் சட்டவிரோத ஆயுதங்களை வைத்திருப்போர் அவற்றை அண்மையிலுள்ள பொலிஸ் நிலையங்களில் ஒப்படைக்கலாம் என பொதுமக்கள் பாதுகாப்பு மற்றும் சட்ட ஒழங்கு அமைச்சு அறிவித்துள்ளது.

இந்த மன்னிப்புக் காலம் முடிவடைந்ததும் பொலிசார் இலங்கையின் சகல பகுதிகளிலும் தேடுதல் நடவடிக்கைகளை மேற்கொள்ளவுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டது.

இதேவேளை, இலங்கையில் 30 ஆயிரம் சட்டவிரோத ஆயுதங்கள் தற்சமயம் பாவனையில் இருப்பதாகத் தெரிவித்த மக்கள் பாதுகாப்பு மற்றும் சட்ட ஒழுங்கு அமைச்சின் செயலாளர் திலக் ரணவிராஜா, இதன் காரணமாகவே குற்றச் செயல்கள் அதிகரித்து வருவதாகவும் கூறினார்.

### தேரர் தாக்கப்பட்டதற்கு சாட்சியங்கள் இல்லை

நாடாளுமன்றத்தில் கடந்த 8ஆம் திகதி ஏற்பட்ட குழப்பத்தின் போது ஜாதிகஹெல உறுமயவைச் சேர்ந்த நாடாளுமன்ற உறுப்பினர் கொலன்னாவ சிறி சுமங்கள தேரர் தாக்கப்பட்டதற்கு சரியான சாட்சியங்கள் இல்லாமையால் வழக்கைத் தொடர முடியாத நிலை ஏற்பட்டுள்ளதாக சொலிசிட்டர் ஜெனரல் சி.ஆர்.டி. சில்வா தெரிவித்தார்.

தன்னைத் தாக்கியவர் யார் என்பதை வெளிப்படுத்த சுமங்கள தேரர் மறுத்துள்ளார். இந்த நிலையில் சம்பவம் தொடர்பாக சரியான சாட்சி கிடைக்கவில்லை எனப் பொலிஸார் கைவிரித்துவிட்டனர்.

## விம்பிள்டன் ரெனிஸ்

# மகளிர் ஒற்றையர் பிரிவின் சம்பியனானார் ஷரபோவா!




விம்பிள்டன் ரெனிஸ் மகளிர் ஒற்றையர் பிரிவு சம்பியன் பட்டத்தை ரஷ்யாவைச் சேர்ந்த 17 ஆவது வயது வீராங்கனையான மரியா ஷரபோவா கைப்பற்றினார். ரஷ்யாவைச் சேர்ந்த வீராங்கனை ஒருவர் விம்பிள்டன் பட்டத்தை வெல்வது இதுவே முதன் முறையாகும்.

விம்பிள்டன் ரெனிஸ் மகளிர் ஒற்றையர் பிரிவு இறுதிப் போட்டியில் அமெரிக்காவின் செரீனா வில்லியம்ஸும், ரஷ்யாவின் மரியா ஷரபோவாவும் மோதினர். இந்தப் போட்டியில் ஷரபோவா 6-1, 6-4 என்ற நேர் செட் கணக்கில் நடப்புச் சம்பியனாகக் களம் இறங்கிய செரீனா வில்லியம்ஸை வீழ்த்தி சம்பியன் பட்டத்தை வென்றார்.

விம்பிள்டன் பட்டம் வென்ற முதல் ரஷ்ய வீராங்கனை என்ற பெருமையை ஷரபோவா பெற்றார். இது மட்டுமன்றி கிராண்ட்ஸ்லாம் பட்டத்தை வென்ற ரஷ்யாவைச் சோந்த 2 ஆவது வீராங்கனை என்ற பெயரையும் இந்த வெற்றி மூலம் ஷரபோவா பெற்றார்.

ஓபன் ரெனிஸ் போட்டிகளில் குறைந்த வயதில் சம்பியன் பட்டம் வென்ற இரண்டாவது வீராங்கனை என்ற பெருமையும் ஷரபோவாவிற்கு இந்த வெற்றிமூலம் கிடைத்தது.

1997 இல் சுவிட்சர்லாந்தைச் சேர்ந்த மார்டினா ஹிங்கிஸ் 16 வயதாக இருந்தபோது, மகளிர் ஒற்றையர் பிரிவில் சம்பியன் பட்டம் வென்றிருந்தார்.

கிராண்ட்ஸ்லாம் போட்டிகளில் தனது முதலாவது இறுதிப் போட்டியில் விளையாடிய ஷரபோவாவின் விளையாட்டிற்கு செரீனாவால் ஈடுகொடுக்கமுடியவில்லை. முதல் செட்டில் செரீனாவின் பந்துகளை எளிதாக தடை செய்து 3-1 என்ற நிலையில் முன்னிலை பெற்றார். இதன்பிறகு தொடர்ந்து 6-1 என்ற நிலையில் முதல்செட்டை ஷரபோவா எளிதாக கைப்பற்றி வென்றார்.

தொடர்ச்சியாக 3 ஆவது முறையாக விம்பிள்டன் பட்டத்தை நோக்கி இந்தப் போட்டியில் விளையாடிய 22 வயதான செரீனா வில்லியம்ஸ், 17 வயதான ஷரபோவாவின் அதிரடி ஷொட்களுக்கு ஈடுகொடுக்க முடியாமல் திணறிப் போனார்.

முதல் ஷெட்டில் விளையாடியது போலவே 2 ஆவது ஷெட்டையும் அபாரமாக ஆரம்பித்தார் ஷரபோவா. முதல் ஷெட்டை ஷரபோவா கைப்பற்றியதால், நிலைகுலைந்து போயிருந்த செரீனா - 2 ஆவது ஷெட்டின்போது, ஷரபோவா அடித்த ஷொட் செரீனாவின் மூக்கைத் தாக்க அவர் மேலும் அதிர்ந்து போனார்.

இருப்பினும் சுதாகரித்து விளையாடிய செரீனா, ஷரபோவாவின் பந்தை தடை செய்து 4-2 என்ற நிலையை ஏற்படுத்தினார். ஆனால், அடுத்து செரீனா வீசிய பந்தை தடைசெய்து ஷரபோவா அசத்தினார். 2 ஆவது ஷெட்டில் தொடர்ந்து சிறப்பாக விளையாடி ஷரபோவா வென்றார்.

செரீனாவை நேர் ஷெட்களில் வீழ்த்திய மகிழ்ச்சியில் மைதானத்தில் முழங்காலிட்டு, இந்த வெற்றியை தன்னால் நம்ப முடியவில்லை என்பதுபோல ஆச்சரியத்தை வெளிப்படுத்தினார் ஷரபோவா.

1998 ஆம் ஆண்டிற்குப் பின்னர் அமெரிக்காவைச் சேராத ஒருவர் விம்பிள்டன் மகளிர் பட்டத்தை வெல்வது இதுவே முதன்முறையாகும்.

## இங்கிலாந்தில் நடைபெறும் நட்வெஸ்ட் தொடர்

# மேற்கிந்திய தீவுகள் அணியை வெற்றிகொண்டது நியூஸிலாந்து!

இங்கிலாந்தில் நடைபெற்றுவரும் நட்வெஸ்ட் கிண்ணத்துக்கான முத்தரப்பு ஒருநாள் கிரிக்கெட் போட்டித் தொடரில் - நேற்றுமுன்தினம் சோபியா கார்டனில் நடைபெற்ற ஆட்டமொன்றில் ஐந்து விக்கெட்டுக்களால் நியூஸிலாந்து அணி வெற்றிபெற்றது.

நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்ற நியு,ஸிலாந்து அணி களத்தடுப்பில் ஈடுபடத் தீர்மானித்தது.

இதனால், முதலில் துடுப்பெடுத்தாடத் தொடங்கிய மேற்கிந்தியத் தீவுகள் அணியின் ஆரம்பத் துடுப்பாட்ட வீரர்கள் வேகமாக ஓட்டங்களைக் குவித்தனர்.

கைல் நிதானமாக ஓட்டங்களை எடுத்துக் கொண்டிருந்தபோது - அதிரடியாக ஓட்டங்களைக் குவித்தார் அணித்தலைவர் பிறையன்



லாரா. சிக்ஸர் பவுண்டரிகளாக ஓட்டங்களைக் குவித்த லாரா - அணி 83 ஓட்டங்களைப் பெற்றிருந்தபோது ஆட்டமிழந்தார். இவர் 58 பந்துகளில் 9 பவுண்டரி, 1 சிக்ஸருடன் 58 ஓட்டங்களைக் குவித்தார்.

இதன்பின்னர் - களம்இறங்கிய வீரர்கள் நிதானமாக ஓட்டங்களைப்பெற ஆரம்பித்த போதும் எதிர்முனை வீரர்களால் அதிக நேரம் நின்று பிடிக்க முடியவில்லை. இதனால், மேற்கிந்தியத் தீவுகள் அணி ஒவ்வொன்றாக விக்கெட்டுக்களை இழக்கத்தொடங்கியது.

46.2 ஓவர்களிலேயே மேற்கிந்தியத் தீவுகள் அணி 216 ஓட்டங்களைப் பெற்றிருந்த நிலையில் சகல விக்கெட்டுக்களையும் இழந்தது.

சர்வான் - 54, கைலி - 27, சந்தர்போல்- 21 ஓட்டங்களைப் பெற்றனர்.

நியூஸிலாந்து அணி வீரர்கள் கெயின்ஸ் மற்றும் டட்லர் ஆகியோர் தலா 3 விக்கெட்டுக்களையும், பிராங்ளின், ஸ்ரானில் ஆகியோர் தலா ஒவ்வொரு விக்கெட்டுக்களையும் வீழ்த்தினர்.

இதனையடுத்து பதிலுக்குத் துடுப்பெடுத்தாட ஆரம்பித்த நியூஸிலாந்து அணி வீரர்கள் நிதானமாக ஓட்டங்களைப் பெறுவதிலேயே குறியாக இருந்தனர். இவர்கள் பவுண்டரிகளை விளாசாமல், தனித்தனி ஓட்டங்களைப் பெறுவதில் ஆர்வமாக இருந்தனர்.

இதன்மூலம் 46 ஆவது ஓவர் நிறைவிலேயே நியூஸிலாந்து அணி 5 விக்கெட் இழப்புக்கு 220 ஓட்டங்களைப் பெற்று வெற்றியைப்பெற்றது.

இதில் பிளமிங் - 45, அனிலே - 19, மக்மிலன் - 22, மார்ஷன் ஆட்டமிழக்காமல் 75 ஓட்டங்களைப் பெற்றனர்.

இந்த ஆட்டத்தில் மேற்கிந்தியப் பந்துவீச்சாளர்களால் மொத்தம் 35 உதிரி ஓட்டங்கள் கொடுக்கப்பட்டன.

பிளாவே 3 விக்கெட்டுக்களையும், லோசன் 2 விக்கெட்டுக்களையும் வீழ்த்தினர்.

## கே.சி.சி.சி இறுதி ஆட்டத்திற்கு

# பற்றீசியன் - பல்கலைக்கழக அணிகள் தெரிவாகின

கொக்குவில் மத்திய சனசமூகநிலைய விளையாட்டுக்கழகம் நடத்திய கே.சி.சி.சி கிண்ணத்துக்கான கிரிக்கெட் சுற்றுப் போட்டியின் அரையிறுதி ஆட்டங்களில் பற்றீசியன் விளையாட்டுக்கழக அணி மற்றும் பல்கலைக் கழக அணி என்பன வெற்றிபெற்று இறுதி ஆட்டத்திற்குத் தகுதிபெற்றன.

கடந்த வெள்ளிக்கிழமை காலை இடம் பெற்ற போட்டியில் யங்ஸ்ரார் விளையாட்டுக் கழக அணியை எதிர்த்துப் பற்றீசியன் விளையாட்டுக்கழகம் மோதியது.

முதலில் துடுப்பெடுத்தாடிய பற்றீசியன் விளையாட்டுக்கழகம் 27 ஓவர்களில் 7 விக்கெட்டுக்களை இழந்து 166 ஓட்டங்களைப் பெற்றது.

துடுப்பாட்டத்தில் நயனாஸ் ஆட்டமிழக்காமல் 52 ஓட்டங்களையும், ராகவன் 30 ஓட்டங்களையும் பெற்றுக்கொடுத்தனர். யங்ஸ்ரார் விளையாட்டுக்கழகத்தின் சார்பில் பந்துவீசிய ரஜித் 3 விக்கெட்டுக்களை கைப்பற்றி னார்.

பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய யங்ஸ்ரார் விளையாட்டுக்கழக அணி 17.4 ஓவர்களில் சகல விக்கெட்டுக்களையும் இழந்து 96 ஓட்டங்களைப் பெற்றது.

துடுப்பாட்டத்தில் துசியந்தன் 16, தினேஸ் 16 ஓட்டங்களைப் பெற்றனர். பற்றீசியன் விளையாட்டுக்கழகம் சார்பில் பந்து வீசிய லொயிட் 4, முகுந்தன் 3, சுரேஸ் 2 விக்கெட்டுக்களைக் கைப்பற்றினர்.

இதையடுத்து மாலை நடைபெற்ற அரையிறுதி ஆட்டத்தில் கே.சி.சி.சி விளையாட்டுக் கழகத்தை எதிர்த்து விளையாடிய பல்கலைக் கழக அணி வெற்றிபெற்றது.

முதலில் துடுப்பெடுத்தாடிய பல்கலைக் கழக அணி 26.4 ஓவர்களில் சகல விக்கெட்டுக்களையும் இழந்து 206 ஓட்டங்களைப் பெற்றது.

துடுப்பாட்டத்தில் தனேஸ்காந் 37, கௌரிபாகன் 37, ஜதார்த்தன் 27 ஓட்டங்களையும் பெற்றனர்.

கே.சி.சி.சி. கழகம் சார்பில் பந்து வீசிய நா.பிரதீபன் 5, துசியந்தன் 2, தீபன் 2, விக்கெட்டுக்களையும் கைப்பற்றினர்.

பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய கே.சி.சி.சி கழகம் 27 ஓவர்களில் 9 விக்கெட்டுக்களை இழந்து 173 ஓட்டங்களைப் பெற்றது.

துடுப்பாட்டத்தில் சி.மதுசன் 70, இ.தீபன் 28 ஓட்டங்களைப் பெற்றனர். பல்கலைக்கழக அணி சார்பில் பந்துவீசிய ஜதார்த்தன், கௌரிபாகன், றொபேசன் ஆகியோர் தலா 2 விக்கெட்டுக்களைக் கைப்பற்றினர்.

## விம்பிள்டன் இறுதிப் போட்டி: ரோஜர் பெடரர் தகுதி!

விம்பிள்டன் ரெனிஸ் ஆடவர் ஒற்றையர் பிரிவில் சுவிட்சர்லாந்து வீரர் ரோஜர் பெடரர், பிரான்ஸ் வீரர் செபஸ்ரியன் குரோஸ்ஜியனை வீழ்த்தி இறுதிப் போட்டிக்குத் தகுதிபெற்றார்.

அரையிறுதியில் பெடரர் 6-2, 6-3, 7-6, (8-6) என்ற செட் கணக்கில் வென்றார். கடந்த வெள்கிக்கிழமை இந்த அரையிறுதிப் போட்டி ஆரம்பமாகியது. மழையின் காரணமாக போட்டி தடைப்படும் போது, 3 ஆவது ஷெட்டில் 4-3 என்ற நிலையில் பெடரர் முன்னிலை பெற்றிருந்தார்.

இந்த நிலையில் போட்டி நேற்றுமுன்தினம் தொடர்ந்து நடைபெற்றது. இந்த ஆட்டம் மீண்டும் ஆரம்பமாகிய 29 நிமிடங்களில் பெடரர் வெற்றிபெற்றார்.

இந்தப் போட்டிக்குப் பின்னர் பேட்டியளித்த பெரடர் கூறுகையில், 3 ஆவது ஷெட்டில் முன னிலையில் இருந்தபோது, மழையால் ஆட்டம் தடைப்பட்டது என்பது மிகவும் கஷ்டமான விடயமாகும்.

ஆனால், இந்தப் போட்டியில் வெற்றிபெற்றது நிம்மதியைக் கொடுத்துள்ளது என்று கூறினார்.

குரோஸ்ஜியனுக்கு எதிரான அரையிறுதிப் போட்டியில் தனது அதிரடி ஷொட்களால், குரோஸ்ஜியனை அதிரவைத்தார் பெடரர். பிரான்ஸ் வீரர் குரோஸ்ஜியனின் ஷொட்களையும் பெடரர் அற்புதமாக எதிர்கொண்டு விளையாடியதும் குறிப்பிடத்தக்கது.



## கரும்புலிகள் நினைவு உதைபந்தாட்டம் பல்கலைக்ழக அணி மூன்றாம் இடம்

கரும்புலிகள் நினைவு தினத்தை முன்னிட்டு வல்வை விளையாட்டுக்கழகம் நடாத்திவரும் மின்னொளியிலான உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டியில் 3 ஆம் இடத்திற்கான ஆட்டத்தில் யாழ்.பல்கலைக்கழக அணியும், பாடுமீன் விளையாட்டுக்கழகமும் மோதின.

ஆட்டம் தொடங்கப்பட்ட 5 ஆவது நிமிடத்திலேயே பல்கலைக்கழக அணியினர் முதல் கோலை அடித்து தமது வெற்றியைத் தீர்மானிக்கத் தொடங்கினர். இந்தக் கோலை தேவானந் அடித்தார். அதன் பின்னர் 20 ஆவது நிமிடத்தில் பல்கலைக்கழக அணித் தலைவர் திலீபன் தட்டிக் கொடுத்த பந்தை காண்டீபன் அடித்துக் கோலாக்கிக் கொண்டார்.

இடைவேளைக்கு முன்னர் பாடுமீன் விளையாட்டுக்கழகம் எந்தக் கோலையும் போடாததால் 2:0 என்ற கோல் கணக்கில் பல்கலைக் கழக அணி முன்னிலையில் இருந்தது.

இடைவேளை முடிந்து ஆட்டம் தொடங்கப் பட்ட போது 8 ஆவது நிமிடத்தில் பல்கலைக் கழக அணியினர் கிடைத்த கோல்வாய்ப்பை சரியான முறையில் பயன்படுத்தி மேலும் ஒரு கோலைப் பெற்றனர். இந்தக் கோல்வாய்ப்பை காண்டீபன் அடிக்க திலீபன் தலையால் இடித்துக் கோலடித்தார்.

ஆட்டமுடிவில் பல்கலைக்கழக அணி பாடுமீன் விளையாட்டுக்கழகத்தை 3:0 என்ற கோல் கணக்கில் தோற்கடித்தது. (12)

## கரும்புலிகள் நினைவு உதைபந்தாட்டம் பல்கலைக்கழக அணி மூன்றாம் இடம்

கரும்புலிகள் நினைவு தினத்தை முன்னிட்டு வல்வை விளையாட்டுக்கழகம் நடாத்திவரும் மின்னொளியிலான உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டியில் 3 ஆம் இடத்திற்கான ஆட்டத்தில் யாழ்.பல்கலைக்கழக அணியும், பாடுமீன் விளையாட்டுக்கழகமும் மோதின.

ஆட்டம் தொடங்கப்பட்ட 5 ஆவது நிமிடத்திலேயே பல்கலைக்கழக அணியினர் முதல் கோலை அடித்து தமது வெற்றியைத் தீர்மானிக்கத் தொடங்கினர். இந்தக் கோலை தேவானந் அடித்தார். அதன் பின்னர் 20 ஆவது நிமிடத்தில் பல்கலைக்கழக அணித் தலைவர் திலீபன் தட்டிக் கொடுத்த பந்தை காண்டீபன் அடித்துக் கோலாக்கிக் கொண்டார்.

இடைவேளைக்கு முன்னர் பாடுமீன் விளையாட்டுக்கழகம் எந்தக் கோலையும் போடாததால் 2:0 என்ற கோல் கணக்கில் பல்கலைக் கழக அணி முன்னிலையில் இருந்தது.

இடைவேளை முடிந்து ஆட்டம் தொடங்கப் பட்ட போது 8 ஆவது நிமிடத்தில் பல்கலைக் கழக அணியினர் கிடைத்த கோல்வாய்ப்பை சரியான முறையில் பயன்படுத்தி மேலும் ஒரு கோலைப் பெற்றனர். இந்தக் கோல்வாய்ப்பை காண்டீபன் அடிக்க திலீபன் தலையால் இடித்துக் கோலடித்தார்.

ஆட்டமுடிவில் பல்கலைக்கழக அணி பாடுமீன் விளையாட்டுக்கழகத்தை 3:0 என்ற கோல் கணக்கில் தோற்கடித்தது. (12)

பொதுசன நூலகம் யாழ்ப்பாணம்

# தீவுப்பகுதி கடற்பரப்பில் அத்துமீறும் தென்னிலங்கை இழுவைப்படகுகள்

(நெடுந்தீவு)

தீவுப்பகுதி கடற்பரப்பிலே நீர்கொழும்பைச் சேர்ந்த மீனவர்களின இழுவைப்படகுகள் கடந்த சில நாட்களாக மீன்பிடியில் ஈடுபட்டதைக் காணக்கூடியதாகவுள்ளது.

கடந்த புதன்கிழமை தொடக்கம் இவ்வாறு நீர்கொழும்புப் பகுதியைச் சேர்ந்த இழுவைப் படகுகள், நயினாதவுக்கும், குறிகாட்டுவானுக்கும் இடையில் நங்கூரமிட்டுத்தரித்துநின்றதுடன் அதிலிருந்த தென்னிலங்கை மீனவர்கள் - நாகவிகாரை, நாகபூஷணி அம்மன் ஆலயம் என்பவற்றுக்கும் சென்றுவந்ததாகத் தெரியவருகிறது.

இதேவேளை, இவ்வாறு நீர்கொழும்புப் பகுதியைச் சேர்ந்த இழுவைப்படகுகள் பருத்தித்துறைக் கடற்பரப்பிலும் மீன்பிடித் தொழிலில் ஈடுபட்டுவருகின்றமையும் குறிப்பிடத்தக்கதாகும்.

தற்போதுதான் தடைகள் நீங்கி குடாநாட்டு மீனவர்கள் கடறதொழிலில் ஈடுபட்டுவரும்வேளையில், இவ்வாறு பாரிய இழுவைப் படகுகள்மூலம் தென்னிலங்கையைச் சேர்ந்தவர்கள் மீன்பிடிப்பது குறித்து மீனவர்கள் கவலை தெரிவித்தனர். (113)

# வலிகாமம் மேற்குப் பகுதியில் உள்ளூராட்சி வார ஏற்பாடுகள்

வலி.மேற்கு பிரதேச சபை, எதிர்வரும் உள்ளூராட்சி வாரத்தை முன்னிட்டு தமது எல்லைப் பகுதிகளில் சிரமதானம், மரம் நடுதல், விளையாட்டுப் போட்டிகள், சுகாதாரம் சம்பந்தமான விழிப்புணர்வுக் கருத்தரங்குகள் ஆகிய செயற்பாடுகளை மேற்கொள்வதற்கு நடவடிக்கைகள் எடுத்துவருகின்றது.

இந்த மாதம் 12 ஆம் திகதி முதல் 18 ஆம் திகதி வரையிலான காலப்பகுதியை இந்த வருடம் உள்ளூராட்சி வாரமாக அனுஷ்டிக்கும்படி திருகோணமலையிலுள்ள மாகாண உள்ளூராட்சித் திணைக்களம் சுற்றுநிருபம் ஒன்றைச் சகல உள்ளூராட்சி மன்றங்களுக்கும் அனுப்பியுள்ளது.

இதற்கமைய, வலிகாமம் - மேற்கு பிரதேசசபைப் பிரிவில் உள்ளூராட்சி வாரத்தினை சிறப்பாக அனுஷ்டிப்பதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப் பட்டுவருவதாக பிரதேசசபை வட்டாரங்கள் தெரிவித்தன. (100)

# இன்று ஆயர்தினம் அனுஷ்டிக்க ஏற்பாடு

இன்று ஆயர் தினம் கொண்டாடப்படவுள்ளது. இதனைமுன்னிட்டு இன்று காலை யாழ்.மரியன்னை பேராலயத்தில், யாழ்.ஆயர் தோமஸ் சவுந்தரநாயகம் தலைமையில் திருப்பலி ஒப்புக் கொடுக்கப்படவுள்ளது.

இந்த நிகழ்வில் - கத்தோலிக்க ஆசிரியர்கள், மாணவர்கள், பொது மக்களைக் கலந்துகொள்ளுமாறு கேட்கப்பட்டுள்ளதுடன், ஆயரை வரவேற்கும் பவனியில் கலந்துகொள்ளும் முகமாக ஒவ்வொரு பாடசாலையிலிருந்தும் மாணவத் தலைவர்கள் இருவர் அல்லது பிரதிநிதிகளைப் பாடசாலைக்கொடியுடன் வந்து கலந்துசிறப்பிக்குமாறு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது. (100)

# மருதங்கேணி கிராமிய வைத்தியசாலை விரைவில் திறக்கப்படவுள்ளது!

(வடமராட்சி)

மருதங்கேணி கிராமிய வைத்தியசாலையின் கட்டட வேலைகள் பூர்த்தியாக்கப்பட்டுள்ளது. இவ்வைத்தியசாலை மிகவிரைவில் திறந்துவைக்கப்படவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இந்த வைததியசாலை எதிர்வரும 24 ஆம் திகதி சுகாதாரத் திணைக்களத்திடம் கையளிக்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

கடந்தகால யுத்த அனர்த்தங்களால் முற்றாகச் சேதமடைந்த நிலையில் இந்த வைத்தியசாலை இயங்க முடியாத நிலையில் இருந்துவந்தமை என்பது குறிப்பிடத்தக்கது. (17)

# தமிழீழ விளையாட்டு வீரர்கள் — சர்வதேச போட்டிகளிலும் வெற்றி வீரர்களாகத் திகழ்வர்

(யாழ்ப்பாணம்)

தமிழீழத்தின் விளையாட்டு வீரர்கள் ஒரு காலத்தில் சர்வதேச போட்டிகளிலும் பங்குபற்றி அங்கும் வெற்றி வீரர்களாகத் திகழ்வார்கள் எனத் தமிழீழ விளையாட்டுத் துறைப் பொறுப்பாளர் பாப்பா தெரிவித்தார்.

நேற்றுமுன்தினம் யாழ். துரையப்பா விளையாட்டரங்கில் ஆரம்பமாகிய தமிழீழ இளையோர் தேசிய தடகள விளையாட்டு விழாவில் கலந்துகொண்டு ஆசியுரை வழங்கு கையிலேயே அவர் இவ்வாறு கூறினார்.

தொடர்ந்து உரையாற்றிய அவர் -

எமது தேசியத் தலைவர் தமிழீழத்தின் ஒவ்வொரு துறைகளையும் சிறப்பாக வளர்த்தெடுக்கவேண்டும் என்கின்ற விருப்பிலேயே செயற்பட்டு வருகின்றார்.

எமது போராட்ட வரலாற்றிலே மாபெரும் பங்காற்றிய கரும்புலிகளது ஊர்திகள் இன்று குடாநாடு முழுவதும் பவனிவருகின்றன. எமது வாழ்வு வளம்பெறவும், ஒவ்

**விளையாட்டுத்துறைப் பொறுப்பாளர் பாப்பா**

வொரு தமிழனதும் நிம்மதிக்காகவும் தங்களையே வெடிகுண்டுகளாக்கி தமது உயிர்களை எமது இனத்திற்காக ஆகுதியாக்கிய கரும்புலிகளை மனதில் நிறுத்தி எமது இனம், எமது தேசியம் என்கின்ற பற்றுடன் தமிழ் வீரர்கள் சாதனை படைக்கவேண்டும் என்பதே எமது தலைவரின் பெருவிருப்பாகும். இங்கு ஏற்றிவைக்கப்பட்டுள்ள புலிக்கொடியானது நமது மண்ணிற்காக ஆகுதியான எம் மாவீரர்களது கனவுகளாலும், இரத்தத்தினாலும் ஏற்றிவைக்கப்பட்டுள்ளது.

வடக்கு - கிழக்கு என்பது எமது பூர்வீகநிலம். எமது நிலத்தில் இருந்து என்றோ ஒரு நாள் ஒரு வீரன் சர்வதேசத்தில சாதனை படைபபான் என்பதை இந்த விளையாட்டுப்பிரிவு உணர்த்தி நிற்கின்றது. என்றோ ஒரு நாள் அதை நாம் சந்திப்போம் என்றார்.

# சின்னஞ்சிறு செய்திகள்

## நூல் வெளியீட்டு விழா

(வடமராட்சி)

கோப்பாய் சிவம் எழுதிய 'இது தான் இந்துமதம்', 'அருள் வழங்கும் மாரியம்மன்' என்னும் இரு நூல்களும் எதிர்வரும் 9 ஆம் திகதி வெள்ளிக்கிழமை காலை 10 மணிக்கு தொண்டமானாறு சந்நிதி ஆச்சிரம மண்டபத்தில் வெளியிடப்படவுள்ளது.

கலாநிதி மா.வேதநாயகம் தலைமையில் நடைபெறவுள்ள இந்த விழாவில், வெளியீட்டுரையை சிவ. மகாலிங்கமும், அறிமுகவுரையை சிவத்திரு வ.குமாரசாமிஐயரும், ஆய்வுரையை ச.லலிசன் ஆசிரியரும் நிகழ்த்தவுள்ளனர். (17)

## புலோலி பாடசாலைக்கு மாடிக்கட்டடம்

புலோலி தம்பசிட்டி மெதடிஸ்த தமிழ் கலவன் பாடசாலையில் ஜி.ரி. இசற் நிறுவனத்தின் உதவியுடன் 5 இலட்சம் ரூபா செலவில் மாடிக் கட்டடம் ஒன்று அமைக்கப்பட்டுவருகிறது. அத்துடன் 60 மாணவர்களும், 10 ஆசிரியர்களும் இருந்து கற்க, கற்பிக்க வசதியாக இரண்டு இலட்சம் ரூபா செலவில் 70 கதிரைகளும், மேசைகளும் வழங்கப்பட்டுள்ளன.

இக்கட்டட வேலைகள் பூர்த்தியாக்கப்பட்டால் பாடசாலையின் கட்டடப்பற்றாக்குறை முற்றாக நீங்குமென தெரிவிக்கப்படுகிறது. (17)

## வீதி திருத்தப்பட்டுள்ளது

யாழ்.மாநகரசபைக்கு உட்பட்ட நாவலர் வீதி பலகாலமாகத் திருத்தப்படாது ஆங்காங்கே குன்றும் குழியுமாக இருந்த வீதி, யாழ்.மாநகரசபை திட்டமிடல் பகுதியினரால் துரிதமாகத் திருத்தப்பட்டது.

பிறவுண வீதி - யாழ்கஸ்தூரியார் வீதிச்சந்திவரையான இடத்திலும், மனோகராச் சந்தி தொடக்கம் மானிப்பாய் வீதி வரையான இடத்திலும் இந்தவீதி படுமோசமான நிலையில் சேமதமடைந்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (100)

## வீதி புனரமைப்புக்கு நிதிஒதுக்கீடு

(ஆழியவளை)

வடமராட்சி கிழக்கு போக்கறுப்பு - நித்தியவெட்டை வீதியை புனரமைப்பதற்கு உள்ளூராட்சி திணைக்களத்தின் விசேட திட்டத்தின்கீழ் 7 இலட்சம் ரூபா நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

வடமராட்சி கிழக்கின் எல்லைப்புற வீதிகள் செப்பனிடப்படாமையால் மீளக்குடியேறிய மக்கள் மிகவும் கஷ்டங்களை எதிர்நோக்கிவருகின்றமை குறிப்பிடத்தக்கது. (122)



இலங்கை திருவுளச் சபையின் 45 ஆவது ஆண்டுவிழாவில் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்ட மன்னார் ஆயர் இராயப்பு யோசெப்பு வரவேற்கப்படுவதைப் படத்தில் காணலாம். (206)

# வன்னி தொழில்நுட்பக் கல்லூரியை அங்கீகரிக்கப்பட்ட நிறுவனமாக மாற்றுக

## தொழில்நுட்ப அமைச்சின் செயலாளரிடம் கோரிக்கை

(யாழ்ப்பாணம்)

மாணவர்களுக்கு தொழில்நுட்பக் கல்வி தொடர்பான தேவைகள் பற்றியும், கிளிநொச்சி தொழில்நுட்பக் கல்லூரியை அங்கீகரிக்கப்பட்ட ஒரு தொழில்நுட்ப நிறுவனமாக மாற்ற நடவடிக்கை எடுக்க வேண்டும் எனவும், கிளிநொச்சியில் அமையவுள்ள யாழ்.பல்கலைக்கழகத்தின் பொறியியல் பீடத்தை நிறுவுவதற்கான நடவடிக்கைகளைத் துரிதப்படுத்துமாறும் - திறன் அபிவிருத்தி வாழ்க்கைத் தொழில் மற்றும் தொழில்நுட்பக் கல்வி அமைச்சின் செயலாளர் தயந்த விஜயசேகரவிடம், தமிழீழ மாணவர் பேரவையினர் வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

நேற்றுமுன்தினம் யாழ்.பல்கலைக்கழகத்தில் நடைபெற்ற பேராசிரியர் துரைராஜா ஞாபகார்த்த நிகழ்வில் கலந்துகொள்வதற்காக வந்த மொரட்டுவ பல்கலைக்கழக துணைவேந்தர் பேராசிரியர் தயந்த எஸ்.விஜயசேகர - சர்வதேச தமிழீழ மாணவர் பேரவைக்குச் சென்று தொழில்நுட்பக் கல்வி தொடர்பாக கலந்துரையாடியபோதே மேற்படி வேண்டுகோள் விடுக்கப்பட்டது.

இந்தக் கலந்துரையாடலில் நாடாளுமன்ற உறுப்பினர் எஸ். கஜேந்திரன், மாணவர் பேரவைத் தலைவர் பகீர்தரன், மாணவர் ஒன்றியத் தலைவர் செல்வகுமார் மற்றும் தொழில்நுட்பக் கல்லூரி அதிபர் யோகராஜன் ஆகியோர் கலந்துகொண்டனர்.

இந்தக் கலந்துரையாடலின் போது - தற்போது சமாதானச் சூழல் இருக்கின்றபோதும் மக்கள் எதிர்நோக்குகின்ற பிரச்சினைகள், இடம்பெயர்ந்த மக்களின் பிரச்சினைகள் மற்றும் இராணுவமும், இராணுவ புலனாய்வுத்துறையினரும் திட்டமிட்டு மேற்கொள்ளும் கலாசாரப் பண்பாட்டுச் சீரழிவு நடவடிக்கைகள் பற்றியும் தெளிவாக எடுத்துக்கூறப்பட்டது.

# முட்கம்பி வேலிகளால் போக்குவரத்து சிரமம்!

(நெடுந்தீவு)

யாழ் - பண்ணைப் பாலத்திலிருந்து மண்டைதீவுச்சந்தி வரைக்குமான பிரதான வீதியின் இருமருங்கிலும் முட்கம்பி வேலிகள் கடற்படையினரால் அமைக்கப்பட்டுள்ளதால், அநத வீதியூடாகப் பயணிக்கும வாகனங்களும், பயணிகளும் பெரும் சிரமங்களை எதிர்கொண்டு வருகின்றனர்.

கடற்பகுதியின் இடையிலே உள்ள இக்குறுகிய வீதியின் இருமருங்கிலும் நெருக்கமாக முட்கம்பி வேலிகள் கடந்த யுத்தகாலத்தில் அமைக்கப்பட்டபோதும், அவை தற்போதைய சமாதான சூழலிலும் பலப்படுத்தப்பட்டுவருகின்றது.

இதேவேளை, இந்த வீதியில் செல்லும் வாகனங்கள் பாதையில் விலத்துவதற்காக அமைக்கப்பட்டுள்ள வளைவுகளில் பெரும்பாலானவற்றில் கடற்படையினரின் காவலரண்கள் அமைக்கப்பட்டுள்ளதுடன், அந்த வளைவுகளை மூடிமுட்கம்பிவேலிகளும் அமைக்கப்பட்டுள்ளது. இதனால் அந்த வீதியூடாக பயணிக்கும் வாகனங்கள் விலத்திச் செல்வதற்கு பெரும் சிரமங்களை எதிர்கொண்டுவருவதுடன், விபத்துக்கள் ஏற்பட்டு வருவதாகத் தெரிகின்றது. (113)

# செப்பு ஆணிகள் இன்மையால் குமுதினி படகு திருத்தம் தாமதம்!

(நெடுந்தீவு)

நெடுந்தீவு - குறிகாட்டுவான் இடையிலான போக்குவரத்து சேவையில் ஈடுபட்டுவந்த குமுதினிப் படகின் திருத்தவேலைகள் செப்பு ஆணிகள் இன்மையால் தாமதமாகி வருவதாக வீதி அபிவிருத்தி அதிகாரசபை வட்டாரங்கள் தெரிவித்தன.

இலங்கையில் செப்பு ஆணி இல்லாமையினாலும், தேவையான ஆணிகளை உள்ளூரிலேயே தரமானதாக தயாரிகக இயலாமையினாலும், இந்தியாவிலிருந்து இந்த ஆணியினை பெறுவதற்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

செப்பு ஆணி விரைவில் கிடைக்கும் பட்சத்தில் ஒரு வாரத்தில் படகுச்சேவை இடம்பெறும் வகையில் ஏனைய ஒழுங்குகள், வேலைகள் என்பன நிறைவுசெய்யப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (113)

## நியாப் உதவித் திட்டத்தின்கீழ் கிராமங்களில் அபிவிருத்திப்பணி

(யாழ்ப்பாணம்)

யாழ். குடாநாட்டில் நியாப் திட்டத்தின் கீழ் துரித அபிவிருத்தித் திட்டம் ஒன்று நடைமுறைப்படுத்தப் படவுள்ளது. இதற்காக 2 கோடியே 90 இலட்சத்து 40 ஆயிரம் ரூபா ஒதுக்கப்பட்டுள்ளது.

கடந்தகால யுத்த அனர்த்தங்களால் பாதிக்கப்பட்ட பின்தங்கிய கிராமங்களை அபிவிருத்தி செய்யும் நோக்குடனேயே இந்தத் திட்டம் நடைமுறைப்படுத்தப்படவுள்ளது.

இதன்கீழ் வலிகாமம், வடமராட்சி, தென்மராட்சி ஆகிய பிரதேசங்களில் கால்நடை, விவசாயம், கைத்தொழில் அபிவிருத்திகளை மையமாகக் கொண்டு அபிவிருத்தித் திட்டங்கள் நடைமுறைப்படுத்தப்படவுள்ளது. (17)




# விடை பெறுதல்

சிறுகதை



சி.கதிர்காமநாதன்.



அமைதியான, ஆனந்தமான நிலை, மனதுக்கு இதமாக உள்ளது. மெல்லிய காற்று உடலை வருடுகின்றது. பிரகாசமான வெளிச்சத்தில். நீண்ட பயணம் தெரிகின்றது. கண்களை மூடியிருந்த நிலையிலும் அப்படியொரு பிரகாசம் எல்லா உணர்வுகளும் மெல்ல மெல்ல குறைந்து...

அலுங்காமல், குலுங்காமல், உடலை மனதை வருத்தாமல் 'பயணம்' தொடங்கி விட்டதை நான் உணர்கின்றேன. எனது உயிர் நகர்ந்து கொணடிருக்கிறது. நான் முன்பு ஒரு போதும் கண்டிராத பரவச நிலை என்னைச் சுற்றிலும் உருவங்கள் தெரிகின்றன. அனைத்தும் ஆடியும் அசைந்தும்... காதில் விழும் பேச்சுக்கள்.

கண்களை மெதுவாகத் திறக்கின்றேன். விழிகளை அங்கும் இங்கும் அசைத்தும் மனதை ஒருமுகப்படுத்தி என்னைச் சுற்றியுள்ள உருவங்களை உற்றுப் பார்க்கிறேன். வெளிச்சம் அதிகரிக்கிறது. உருவங்கள் தெரிகின்றன.

எல்லோரும் நிற்கின்றார்கள்.

என் பிள்ளைகள் எல்லோரும் நிற்கின்றார்கள்.நான் பொறுமையாக நிதானமாக ஒவ்வொருத்தராயப் பார்க்கிறேன.

பதினைந்து வருடங்கள் கனடாவிலிருந்த மூத்தவன் சுப்பிரமணியம் மனைவி, பேரப்பிள்ளைகளோடு. இரண்டாவது மகன் சுவிஸ் போய் பத்து வருடங்கள் தனியாக நிற்கின்றான். மனைவி பிள்ளைகளைக் காணவில்லை. மூன்றாவது மகள் ஜேர்மனி போய் 5 வருடங்கள் கையில் பெண் குழந்தை யும் வயிற்றில் சுமையாக, மருமகன் கூட வரவில்லையா?

நான்காவது மகன் பிரான்ஸ் போய் நான்கு வருடங்கள் அவன பக்கத்தில் சிவப்பு நிறத் தோலுடன் அந்த நாட்டுப் பெண் அவன் பக்கத்தில் குண்டாய் ஒரு பெண்.

எல்லோரும் நிற்கிறார்கள். என் மனைவி, என் கடைசி மகள் மனது துடிக்கிறது. எங்கே காணவில்லை. காலடியில் விசும்பல் சத்தம் கேட்கிறது. தலையைச் சற்று நிமிர்த்திப் பார்க்கின்றேன். அங்கே மனைவி தலைவிரி கோலமாய் முகம் ஒடுங்கி அடையாளம் மாறியிருந்தாள். இவளை எப்படி சாந்தப்படுத்துவது. மகளைக் காணாதது மனதை எண்ணவோ செய்கின்றது. நிச்சயம் அவளுக்கு தகவல் போயிருக்கும் நிச்சயம் துடித்துக் கொண்டுதான் இருப்பாள், தனக்குப் பிடித்தவனோடு ஒடிப்போனவள்.

அவளை நான் பார்க்க வேண்டும்.

நானும் அவளது நடத்தையினால் குதியோ குதியென்று குதித்தனான்தான். இப்பொழுது நான் அவளை ஏற்கவேண்டும்.

நான் வாஞ்சையுடன் அவர்களை பார்க்கிறேன்.

எல்லோரும் சோகமாய் நிற்கிறார்கள். கண்களில் சோர்வு, கீழே கருவளையும், முகம் காய்ந்து தலைமயிர் வாரப்படாமல் அழுது புலம்பி.....

எதற்கு வருத்தப்படுகின்றார்கள். இந்த அப்பாவை நினைத்து, பெற்று வளர்த்து, படிக்க வைதது, கலியாணம் முடித்து எங்களை நல்ல நிலைக்கு ஆளாக்கிய அப்பாவை நினைத்து கலங்கி நிற்கிறார்களா?

விம்மி அழுது, பொருமி நிற்கின்றார்கள். இங்கே காலடியில் மனைவி அழுது புலம்பத் தொடங்கிவிட்டாள்.

'ஐயோ என்னை விட்டிட்டுப் போயிடாதேங்கோ தனிய நான் இருக்கமாட்டன்.

எனக்கு கஷ்டமாக உள்ளது. நான் இது வரை காலமும் என் கடமையைத்தான் செய்தேன். இவர்களுக்கு எப்படி விளங்க வைப்பது. அப்பா எங்களை விட்டு நிரந்தரமாயப் பிரிந்து இறந்து விடப் போகின்றார். ஒரு இறப்போடு அவர் எங்களிடமிருந்து பிரியாவிடை பெற்று விடுவார்.

இந்த பாசமான அப்பாவை இனிமேல் பார்க்க முடியாது பேச முடியாது உறவாட முடியாது.

இதுவா இவர்களின் வருத்தம்?

நான் மரணிக்கப் போவதை இவர்களால் ஏற்றுக்கொள்ள முடியாமல் உள்ளது.

என் வாழ்க்கை முழுவதும் இறக்காமல் கொள்ளாமல் நான் இவர்களோடு இருந்து விட முடியுமா?

பைத்தியக்காரப் பிள்ளைகள்.

எனக்கு நேரம் வந்துவிட்டது. என் பணிகள் முடிவடைந்துவிட்டன. நான் கடமைகளை நிறைவேற்றிவிட்டேன் எழுபது வயது வரை வாழ்ந்துவிட்டேன் வாழ்க்கையில் இழப்பு, பிரிவு, துன்பம், சந்தோசம், ஏமாற்றம், பொறாமை, கோபம் என எல்லாவற்றையும் அனுபவித்துவிட்டேன்.

நான் மரணத்தை மனப்பூர்வமாக ஏற்கத் தயாராகி விட்டேன்.

பிள்ளைகள் கதைக்கின்றார்கள.

'அம்மா, அப்பா நல்லாத்தானே இருந்தவர் அண்டைக்கு போனில் வடிவாய் கதைச்சவர்'

'யாருக்கு தெரியும் காலேல தேத்தண்ணி குடுக்க போனனான்... பேசசு மூச்சின்றி கிடக்கிறார். நான் இடிஞ்சு போனன்...

இங்க எல்லா டொக்ரரிட்டையும் காட்டி ஏலாம கடைசியில பெரியாஸ்பத்திரிக்கு கொண்டு போய் ஒரு மாதம் வாட்டில இருந்தவர். பிறகு துண்டு வெட்டி வீட்டை போகச் சொல்லிப் போட்டாங்கள்.

எல்லாரையும் வெறிச்சுப் பார்க்கின்றார். வேற ஒன்றும் செய்யிறாரில்லை.

எத்தனை நாளைக்கு இப்படியே பார்த்துக் கொண்டு இருக்கிறது. கொழும்புக்கு கொண்டு போய் காட்டி பார்ப்போமே?

அபிப்பிராயங்கள் சந்தேகங்கள் ஆராய்ச்சிகள். எனக்கு வாய்திறந்து கத்த வேண்டும் போல் இருக்கின்றது.

'ஐயோ என்ர குஞ்சுகள் என்னை இப்படியே நிம்மதியாய் இருக்க விடுங்கோ. என்னைத் தொந்தரவு செய்யாதீர்கள். கஷ்டப்படுத்தாதீர்கள். இந்த இனிய பயணத்தைக் கெடுத்து விடாதீர்கள்.

நான் சந்தோசமாக இருக்கின்றேன. பழைய ஞாபகங்கள் எல்லாம் நினைவுக்கு வருகின்றன. மருதனார்மடத்தில் தேத்தண்ணி கடை வைத்திருந்த துரையர்(நுன்னாரி வேர் போட்டு அவித்த தேநீர் எப்படி இருக்கும்) சந்தையில் மாம்பழத் தரகு செய்த சாமியர், வாழைப்பழம் விற்கும் முத்தையா (இவரது சுவிஸ் போய் விட்டதாகக் கேள்விப்பட்டேன்.)

அதிகாலையிலே கொழும்பு ரயில் வந்த கையோடு சிந்தாமணி, தினகரன், வீரகேசரி, தந்து விட்டு பறக்கும் பேப்பர்க்கடை கிருஸ்ணசாமி, அந்தரம் ஆபத்துக்கு காரை வாடகைக்கு ஓடும் அப்பையா, தலையை இடப்பக்கமாக சாய்ந்து அதே பக்கத் தோளில் கோடாலியை சாய்த்துக் கொண்டு போகும்,விறகு கொத்தும் கணபதிப்பிள்ளை, வெற்றிலை வாய்க்குள் குதப்பியபடி வெற்றிலை கேட்டால் வாடா மருமகனே என கன்னத்தை கிள்ளியபடி தரும் செல்லம்மாக் கிழவி, நாதன், கௌரி, உதயன், பாபு, ராசேந்திரன் என என்னோடு பள்ளியில் படித்த நண்பர்கள் இதில் நாதனோடு "கௌரி" விசயத்தில் ஏற்பட்ட பிரச்சினையில் இன்று வரை கதைப்பதில்லை. கடைசியில் கௌரியும் வேறு இடத்தில் கலியாணம், முடிக்க நாதன் இப்போது குடித்துக்கொண்டு திரிகின்றான். பாவம் அவள் நெருங்கிய உறவினனும் கூட.

பள்ளியில் உயிரியல் பாடம் படிப்பித்த கட்டை சிவராசா, கணித பாடம் படிப்பிக்க பொம்மை போல நடந்து வரும் விவேகானந்தா ரீச்சர், சிரியாமல் கொள்ளாமல் தமிழ் பாடம் படிப்பித்து எங்களால் முனி என சிறப்புப்பட்டம் பெற்ற செல்வராணி ரீச்சர் எல்லாரும் வந்து போகினறார்கள் கண்முன் தெரிகின்றார்கள் இதில் பலபேர் என்னை வரவேற்க காத்துக் கொண்டு இருப்பார்கள்.

என் பயணத்தில் ஒரு தடங்கல்.

என் வாய் திறக்கப்பட்டு, குளிசைகள் உள்ளே திணிககப்பட்டு தண்ணீர் ஊற்றி வருகினறனர். எனக்கு தொண்டை அடைபடுகின்றது. மூச்சு திணறுகின்றது. தண்ணீர் குளிசைகளை தள்ளிக் கொண்டு போகின்றது. கசப்பும் எரிச்சலும் வருகின்றது.

என் நிம்மதியைக் குலைத்தபடி இழுக்கின்றனர். நான் மேலும் உயிர் வாழ பிரயத்தனம் செய்கின்றனர்.

எனக்கு இரவு பகல் தெரியவில்லை. வேகம் மெல்ல மெல்ல அதிகரிக்கின்றது. உடல் ஆட்டம் காண்கின்றது நெஞ்சுபடபடக்கின்றது. மூச்சு வாங்குகின்றது. ஒரு விதமான இரைச்சல் வெளி வருகின்றது.

எல்லோரும் அவதிப்படுகின்றார்கள். வெளியே ஓடுகின்றார்கள். அமளி, கூக்குரல்கள் டொக்டர் விரைந்து வருகின்றார். என் குடும்ப நண்பர் என்னை சோதித்து கண்களை அகல விரிக்கின்றார்.

மௌனமாக என்னை விட்டு விலகி மனைவி பிள்ளைகளிடம் ரகசியமாக ஏதோ சொல்லுகின்றார். எனக்கு தெரியாமல் இருப்பதற்காகவா?

'சொல்ல வேண்டிய ஆக்களுக்கு சொல்லிப் போடுங்கோ'

பெருத்த அவல ஓலம் அறையை அடைக்கின்றது.

இன்னும் யார் யாருக்கு சொல்ல வேண்டி இருக்கின்றது.?

"தம்பி தங்கைச்சிக்கு சொல்ல வேணும், அப்பா அவளில் சரியான பாசமாய் இருந்தவர் கடைசி நேரத்தில அவர் நிம்மதியாய் போகவேணும் அதோட, அப்பான்ர சிநேகிதன் நாதனுக்கும் சொல்லி விடுங்கோ- சரியில்லை"

மனைவி விம்முகிறாள்.

"அம்மா, அப்பான்ரை நண்பர்கள் எல்லோருக்கும் தகவல் சொல்லி ஆச்சு தங்கச்சிக்கும் நாதனுக்கும் சொல்ல வேண்டாம், அவள் நாங்கள் வேண்டாம் என்று தானே விட்டிட்டுப் போனவள், இங்க வரக்கூடாது. நாதன் அங்க குடிச்சுப்போட்டு திரியிறார். அப்பாவுக்கு அவரை அப்ப இருந்தே ஆகாது. ஏன் இப்ப சும்மா இழுப்பான் பேசாமல் இருங்கோ"

எனது பிள்ளைகளின் முடிவு எனக்கு வேதனையை தருகின்றது.

நாதனோடு இன்றுவரை நான் கதையாமல் இருந்தது உண்மை தான். அவனோடு ஏற்பட்ட பிரச்சினையில் நானும் சில தவறு விட்டதை இப்போது உணர்கிறேன். அது பற்றி அவனுடன் கதைக்க வேண்டும். இருவரும் நண்பர்களாக பிரிய வேண்டும்.

என் கடைசி மகள் செல்லமாக வளர்ந்தவள் அந்த வளர்ப்புத்தான் அவளை அந்த முடிவு எடுக்கத் தூண்டியது. இப்போது மகளை பார்க்கவேண்டும் கறுப்பாக இருந்தாலும் அப்படியொரு அழகு.

என் மகளை பார்க்க வேண்டும்

பிள்ளைகளே அப்பாவின் உணர்வை புரிந்து கொள்ளமாட்டீர்களா?

அவர்கள் தங்களுக்குள் வாக்குவாதப்படுகின்றார்கள். பட்டியல் போடுகின்றார்கள். யாருக்குச் சொல்லுவது, யாருக்கு சொல்லாமல் விடுவது.

நான் சோர்ந்து போகின்றேன். அடுத்து இடத்தை மாற்ற தீர்மானிக்கின்றார்கள்.

ஐயோ, ஐயோ நெஞ்சு பாதிக்கின்றது. இடத்தை மாற்றப் போகின்றார்களா?

இவர்களுக்கு என்ன பிடித்து விட்டது? இந்த இடம் என் உயிரோடு, மூச்சோடு, உணர்வோடு கலந்தது. எனது வாழ்க்கை இங்கே எப்படிப் பின்னிப் பிணைந்து உள்ளது.

இந்த நான்கு சுவர்கள், கட்டில், மேசை, புத்தகங்கள், பேப்பர்கள், சுவரில் தொங்கும்படங்கள், பாரதியார், விவேகானந்தர், அப்பா, அம்மா சேர்ந்தெடுத்த பெரிய படம், சிரித்துக் கொண்டு இருக்கும் அந்த மழலையின் முகம், திறந்த யன்னலுக்கு வெளியே தெரியும் தென்னை மரங்களும், மத்தியில் எழும்பி படர்ந்து நிற்கும் வேப்பமரம், அதில் மதியம் வந்தமர்ந்து போகும் இரண்டு காக்கைகள் சதா காதில் ஒலித்துக்கொண்டிருக்கும் பழைய மணிக்கூடு.

மேசைக்கு பக்கத்தில் இருக்கும் வாங்கில் அமர்ந்து என் இலக்கிய நண்பர்களோடு அமர்ந்து எத்தனை அரட்டைகள், விமர்சனங்கள், எத்தனை கதைகளுக்கு "கருக்கள்" இந்த இடத்தில் தானே உருவாகியிருந்தன.

இந்த இடத்திலிருந்து என்னை அப்புறப்படுத்தப் போகிறார்களா?

பிள்ளைகள் இடமாற்றத்திற்கான வேலையில் ஈடுபடத் தொடங்கி விட்டார்கள்.

இனியும் நான் தாமதிக்கக் கூடாது. அதோ தூரத்தில் பறை மேளத்தின் சத்தம் காதில் கேட்கிறது அந்த ஓசை எனக்கு ஆனந்தத்தை கொடுக்கின்றது. அதனது சீரான, பிசிறில்லாத அதோடு வேகமான ஓசை எனக்கு மயக்கத்தை உண்டுபண்ணுகின்றது.

"டாங்கு டாங்கு டாங்கு டுக்குடு. டாங்கு டாங்கு டாங்கு டுக்குடு."

வேகம் அதிகரிக்கின்றது.

உடல் பாரம் குறைந்து வருகின்றது.

பிள்ளைகள், மனைவி, நண்பர்கள், உறவினர்கள் இப்போது ஒருவரும் அருகிலில்லை.

நான்மட்டும் அநாதையாக, வேகம் வேகம் வேகம்.

டாங்கு டாங்கு டாங்கு டுக்குடு சத்தம் மிக நெருங்கி வருகின்றது. ஆகா, வானில் பறப்பது போன்ற உணர்வு, போதும் இறைவா, போதும் எனக்கு விடைகொடு உன் இடம் வந்துவிடுகிறேன்.

பறை மேளச்சத்தம் காதருகே

(-யாவும் சிந்தனை)

பொதுசன நூலகம்
யாழ்ப்பாணம்

# நூல் அகம்

நூலின் பெயர் : வீதியெல்லாம் தோரணங்கள்
எழுதியவர் : தாமரைச்செல்வி
வெளியீடு : மீரா பதிப்பகம்
விலை : 150/=




கடந்த இரு தசாப்தங்களாக போரின் பிடிக்குள் சிக்கிய எங்கள் மண்ணிலிருந்து எழுகின்ற எந்தவொரு படைப்பிலும் போரின் தாக்கம் இல்லாமல் இருந்து விடமுடியாது. அந்த அளவிற்குப் போர் இந்த மண்ணில் ஏற்படுத்திய தாக்கங்கள் ஏராளம். அதிலும் குறிப்பிட்ட ஒரு காலப்பகுதியில் இந்திய அமைதிப் படையால் இங்கு ஏற்பட்ட அழிவுகள் யாராலும் மறந்துவிடமுடியாதவை. அன்றைய நாட்களில் நிகழ்ந்த சம்பவங்களை எழுத்தாளர் தாமரைச்செல்வி, 'வீதியெல்லாம் தோரணங்கள்...' மூலம் வெளிச்சத்துக்கு கொண்டு வருகின்றார்.

தாமரைச்செல்வி நாடறிந்த எழுத்தாளர். ஏற்கனவே 'சுமைகள்', 'விண்ணில் அல்ல விடிவெள்ளி' என்ற நாவல்கள் மூலமும் பிற சிறுகதைத் தொகுப்புக்களாலும் நன்கு அறியப்பட்டவர். இப்போது இவரது இன்னொரு நாவலான 'வீதயெல்லாம் தோரணங்கள்' நூலுருப்பெற்றிருக்கின்றது. யாழ் இலக்கிய வட்டமும், வீரகேசரியும் இணைந்து நடாத்திய போட்டியில் பரிசு பெற்ற இந்நாவல் ஏற்கனவே தொண்ணூற்று இரண்டாம் ஆண்டில் வீரகேசரியில் தொடர்ந்து பிரசுரமாகியது. இப்போது நூலாக நம் கைகளில் தவழ்கிறது.

போர் நடக்கும் சூழலில் குடும்பங்கள் பிரிந்து வாழ்ந்து கொண்டிருக்க, அவர்களைப் பிரிந்து உழைப்பின் நிமித்தம் தலைநகரில் வாழும் மாந்தர்களையும், அவர்கள் படும் வேதனைகளையும் நாவலில் தரிசிக்க முடிகிறது. ஒரு புறம் குடும்பத்தைப் பிரிந்த துன்பமும், இயந்திரத்தனமான வாழ்வும், இன்னொருபுறம் ஒவ்வொரு பொழுதும், யுத்தம் வெடிக்கும் போதும் ஊரில் என்ன நடந்திருக்குமோ......? என்னும் பயம் என்பனவாய் விரக்தியூட்டும் வாழ்வும் வடக்கில் வாழ்கின்ற ஒவ்வொருவரும் இந்த வேதனையை நிஜத்தில் சந்திக்காமலிருந்ததில்லை.

இந்த நாவலின் மையப்பாத்திரம் தெய்வேந்திரன், கொழும்பில் வேலை செய்துகொண்டு தனக்காகப் பேசி முடிக்கப்பட்ட பெண் பாரதியோடு தான் வாழப் போகும் வாழ்வை ஆவலோடு எதிர்பார்த்துக் கொண்டிருப்பவன். சிறு வயதிலேயே கணவனையிழந்து கரடுமுரடாக மாறிப்போன தாய்க்காக சீதனம் வாங்குவதற்கு ஒத்துழைத்தாலும், அதற்காக உள்ளுக்குள் குறுகிக் கொண்டிருப்பவன். பாரதி சராசரி யாழ்ப்பாணத்துப் பெண்ணாக அறிமுகமாகின்றாள். அண்ணனை அழைத்துவரத் தனியே கொழும்புக்கு வந்துவிட்டாலும், திருமணம் முடிக்கப் போகிறவனுடன் எட்டியே நிற்கிறாள். உள்ளுக்குள் ஆசை இருந்தாலும் எண்ணி எண்ணிப் பேசுகின்ற பேச்சு, அவளை சமூகக்கட்டுக்குள் அடங்கிய பெண்ணாக அடையாளப்படுத்துகிறது.

ராஜேந்திரன் குடும்பத்தைப் பிரிந்து கொழும்பில் வாழும் இன்னொரு பாத்திரம். அன்பான மனைவியையும், ஒரு வயதுக் குழந்தையையும் ஊரில் விட்டு விட்டு உழைக்க வந்திருக்கும் ஆற்றாமை அவன் ஒவ்வொரு செயலிலும் வெளிப்படுகிறது. அறைக்கு வருகின்ற ஒவ்வொரு தடவையும் மனைவியின் கடிதங்கள் பற்றி ஆவலாய் விசாரிக்கும் அவன் போன்றோரின் வாழ்வு, கடிதங்களூடுதானே நிறைவுகாண்கிறது. அவன் மட்டுமன்றி சாப்பாட்டுக்கடை முதலாளி, கடையில் நிற்கும் ஆனந்தன் போன்றோரும் ஊர் பற்றி விசாரிக்கையில் அவர்களது கவலை எல்லோர் மனதிலும் தொற்றிக் கொள்கிறது.

செந்திற்தரன், யாழ்ப்பாணத்துத் தந்தையரின் பிரதிநிதி, வீட்டிலுள்ள பெண்பிள்ளைகளைக் கரைசேர்க்கவென்று, ஓய்வுபெற்ற பின்னரும் தனியார் நிறுவனத்தில் வேலை செய்பவர். தானாகவே சமைத்துத் தன் வாழ்வை ஓட்டக்கூடியவர். அடிக்கடி காண்பவர்களிடம் அரசியல் பேசுவது போலவே தன் மகளுக்கு வரன்பார்க்கவும் சொல்கிறவர்.

'எங்கையாவது உங்களுக்குத் தெரிஞ்ச முப்பத்தஞ்சு, நாற்பது வயதுக் கிடையில ஆள் இருந்தா சொல்லுங்கோ......' என்ற அடிக்கடி அவர் சொல்கின்ற வார்த்தைகள் மனதைப் பிசைகின்றன. யாழ்ப்பாணத்தில் இன்று பெரும்பிரச்சினையாகிவிட்ட முதிர்கன்னியர் பிரச்சினையை மிக அனாயாசமாகத் தொட்டுச் செல்கிறார் தாமரைச்செல்வி.

ஸ்ரீதரன் மிகமிக இனிமையாகப் படைக்கப்பட்ட பாத்திரம், இடைப்பட்ட சில அத்தியாயங்களில் வந்துபோவது தெரியாமல் மிக இலேசாக தெய்வேந்திரன் மனதில் மட்டுமன்றி, வாசகர் உள்ளங்களிலும் இடம் பிடித்துவிட்ட ஸ்ரீதரன், கடைசியில் கண்ணீரைத் தந்துவிட்டு மறைந்து விடுகின்றான். யுத்தம் இப்படித்தான், நாம் நேசிப்பவர்களையும், நம் மனதுக்குப் பிடித்தவர்களையும் இரக்கமின்றிப் பறித்துக் கொண்டுபோய் விடுகிறது.

'இது ஸ்ரீதரனின் கலியாணத்திற்குக் கட்டப்பட்ட தோரணங்களா? சாவுக்குக் கட்டப்பட்ட தோரணங்களா.....?' என்ற தெய்வேந்திரன் மனதில் எழுகின்ற கேள்வி, வாசகர் மனங்களையும் நெருடலாய் அசைக்கிறது. இப்படி நிஜத்தில் எத்தனை மங்கலங்கள், அமங்கலங்கள் ஆகியிருக்கின்றன இந்த மண்ணில்.

ஒரு மரணத்தின் பின்கூட இளகாதவளாய் மகனின் சீதனத்தின் மூலம் திருப்திப்படுபவளாய், தெய்வேந்திரனது தாயின் பாத்திரம் அமைந்துள்ளது.

'சொன்னபடி இனி அவையால சீதனம் தரேலாது. அதால விடவேண்டி வந்திட்டுது.....'

என்ன இலகுவாய்ச் சொல்கிறாள் அவள். யாழ்ப்பாணத்தில் ஆண்பிள்ளைகளைப் பெற்ற எல்லாத்தாய்களையும் ஒட்டுமொத்த வடிவமாய்ப் படைக்கப்பட்டுள்ளது அந்தத்தாயின் பாத்திரம்.

இல்லாவிட்டால் 'அந்தப்பக்கம் விடுவிடாய் போய் ஒரே செக்கிங், என்னென்ன நடந்ததோ ஆர்கண்டது.....'

என்று தானும் ஒரு பெண் என்பதை மறந்து சொல்ல முடியுமா அவளால்.....?

கடைசியில், குற்ற உணர்வோடு குறுகுறுத்துக் கொண்டிருந்த தெய்வேந்திரனின் உறுதியான முடிவு, மனதுக்கு ஆறுதலளிக்கிறது.

ஸ்ரீதரனின் இறப்போடு ஒரு துயர இழையைப் பின்னி விட்ட கதாசிரியை தெய்வேந்திரனின் முடிவோடு வாசகர்களுக்குத் தெம்பூட்டுகிறார்.

கதை முழுக்க போரின் அவலம் பரவி நின்றாலும், எமது சமுகத்தில் பரந்திருக்கும் சீதனப் பிரச்சினையையும் தாமரைச்செல்வி சுட்டிக் காட்டுகின்றார். அத்துடன், சமுகத்துக்கிடையில் இருக்கும் நெருக்கங்கள், விலகல்கள் என்பவற்றையும் கதைப் பின்னணியில் இலகுவாக நகர்த்திச் செல்கின்றார். உரையாடல்களுக்கிடையே அருகிக்கொண்டு போகும் நல்ல பழமொழிகளும் காணக்கிடைக்கின்றன.

இந்தப் போர்ச் சூழலில், ஒரு கருவைத் தேர்ந்தெடுத்து, அதை நன்கு மெருகூட்டி, மனதில் நிற்கும் பாத்திரங்களோடு இயைபாக்கி ஒரு காலத்துக் துயரவாழ்வை நாவலாகப் படைத்துள்ளார் தாமரைச்செல்வி.

- தாட்சாயணி.

# இலக்கிய முத்து

## தற்குறிப்பேற்றம்

செய்யுளை அலங்கரிக்க கவிஞன் கையாளும் உத்தியே அணியாகும். ஒரு செய்யுள் வாசகனது உள்ளதைக் கொள்ளை கொள்ளவேண்டும் என்பதற்காக அமைக்கப்படுகின்ற அணியானது அதற்கும் அப்பால் கவிஞனது அனுபவத்தையும் அறிவின் ஆழத்தையும் காட்டிநிற்கின்றது.

பழந்தமிழ்ப் பனுவல் ஆகிய தொல்காப்பியம் முதல் சங்க இலக்கியங்கள் ஊடாக மகாகவி பாரதி வரையில் அணிக்கு முக்கியத்துவம் அளிக்கப் பட்டுள்ளது.

அணி என்பது சொல்லணி, பொருள் அணி என பெரும் பிரிவாக இருபாற்படும். பொருள் அணி என்பதே பலராலும் நயத்தற்பாற்பட்டது. பொருள் அணி, உவமை, உருவகம், தற்குறிப்பேற்றம் எனப் பலதரப்படும்.

ஒரு கவிஞனின் சிறப்பினையும், ஆழத்தையும் உணர்ந்துகொள்ள அவன் கையாளும் அணி ஒன்றே போதுமானது. அன்றாடம் நூற்றுக்கணக்கான பொருட்களை நாம் காண்கின்றோம். ஆனால், இப்பொருட்களிடையே காணப்படும் ஒப்புமை நமக்குப் புரிவதில்லை. சிறந்த கவிஞன் - தொடர்பற்ற பொருற்களிடை கூட ஒப்புமை காண்கின்றான். நம்மையும் காணச்செய்கின்றான்.

இவ்வகையில் தற்குறிப்பேற்ற அணி என்பது தனது குறிப்பை ஏற்றிக் கூறிதல் என்பதாகும். அதாவது ஒரு கவிஞன் தனது உள்ளத்திற் தோன்றும் எண்ணத்தை இயற்கையின் மிகவும் பொருத்தமான ஒரு நிகழ்வின் மீது ஏற்றிக்கூறுதல் ஆகும்.

மறு வகையிற் கூறின் இயற்கையில் இயல்பாக இடம்பெறும் ஒரு நிகழ்விற்கு கவிஞன் தனது எண்ணக்கருவை நயம்படப் பொருத்தமாகக் கூறுதலே தற்குறிப்பேற்றம் ஆகும்.

தேர் செல்லும் போது எழுகின்ற புழுதியினை பெண்களது கூந்தலில் இருந்து வடிகின்ற தேனானது அடக்குகின்ற வளம் பெற்ற நாடாகிய நிடத நாட்டு மன்னன் நளன் - கலியின் சூழ்ச்சியால் நாடு, நகர், செல்வம் எல்லாம் இழந்து தன் காதல் மனைவி தமயந்தியோடு கானகம் செல்கின்றான். அங்கே நடுக்காட்டிலே நள்ளிரவில் தமயந்தியை நித்திரையில் விட்டுப் பிரிகின்றான். கண்விழித்த தமயந்தி கணவனைக் காணாது தவிக்கின்றாள். பொழுது புலரப்போகின்றது சேவல்கள் கூவுகின்றன.

இங்கே தமயந்தியின் அவல நிலையினை அழகாகப் படம்பிடித்துக் காட்டுகின்றார் புகழேந்தி. வீம மகாராஜனுக்கு மகளாகப் பிறந்து அந்தப் புரத்திலே வாழ்ந்து நிடத நாட்டுப் பேரரசனுக்கு மனையாள் ஆகிய பூங்கோதை தமயந்தி, இன்று மணவாளனையும் மக்களையும் பிரிந்து நள்ளிரவில் நடுக்காட்டில் தனிமையில் ஏதிலியாக நின்று கலங்குகின்றாள். காரிகையிவள் துன்பத்தைக் கண்டு கண்ணீர் வடிக்காதவர் யார் அஃறிணைப் பொருட்களாகிய சேவல்களுமே தமயந்தியின் துன்பத்தைக் கண்டு மனம் பொறுக்காமல் சிறகுகளாகிய கைகளால் தம் வயிற்றில் அடித்து கதிரவனை பாய்கின்ற குதிரைகள் பூட்டப்பட்ட தேரிலே ஏறிவா என அழைக்கின்றன என்கின்றார் புகழேந்தி. பொழுது புலரும் போது சேவல்கள் இறக்கைகளை அடித்துக் கூவுவது இயற்கை நிகழ்ச்சி. ஆனால், கவிஞர் தனது மனக்குறிப்பைச் சாதுரியமாக சேவல்கள் மீது ஏற்றிக் கூறுகிறார். தான் உணர்ந்தது மட்டுமல்லாமல் நமக்கும் தமயந்தியின் அவலத்தை புரிய வைத்து விட்டார் புகழேந்தி.

"தையல் துயர்க்குத் தரியாது தஞ்சிறகாம்
கையால் வயிறலைத்துக் காரிருள்வாய் வெய்யோனை
வாவுபரித் தேரேறிவா! என் றழைப்பனபோல்
கூவினவே கோழிக்குலம்" - (நளவெண்பா)

- லெஸ்லி.

# அவளைக் கடந்து சென்று விடுகிறான்

லைலா - மஜ்னு இந்தக் கதையே லைலாவாக மயக்க, நான் மஜ்னு - அதாவது காதல் பித்தன் ஆகிவிட்டேன். லைலா - மஜ்னு கதையை நான் க்விதை நாடகமாக எழுதியிருக்கின்றேன். அதில் வெறுங்காதலை ஆன்மீகக் காதலாக மாற்றியிருக்கின்றேன். காதல் இறைவனின் முகவரி. காதலை அறிந்தவன் இறைவனை அறிவான்.

பெண்ணே காதலைக் கற்றுத் தருகிறாள். அந்தக் காதலின் பாதை வழியாக நடந்தால் தான் கடவுளை அடைய முடியும். பெண் வழியாக வந்தோம். பெண் வழியாகவே வெளியேற வேண்டும். இந்தக்கருத்துக்களைச் சொல்ல லைலா - மஜ்னு கதையை நான பயன்படுத்திக் கொண்டேன்.

கயஸ் (மஜ்னுவின் இயற்பெயர்) லைலாவின் காதலில் பித்தனாகிப் பாலைவனத்தில் அலைகிறான். ஒரு வழிப்போக்கன் -



கயஸைப் பார்த்து 'உன்பெயர் என்ன? என்று கேட்கிறான். கயஸ் லைலா என்கிறான் கஅபாவுக்குச் சென்று வழிபாடு செய்தால் பைத்தியம் தெளியும் என்று சிலர் கூற கயஸின் தந்தை அவனைக் கஅபாவுக்கு அழைத்துச் செல்கிறார்.

அங்கே பக்தர்கள் இறைவா! இதோ வந்துவிட்டேன் என்று ஜெபிக்க கயஸ் 'லைலா!' இதோ வந்துவிட்டேன் என்று ஜெபிக்கிறான். 'இதென்ன அபசாரம்' என்று பக்தர்கள் அடிக்க வருகின்றனர். கயஸ், 'இறைவன் லைலா இல்லையா? என்கிறான். வழிபாடு முடிந்து கயஸின் தந்தை அவனிடம், வா ஊருக்குப் போகலாம் என்கிறார்.

கயஸ், 'இறைவனிடம் இதோ வந்துவிட்டேன் என்று கூறிவிட்டுத் திரும்பிப போவது முறையா? என்று கேட்கின்றான். லைலா தன் தோழியிடம், 'கயஸ் என்னைப் பார்க்கும் போது என்னைப் பார்ப்பதாகத் தெரியவில்லை. எனக்குள் வேறுயாரையோ பார்க்கிறான். என்கின்றாள்.

லைலா பிச்சைக்காரர்களுக்குத் தர்மம் செய்து கொண்டிருக்கின்றாள். கயஸ் அவள் முன்னால் போய்க் கையேந்திக் கொண்டு நிற்கின்றான். லைலா, 'நான் தான் என்னையே உனக்குள் கொடுத்துவிட்டேன். என்னிடம் இன்னும் என்ன கேட்கிறாய்? என்று கேட்கிறாள, கயஸ், 'எனக்கு விடுதலை கொடு' என்கிறான.

இறுதியில் லைலா கயஸைத் தேடி வருகிறாள். கயஸ் லைலா! லைலா! என்று ஜெபித்தபடி எதிரே வருகிறான். லைலா, 'கயஸ்! இதோ நான் இங்கே இருககிறேன் என்கிறாள். கயஸோ அவளைப் பார்க்காமல் லைலா, லைலா என்று ஜெபித்தபடி அவளைக் கடந்து சென்றுவிடுகிறாள். ஆன்மீகக் காதல் பயணத்தில் பெண் ஒரு வழிகாட்டி மரம் என்ற கருத்தை உணர்த்த வழக் கமான கதையின் முடிவையே இப்படி மாற்றி விட்டேன்.

- கவிக்கோ அப்துல் ரகுமான்



# விழ விழ எழும் வீரம்

உனது ஆக்கிரமிப்பில்
எமது நிலம்
மீளமுடியாமல் போய்வி
'டாது
மூச்சு இழுக்கும் அடிந
ரம்பில்
கொதிப்புத் தெரியும்,
நாங்கள்
எத்தனை அழிவுகளை
இடப்பெயர்வில
தாங்கினோம்.
உன்னால் முடியவில்லை
போர்முனையில் வீரதுடன்
கரும்புலிப்படை.

மிருகத்தனமான எதிரியின்
ஆளுமை, அடக்குமுறை
நான்கு திசையும் அளக்க
முடியா நீண்ட பரப்பில்,
கடல் தரை இருபாகமும்
உணரும் இந்த ஒரு
வழிப்பாதையில்
குறுக்கே வந்து
எட்டியும் பார்க்காதே
எங்களைத் தொட்டும்
பார்க்காதே
கண் இமைக்கும்
இடைவெளிக்குள்
சிதறுவாய்.

தமிழர் இரத்தம்
குடித்துக் குடித்து
நாக்கின் உணர்வு செத்த
உன்னிடம்
பேசமுடியாது.
பெரும் வெடிச்சத்தத்தில்
மட்டும் தான் உன்னால்
முடிந்தது, எங்களுடன்
பேசவேண்டுமென்று.

இவனிடம் பழகிப்பார்
மென்மை தெரியும்.
நட்புக்கொள் விடுதலை
கிடைக்கும்.
பக்கத்தில் உறங்கு விழிப்புத்
தோன்றும்
கூட இரு
அவதானிப்பு, ஈவிரக்கம்,
நிதானம்
புரிந்துணர்வு
என்பன அறிவாய்.
எத்தனை இதயங்கள்
நனைந்திருக்கும்.
நான் போறேன்... என்று
நீ சொன்ன கடைசி
வார்த்தையில்
நீ மட்டும் கலங்கவில்லை.

உங்களில்
ஆழமாக
எங்களை நினைத்தீர்கள்.
உங்களிடம்,
துயர், ஒரு துளிர கண்ணீர்
கூட
பாரமானது.
அதனால்
உங்களை அழித்தீர்கள்.
இனிமேல்
எந்தப்படையும்
நெருங்காது.
விழ விழ எழும் வீரம்
படைத்து,
எங்களை ஆழ்கின்றீர்கள்.

- வா -

ஜூலை 5

தேசம் விடிந்திட வேண்டும்
குண்டினை சுமந்தவர்களா நீங்கள்
தமிழனின் மேன்மையை உலகறியச் செய்து
தாயக விடிவிற்காய் தன் உடல் சிதறி, ஆவி தந்த
காவிய நாயகர்களின் மாண்புபோற்றும் நாள்

கரும்புலிகள் நாள்



யாழ் மண்ணில் மக்கள் இதயங்களில்
மங்காத இடம் பிடித்த
சுவையின் சிகரம் 'முருகன் அரிசி'
தரத்தின் மேன்மை 'மாப்பியன் அரிசி'
சிறப்பு உணவு ஆக்கத்திற்கான 'சம்பா அரிசி' வகைகளை
என்றென்றும் தருவித்து வழங்கி இல்லத்தரசிகளின்
இதயம் கவர்ந்தவர்கள்... உங்களின் தேவைகட்கு உங்களின் தெருவில்

முருகன் களஞ்சியம்

திருநெல்வேலி
யாழ்ப்பாணம்

(சி/2741)



நாளும் சாகாவரம், சாவினை வேண்டியவர்கள் நீங்கள்

யாழ்ப்பாண மாவட்ட
விவசாய நுகர்ச்சிக் கூட்டுறவுச் சங்கங்களின் சமாசம்

பிறிமா சிலோன் லிமிட்டெட்
யாழ் மாவட்ட முகவர்

உங்களுக்கு தேவையான பிறிமா உற்பத்திகளை எங்களிடம் மொத்தமாகப் பெற்றுக் கொள்ளலாம்.

(சி- 2742)



மேகக்கூட்டில் பறவைகள் வானமாக நீங்கள்

சொலெக்ஸ்

பல் மூக்குக் கண்ணாடி அகம்



- கண்களை நவீன கருவிகள் மூலம் இலவசமாக பரிசோதித்துக் கண்ணாடிகளை பெற்றுக்கொள்ளவும்
- பல் சம்பந்தமான சகல ஆலோசனைகளைப் பெற்று சங்கு பற்களை கட்டி கொள்ளவும்
- மிதப்புப் பற்களுக்கு கிளிப் பொருத்தி சீர்செய்து கொள்ளவும்

யாழ் நகரில்
சொலெக்ஸ் பல் மூக்குக் கண்ணாடியகம்
ஆஸ்பத்திரி வீதி,
(O.P.D) முன்பாக. யாழ்ப்பாணம்



உயிரின் திரியை அணைத்து சூரியக்கதிர்களாக நீங்கள்

- இலவசமாகக் கண்களைப் பரிசோதித்து நவீனரக கண்ணாடிகளைப் பெற்றுக்கொள்ளவும்.
- இழந்த பற்களுக்கு நிகராக சங்குப்பற்களைக் கட்டிக்கொள்ளவும்.
- உறுதிமிக்க பற்கிளிப்புக்களைப் பொருத்திக் கொள்ளவும்.
- வெளிநாட்டில் இருந்து இறக்குமதி செய்யப்பட்ட நவீனமுறையிலான கேஸ் வகைகளைப் பெற்றுக்கொள்ளவும்.
- விரும்பிய நிறங்களில் பிளாஸ்ரிக் லென்ஸ், போட்டோ கிறேலென்ஸ் என்பவற்றைப் பெற்றுக்கொள்ளவும்.

(கட்டுப் பற்களை சுத்தம் செய்யவும்
மாத்திரை விற்பனைக்குண்டு)

நீங்கள் நாடவேண்டிய ஒரே ஸ்தாபனம்.

எரிக்கடுனேஷ்

மூக்குக் கண்ணாடியகமும்,
பல்கட்டும் இடமும்
566,564, ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்.
T.P:222-2486

கிளை-இல. 91,
K.K.S. Road,
Kokuvil.

கிளை-இல. 80,
K.K.S. Road,
Chunnakam.

(சி- 2734)

பொதுசன நூலகம்
யாழ்ப்பாணம்

நமது ஈழநாடு
267, Navalar Road, Jaffna.
T.P. - 021-2225107 www.eezhanaadu.com

**சிந்தனைக்கு**

*உறின்உயிர் அஞ்சா மறவர் இறைவன்*
*செறினும்சீர் குன்றல் இலர்.*

திருக்குறள்

# நமது நோக்கு

## கரும்புலிகளுக்கு ஒரு செய்தி

**இன்று கரும்புலிகள் நாள்.**

தமிழினத்தின் ஆத்மபலத்தை உலகெங்கும் உணர வைத்து, தமிழின எதிரிகளின் மனோபலத்தை கணப்பொழுதில் சிதைத்து, தமிழீழ விடுதலைப் போராட்டத்துக்கு பஷைவர் எழுத முயன்ற தலைவிதியைத் தகர்த்து, மனுக்குலத்தையே திகைக்கவும், வியக்கவும் வைத்து, பிரபஞ்சத்தின் இயக்க சக்திகளான நிலம், நீர், தீ, காற்று, ஆகாயம் என அனைத்துள்ளும் வியாபகமாகி நிற்போரின் நாள். ஆயுத பலத்தை ஆத்மபலத்தால் தகர்த்தெறிந்தவர்களின் நினைவுடன் தமிழினம் இறும்பூதெய்தி நிமிர்ந்து நின்று வரும் பகையை வெல்ல வல்லமை கோரிநிற்கும் நாள், தாயக மண்ணையும், தாயக மக்களையும் நேசித்தவர்கள் அவர்கள். அதனால், இன்று தாயகம் முழுவதும், தாயக மக்கள் வாழும் புலமெங்கும் அவர்கள் பூஜிக்கப்படுகிறார்கள்.

தமிழன் வீரம் புறநானூற்றுக் காலத்தோடு போய்விட்டதென்று புலம்பி நின்றோர்க்கு ஒரு புதுநானூற்றுக் காலத்தை உருவாக்கிக் காட்டிய தமிழர் தலைவன் கண்டு பிடித்த அற்புதமான மகாபலம் பொருந்திய 'தமிழாயுதம' தான் தற்கொடைப் போராளிகளான கரும்புலிகள்.

தமிழுணர்வும், தாயக மண் மீதான அவர்களின் பற்றும், அடக்குமுறைக்கெதிராக கிளர்ந்தெழுந்து, அநீதிகளை அழித்தொழித்து விடுதலைக்கு வழிசமைக்கும் ஆன்ம உந்துதலும், கரும்புலிகள் தம்மைத்தாமே உயிராயுதமாக உருவாக்கும் நிலையை உருவாக்கியது. இந்த உயிராயுதம் தான ஈழுக்கும், தமிழ் மண்ணுக்கும், தமிழனுக்கும் சுதந்திர உயிர்ப்பை வழங்கியது.

இலங்கையின் பேரினவாதிகளும், பேரினவாத அரசுகளும், சிறுபான்மை தமிழ் மக்களுக்கு எதிராகக் கட்டவிழ்த்துவிட்ட அரச பயங்கரவாதத்துக்குப் பலியான அப்பாவித் தமிழர்களின் ஆத்மாக்களின் அவலக்குரல்களுக்கு ஒரு தீர்க்கமான முடிவை ஏற்படுத்த அரச பயங்கரவாதத்துக்கு ஒரு இறுதி எச்சரிக்கையை அழுத்தமாகவும், அதிர்ச்சியளிக்கும் விதத்திலும் வழங்க, தன்னையே உயிராயுதமாக்கி, தற்கொடைத் தாக்குதல் என்ற புதிய போரியல் மரபுக்கு வழிவகுத்த மில்லர் என்ற அந்த முதற்கரும்புலி உலகிற்கு அறிவித்த செய்தி - தமிழரின், தமிழர் தாயகத்தின் விடுதலை நிச்சயம் என்பது மட்டுமல்ல... பேரினவாதத்தின் இறுதி யாத்திரைக்கான காலம் தீர்மானிக்கப்பட்டுவிட்டது என்பதுமாகும்.

மில்லர் வழியில் நூற்றுக்கணக்கில் மில்லரின் ஆன்மபலத்தை பெற்றவர்கள் அணி திரள்வார்கள் என்பதை பேரினவாதம் அப்போது உணர்ந்திருக்கவில்லை.

தமிழீழ விடுதலைப் போரின் ஒவ்வொரு திருப்பு முனைக்கும் காரணமான அந்தக் கந்தக மேனிக்குரியோரின் வரலாறு நெருப்பு வரிகளாலேயே உருவாக்கப்பட்டுள்ளது.

- அந்த வரிகள் தமிழுணர்வாளர்களுக்கு உணர்வூட்டும்!
- அதே வரிகள் தமிழின விரோதிகளை எரியூட்டும்!!
- விடுதலைப் போராட்டத்தின் தடைகளை தகர்த்தெறிந்து, அதனை வெற்றிகரமாக முன்னெடுக்க ஒளிப்பிழம்பாகி வழிகாட்டிய ஒவ்வொரு கரும்புலியும் வெடியோடு வெடியாகி, இடியாக எதிரிக்கு இடித்துரைத்த செய்தி...

'பகைவனே... இனி நீ எமக்கு தூசு...' என்பதேயாகும்.

- அவர்கள் விடுதலையை மூச்சாக்கி, சுதந்திரத்தைப் பேச்சாக்கிக்கொண்டபோதே, மரணத்தை வென்ற மனிதர்களாக தம்மைத் திடமாக்கிக்கொண்டவர்கள்.
- சாவுக்கு அஞ்சும் மனிதரிடையே, 'சாவை'யே அஞ்ச வைத்தவர்கள்.
- தனி மனிதர்கள் தங்களின் சரித்திரங்களை உருவாக்க அல்லாடிக்கொண்டிருக்கையில், தேசத்தின் - தேச மக்களின் சரித்திரத்தை உருவாக்கும் சக்தியாகத் தம்மை மாற்றியவர்கள். அதனால், அவர்களுக்கு தனிமனித முகவரிகள் ஏதுமில்லை - தேசமே, தாயக மண்ணின் பெயரே, அவர்களுக்கான முகவரியாயிற்று.
- தமிழீழத்தாய்க்கு 'கரும்புலி' என்ற சொல்லே உலகறிந்த முகவரியாயிற்று.
- 'அழகு மாணிக்கங்களாக அல்ல... அத்திவாரக் கற்களாக...' என்ற கரும்புலிகளுக்கான வாக்கியம் அர்த்தமுள்ளவைதான். தமிழீழத் தேசம் விடியும்போது அதன் கம்பீரமான கட்டமைப்பின் அத்திவாரத்தை தாங்கி நிற்பவர்கள் கரும்புலிகளாகவே இருப்பர்...

தமிழரின், தமிழ்த்தேசியத்தின் தமிழீழ தேசத்தின் முழுமையான சுதந்திரம், தடை தகர்ந்த விடுதலை என்பதை மட்டுமே ஒரே இலக்காகக் கொண்டோரே உங்களால் தமிழினம் நிமிர்ந்து நிற்கிறது.

காற்றோடு காற்றாகிவிட்ட உங்களின் இறுதி மூச்சு - தமிழ்மக்களின் சுவாசத்தோடு சுவாசமாகி...

உங்களின் கனவுகளை நெஞ்சிலும் நினைவிலும் சுமந்தபடி ... சமாதானப் பாதையில் நம்பிக்கையோடு, விசுவாசத்தோடு நின்றாலும்கூட அரசோ, சர்வதேச சமூகமோ சமாதானத்தின் பேரால் எம்மை ஏமாளிகளாக்க அனுமதிக்க மாட்டோம்...!

சமாதானம் என்பது சுதந்திரத்தையும், விடுதலையையும் அங்கீகரிக்காத வரை...

உங்களின் பாதையில் தேசத்தின் விடுதலைக்கு தங்களைத் தற்கொடையாக்கி உங்கள் கனவை நனவாக்குவர் என்பது உறுதி...

இந்த நாளில் இதனைவிடவும் சொல்லக்கூடிய செய்தி வேறெதுவும் இருப்பதாகத் தெரியவில்லை

## நாடும் நடப்பும்




# நாடாளுமன்ற கட்சித் தலைவர்கள் இன்று அவசரமாகக் கூடுகின்றனர்!

நாடாளுமன்றக் கட்சித் தலைவர்களின் கூட்டம் இன்று சபாநாயகர் டபிள்யூ. ஜே.எம். லொக்குபண்டார தலைமையில் இடம்பெறவுள்ளது.

நாடாளுமன்ற உறுப்பினர்களின் சிறப்புரிமைகளைப் பற்றியும், மேலும் பல முக்கியமான பல பிரச்சினைகள் பற்றியும் கலந்துரையாடுவதற்கு ஒன்றிணைந்த எதிர்க்கட்சியினர் சபாநாயகரிடம் சமர்ப்பித்த கோரிக்கையின் அடிப்படையில் இந்த அவசரக் கூட்டம் கூட்டப்படுகிறது.

இந்தக் கட்சித் தலைவர்களின் கூட்டத்தை முதலாம் திகதி நடத்துவதற்கு அரசாங்கக் கட்சியினர் உடன்பட்டிருந்தும் ஒன்றிணைந்த எதிர்க்கட்சி உடன்படாமையே நேற்றுவரை ஒத்தி வைப்பதற்கு முயன்றதெனவும் ஆனால் அரசாங்கக் கட்சி மற்றும் ஒன்றிணைந்த எதிர்க்கட்சி ஆகியவற்றின் பொது இணக்கப்பாட்டின் மீது கட்சித் தலைவர்களின் கூட்டம் இன்று இடம்பெறுகிறது.

மாகாணசபை தேர்தல்களினால் கட்சித் தலைவர்களின் கூட்டம் 19ஆம் திகதிவரை ஒத்திவைக்கப்பட்டது. நாடாளுமன்றம் மீண்டும் 20ஆம் திகதி கூடுவதற்குத் தீர்மாணிக்கப்பட்டிருந்தது. ஆனால் முக்கிய பல பிரச்சினைகள் தோன்றியுள்ளது என்று கூறி ஒன்றிணைந்த எதிர்க்கட்சி சபாநாயகரிடம் விடுத்த கோரிக்கையையடுத்து இந்த அவசரக் கூட்டம் கூட்டப்பட்டுள்ளது.

20ஆம் திகதிக்கு முன்பு நாடாளுமன்றம் கூட்டுவது பற்றியும் இதில் கலந்துரையாடப்பட்டது.

# மாகாண சபைத் தேர்தலுக்கு அனைத்து ஏற்பாடுகளும் தயார்

(கொழும்பு)

எதிர்வரும் 10ஆம் திகதி நடைபெறவுள்ள மாகாண சபைத் தேர்தலுக்கான அனைத்து பிரசார நடவடிக்கைகளும் நாளை மறுதினம் புதன்கிழமை நள்ளிரவு 12 மணியுடன் முடிவடைகின்றது.

இந்த ஆறு மாகாண சபைகளின் தேர்தலை 95 லட்சத்து 81 331 பேர் வாக்களிப்பதற்குத் தகுதி பெற்றிருப்பதோடு 7648 வாக்களிப்பு நிலையங்களில் அவர்கள் வாக்களிப்பார்கள் என்றும் தேர்தல் ஆணையாளர் அலுவலகம் தெரிவித்துள்ளது.

தேர்தலை நடத்துவதற்கான அனைத்து ஏற்பாடுகளும் செய்யப்பட்டு விட்டதாகத் தேர்தல் ஆணையாளர் அலுவலகம் தெரிவித்துள்ளது.

தேர்தல் நடைபெறும் காலப்பகுதி மற்றும் வாக்குச் சீட்டுகள் எண்ணி முடிக்கப்படும் வரை அனைத்துப் பிரதேசங்களிலும் பொலிஸ் பாதுகாப்பைப் பலப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்றும் தேர்தல் ஆணையாளர் விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# மாபியாக் கும்பல்களின் ஆதிக்கம் பெருகிவிட்டதால் நாட்டுக்கு ஆபத்து

## நிதி அமைச்சர் கூறுகிறார்

சில நாடாளுமன்ற உறுப்பினர்களின் பிள்ளைகள் 17 வயதானதும், துப்பாக்கி எடுத்துக்கொண்டு இரவு விடுதிகளுக்குச் செல்லப் பழகியுள்ளார்கள்.

அங்கு அவர்கள் யாருக்காவது அடிப்பது, அல்லது கொலை செய்வது என்று அவர்களது கலாசாரம் கட்டி எழுப்பப்பட்டுள்ளது.

அவர்களுக்குப் பணத்தின் பெறுமதி தெரியாது. அதற்குக் காரணம் அரசுக்குரிய வருமான வழிகள் வேறு செயற்பாடுகளால் அவர்களின் கரங்களுக்குக் கிடைக்கின்றது.

இவ்வாறு நிதி அமைச்சர் சரத் அமுனுகம கொழும்பில் உள்ள கிருன்ட் ஓரியன்ட் ஹோட்டலில் நடைபெற்ற சுங்க உத்தியோகத்தர்களின் வருடாந்தப் பொதுக் கூட்டத்தில் தெரிவித்தார்.

அவர் மேலும் பேசுகையில்-

இன்று எங்கள் நாட்டில் புதுமையான கலாசாரம் தலை எடுத்துள்ளது. நாட்டின் சட்டத்துக்கு அப்பால் சென்று ஏதேதோ பிழைகளில் ஈடுபடுவதற்கு குறிவைக்கும் கூட்டம் இருக்கின்றது.

சில இடங்களில் மாபியா கலாசாரம் செயற்படுவது பற்றி தெரிய வருகின்றது. இந்த அனைத்துப் பிழையான வழிகளை நிறுத்துவதற்கு சட்டத்தைச் செயற்படுத்த வேண்டும்.

சட்டத்தைச் செயற்படுத்தும் உத்தியோகத்தர்கள் இதற்கான முயற்சி எடுக்கவேண்டும். இதில் சுங்க உத்தியோகத்தர்களுக்கும் பொறுப்பு சுமத்தப்பட்டுள்ளது என்று கூறினார்.

# குன்றும் குழியுமாக காணப்படும் பண்ணை-அல்லைப்பிட்டி வீதி

யாழ்.பண்ணைப் பகுதியில் இருந்து அல்லைப்பிட்டி வரைக்குமான பிரதான வீதி மிகவும் மோசமான நிலையில் சேதமடைந்துள்ளதுடன், தற்போதைய சமாதான காலத்தில் இவ்வீதியில் இருந்த சிறு குழிகள் மட்டும் செப்பனிடப்பட்டுள்ளது.

தீவுப்பகுதி மக்களின் முக்கியமானதும், ஒன்றேயொன்றுமாக உள்ள இந்தப் பிரதான வீதியின் நிலமையினை சீர்செய்ய இதுவரைக்கும் முயற்சிகள் நடந்ததாக தெரியவில்லை. இவ்வீதியன் கீழாக உள்ள நீர்மட்டத்தை சமன் செய்யும் குழாய்கள், மதகுகள் எல்லாம் சேதமடைந்துள்ளதுடன், பெரும் பள்ளங்களும் வீதியில் ஆங்காங்கே இருப்பதனால் வாகனங்கள் விபத்துக்குள்ளாகும் நிலை உருவாவதுடன் வாகனங்களில் பயணிக்கும் பயணிகளும் பெரும் அசௌகரியங்களை எதிர்கொள்கின்றனர். (113)

# பிரதான தலைமை பதவிகளை எதிர்க்கட்சிக்கு வழங்க தீர்மானம்

நாடாளுமன்றத்தில் பிரதான நடவடிக்கைகளை மேற்கொள்ளும் குழுக்கள் இரண்டுக்கான தலைமைப் பதவிகளை எதிர்க்கட்சிக்கு வழங்க தீர்மானித்துள்ளதாக அமைச்சர் மங்கள சமரவீர தெரிவித்தார்.

எதிர்க்கட்சிகள் நாடாளுமன்றப் பெரும்பான்மையை பெற்றுக்கொள்வது தொடர்பாக நடவடிக்கைகளை மேற்கொண்டு வருவதாக வெளியாகியுள்ள கருத்துக்கள் குறித்து விளக்கமளிக்கும் போதே, அவர் இதனைக் கூறியுள்ளார்.

நாடாளுன்றத்தில் பிரதானமாக கணக்குகளைப் பேணும் குழுவுக்கான தலைமைப் பதவியும், உயர் பதவிகளை மேற்பார்வை செய்யும் குழுக்களுக்கான தலைமைப் பதவியுமே எதிர்க்கட்சிக்கு வழங்கப்படவுள்ளது.

ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி அரசாங்கம் ஆட்சிக்கு வந்தவுடனேயே தாம் இத்தீர்மானத்தை மேற்கொண்டிருந்ததாகத் தெரிவித்த அமைச்சர், கடந்த அரசாங்கத்தின் ஆட்சிக் காலத்திலும் இக்குழுக்களின் தலைமைப் பதவிக்காக எதிர்க்கட்சியினரே நியமிக்கப்பட்டிருந்ததாகவும் தெரிவித்தார்.

பொதுவாழ்வில் அருட்திரு ரூபன் மரியாம்பிள்ளை

# ஆயர் பணியில் 23 ஆண்டுகளை நிறைவு செய்துள்ள யாழ்.ஆயர்


தோமஸ் சவுந்தரநாயகம் ஆண்டகை

யாழ் ஆயர்தினம் யாழ் மறை மாவட்டத்தில் கொண்டாடப்படுகின்ற வேளையில் முதலில் அவருக்கு குருக்கள், துறவிகள், பொதுநிலை யினர் சார்பாக அன்பு கலந்த வாழ்த் துக்களையும் செபங்களையும் காணிக் கையாக்குவோம்.

1981ஆம் ஆண்டு உரோமாபுரியில் கலாநிதி பட்டப்படிப்பை மேற்கொண டிருந்த போது ஆயராக்கப்பட்டு 11 ஆண்டுகள் மன்னார் மறைமாவட்டத தையும் அதன் பின் 12 ஆண்டுகள் யாழ்.மறைமாவட்டத்தையும் வழி நடத்தி தமது ஆயர் பணியில் 23ஆவது ஆண்டில் இவர் காலடி வைக்கிறார் என்பது இங்கு குறிப்பிடத்தக்கது.

யாழ் .ஆயர் மேதகு தோமஸ் சவுந் தரநாயகம் ஆண்டகையின் பெயர் கொண்ட புனிதரான தோமையாரின் தினம் யூலை மாதம் 03ஆம் திகதி யாகும். யாழ்மறைமாவட்டத்தில் ஆயர் தினமாக கொண்டாடப்படும். இந்தத் தினம் இத்தடவை சனிக்கிழமையாக இருப்பதால் வசதி கருதி இந்தத் தினத்தை திங்கட்கிழமைக்கு இன்று மாற்றம் செய்துள்ளனர்.

இன்று காலை 9.00 மணிக்கு பாட சாலை மாணவர்களுக்கான சிறப்புத் திருப் பலி யாழ்.மரியன்னை பேரால யத்தில் யாழ்ஆயர் தலைமையில் குருக கள் புடைசூழ ஒப்புக் கொடுக்கப்பட இருக்கிறது. குருக்கள், துறவியர், பொதுநிலையினர், பாடசாலை மாணவர் களோடு இணைந்து திருப்பலியில் கலந்துகொள்ளவும் அதன்பின் யாழ். ஆயரின் பணி சிறக்க வாழ்த்தவும் அனைவரும் அழைக்கப்படுகின்றனர்.

ஒரு சமயத் தலைவராக இருந்த போதும் தம் சமய வரம்புகளை தாண்டி துன்பப்பட்ட மக்களுக்காக குரல்கொடுக்க முனைந்தார். புனித மரியன்னை பேராலயத்தில் தமிழ் மக்களின் விடிவிற்காக உழைப்பேன் என்று தாம் எடுத்த உறுதிமொழியை இன்றுவரை பிரமாணிக்கமாக பாது காத்து வருகிறார்.

இலங்கை நாட்டின் ஜனாதிபதி யையும் பிரதமரையும் தனியாகவும் குழுவாகவும் சந்தித்து தமிழ் மக் கள் பிரச்சனைகளை எடுத்துக் கூறி நீதியோடு கூடிய நிரந்தர தீர்வினை தமிழ் மக்களுக்கு மனிதாபிமான ரீதி யில் வழங்கவேண்டுமென அழுத்தம் கொடுத்துக்கொண்டே வந்தார்.

கொழும்புக்கு செல்லும் வேளை களில் எல்லாம் அரசியல் தலைவர் களையும் கட்சித் தலைவர்களையும் மற்றும் தேவையான பிரமுகர்களை யும் தனிப்பட்ட விதமாக சந்தித்து, இரகசியமான முறையில் தமது கருத்துக்களையும் கூறவேண்டியவற றையும் தெளிவாக கூறி வந்திருக் கிறார். தம்மை சந்திக்க வந்த அரசி யல் பிரமுகர்களையும் தலைவர்களை யும் வெளிநாட்டு பிரதிநிதிகளையும் அரசியல் கட்சிகளையும் உரிய வித மாக சந்தித்து கூறவேண்டிய அனைத் தையும் துணிவோடு தெரிவித்து வந் திருக்கிறார். யாழ்.நகருக்கு வரு கின்ற இதுபோன்ற உள்நாட்டு வெளி நாட்டு தலைவர்கள் யாரும் யாழ். ஆயரை சந்திக்காமல் போவதே இல்லை என்பது அனைவரும் அறிந்த உண்மையாகும்.

தமது உறுதியான கருத்துக்களா லும் யாருக்கும் பயப்படாத துணி வான அறிவுறுத்தல்களாலும் இவர் பெயர் பெற்றிருப்பதாலேயே யாழ்ப் பாணத்தின் உண்மை நிலையை அறிய வேண்டுமென்றால் இவரிடமே செல்லவேண்டும் என்ற உண்மையை யாழ் வரும் தலைவர்கள் அறிந்து இவரை சந்திக்காமல் போவதில்லை. அறிக்கைகளையும் அறிவுறுத்தல் களையும் கருத்துக்களையும் கண் டனங்களையும் யாராக இருந்தாலும் உரிய விதமாக அனுப்பியோ நேரடி யாக சொல்லியோ தமிழ் மக்களின் சுபீட்சமான எதிர்கால வாழ்வுக்கு வழி சமைக்க அவர் பாடுபட்டு வந்திருக் கிறார்.

யாழ்ப்பாணத்திலிருந்து ஒரு குரல தமிழ் மக்களுக்காக துணிவாக உரக்க ஒலிக்கிறதென்றால் அது யாழ்.ஆய ரின் குரலாகத்தான் இருக்கும் என் பதில் இரண்டாம் கருத்துக்கு இட மிருக்க முடியாது.

தமது பதவியையும் பணியை யும் பணயம் வைத்து யுத்த நிறுத் தத்திற்காக அரசிடமும் புலிகளிட மும் வேண்டுவது என்றாலேன்ன 3ஆம் தரப்பு மத்தியஸ்தத்துக்காக குரல் கொடுப்பது என்றாலென்ன பேச்சுவார்த்தையை ஆரம்பிக்கும்படி வலியுறுத்துவதென்றாலென்ன ஏ-9 பாதையை திறக்க அழுத்தம் கொடுப் பது என்றாலென்ன உயர் பாது காப்பு வலயத்தை அப்புறப்படுத்த வேண்டுவது என்றாலென்ன தமிழ் மக்களின் மீள்குடியேற்றத்திற்கு குரல் கொடுப்பது என்றாலென்ன அடிப் படை உரிமைகள் அனைவருக்கும் சமமாக கிடைக்க வேண்டுமென வலி யுறுத்துவது என்றாலென்ன எதற்கும் அவர் பின்னிற்கவில்லை.

யாருக்கும் அவர் பயந்திருக்க வில்லை. தேவையான போதெல் லாம் குரல்கொடுத்துக்கொண்டு வந்த யாழ்.ஆயர் தமது கிறிஸ்மஸ் செய் தியையும் ஈஸ்ரர் செய்தியையும் விசேட செய்திகளாக்கி அதில் விசேட விதமாக தமிழ் மக்களின் வாழ்வு அமைதியான முறையில் அமைக் கப்பட குரல்கொடுத்துக்கொண்டே வருகிறார் என்பது இங்கு குறிப்பிடப் பட வேண்டிய விடயமாகும்.

தமிழ் மக்கள் தேர்தலின்போது எவ்விதமாக செயல்படவேண்டும் என் பது பற்றியும் அரசியல் தலைவர் களும கட்சிகளும் எவ்விதம் பணிபுரிய வேண டும் என்பது பற்றியும் திருவிழா காலங்களில் எவ்விதம் வெடிகொழுத்து வது என்பது பற்றியும் இளைஞர்கள் கட்டுப்படாற்றவர்களாய் வீதிகளில் திரிவது தவறானது என்பது பற்றி யும் போரினால் சிதைக்கப்பட்ட குடும்ப உறவுகள் கட்டியெழுப்பப்பட வேண் டும் என்பது பற்றியும்கூட அவர் தம் கருத்துக்களை உறுதியாக தெரிவிக்க தவறவில்லை.

ஆயருடைய அரசியல் நிலைப் பாட்டையும் அணுகுமுறையையும் தமிழ் மக்களுக்காக தம்மையும் தம் பதவியையும் பணயம் வைத்து குரல் கொடுக்கும் தன்மையையும் கத் தோலிக்க மக்கள் மட்டுமல்ல இந்து சமய மக்களும் முழுமையாக விருப் பாடு ஏற்றிருக்கிறார்கள்.

அவருடைய இந்த பணியை பாராட்டி நன்றி தெரிவித்திருக்கிறார்கள்.

வெளிநாடுகளில் வாழுகின்ற மக் கள் ஆயரின் ஓயாத குரலை ஊட கங்கள் வழி தெளிவாக கேட்டு அவ ரின் துணிவையும் தூரநோக்கையும் பாராட்டி மடல்களும் மின்னஞ்சல் கடி தஙகளும் வரைந்திருக்கிறார்கள்.

ஆயரின் அறிக்கைகளும் கடி தங்களும் சிலவேளைகளில் இங்கு இரகசியமானவையாக வைக்கப் பட்ட போதும் வெளிநாட்டு ஊடகங் கள் அவற்றை பெற்று அங்கு பிர சுரிப்பதால் புலம்பெயர்ந்து வாழும் மக்கள் இவற்றை அறியக்கூடிய வர்களாக இருக்கிறார்கள். யாழ்.ஆயர் மேதகு தோமஸ் சவுந்தரநாயகம் அண்டகையின் குரல தமிழ் மக்களு டைய வாழ்வில் நீதியோடு கூடிய ஓர் நிரந்தரமான தீர்வும் சுபீட்சமான எதிர் காலமும் தோனறும் வரை ஓயாமல் ஒலித்துக் கொண்டிருக்கவே வேண்டும் □

சர்வதேச அரசியல்... - ரொறன்ரோவிலிருந்து ராகினி

# கனடாவில் நடந்த தேர்தல் திருவிழா




**2004**-இது தேர்தல் ஆண்டு. இந்த வருடம் உலகச் சனத்தொகை யில் அரைவாசி எண்ணிக்கையிலான மக்கள் தத்தமது நாடுகளில் பொதுத தேர்தலில் வாக்களிக்க அழைக்கப் படுகின்றார்கள். உலக நாகரீக வர லாற்றில் இவ்வாறு அதிகளவில் பொதுமக்கள் ஒரே ஆண்டில் தமது ஜனநாயக உரிமையை உபயோகிப் பது இவ்வருடத்திற்கேயான சிறப் பாகும்.

நவம்பர் மாதம் அமெரிக்கர்கள் தமது தலைமைத் தலைவிதியை மீண்டும் ஒருமுறை நிர்ணயிக்கப் போகின்றனர். அமெரிக்கா தற்போது தன்னை ஈடுபடுத்தியிருக்கும் யுத் தங்களைவிட அமெரிக்காவின் பொரு ளாதார நிலையே இத்தேர்தலின் முடிவை தீர்மானிக்கும் காரணியாக அமையும் என்பது திண்ணமே. இத் தேர்தலில் ஆட்சிமாற்றம் ஏற்பட்டா லும், ஏற்படாமல் விட்டாலும் அமெ ரிக்காவின் வெளியுறவுக் கொள்கை பெரிய அளவில் மாறும் என உல கம் எதிர்பார்க்கமுடியாது.

2004ம் ஆண்டின் தேர்தல் திரு விழாக் கொண்டாட்டத்தில் உலகின் கண்களை இரண்டு நாடுகளின் பொதுத தேர்தல் ஈர்த்துச் செல்கின்றது. இதில முதலாவது இந்தியா மற்றையது ஈராக். உலகின் அதிகளவு சனத் தொகையைக் கொண்டுள்ள முதலா வது ஜனநாயக நாடான பாரதத்தின் பிள்ளைகள் தமது தலைமையைத் தீர்மானிக்கும்போது சீனாவுடன் இணை ந்து ஆசியக்கண்டத்தில் வளர்ந்து வரும் உலகப் பொளாதார வல்லர சாகத் தம்மை மாற்றவேண்டிய கடப் பாட்டை மனதில் நிலைநிறுத்திக் கொள்ள வேண்டியவர்களாக இருந் தார்கள். அதில் ஓரளவு அவர்கள் வெற்றி கண்டுள்ளார்கள் என்றே எண்ணத்தோன்றுகின்றது.


கனடிய நாடாளுமன்றம்

அமெரிக்கா தலைமையிலான கூட்டுப்படைகளினால் விடுதலை பெற் றுக்கொடுக்கப்பட்ட ஈராக்கும் பொதுத தேர்தல் ஒன்றை சந்திப்பதன் மூலம் அரபு நாடுகளில் ஜனநாயக மரபு களைத் தழுவும் முதல் நாடாக உல கிற்கு தன்னை அடையாளப் படுத் திக்கொள்ளும். ஜனநாயகம் நோக் கிய ஈராக்கின் இந்தப் பயணமானது உலகின் மற்றை முஸ்லிம் நாடு களுக்கு ஒரு ஆணித்தரமான கருத்தை உரைத்துச் செல்லும்.

இலங்கைத்தீவோ நம்பிக்கை தந்த சமாதான முன்னெடுப்புகளைத் தொலைத்துவிட்டு தேர்தலுக்கு மீண் டும் அவசரத் தந்தி கொடுத்தது. ஏப் ரல் இரண்டில் அரங்கேறிய தேர்தல் நாடகமானது கடந்த நான்கு ஆண்டு களில் மேடையேறும் மூன்றாவது தோல்விப் படைப்பாகும். இரு அரசி யல் அதிகார தலைமையின் கீழ் தமிழர்களின் நீண்டகால கனவுகள் மறைந்துகொண்டே செல்வதையே இது எடுத்துக்காட்டுகின்றது.

தமிழர்கள் அதிகளவில் புலம் பெயர்ந்து வாழும் கனடாவிலும் 34 ஆவது பாராளுமன்றத்துக்கான தேர் தல்கள் நடைபெற்று முடிவுகளும் வெளியாகியுள்ளன. குறிப்பாக இலங் கைத்தீவின் இனப்பிரச்சினை காரண மாக தமிழர்கள் புலம்பெயர்ந்த போது அவர்கள் தெரிவுசெய்த நாடு களில் முதலிடம் பெற்றது கனடா.

பரப்பளவில் உலகில் இரண்டா வது பெரிய நாடு கனடாவே. கனடா வின் மொத்த பரப்பளவு 9.97 மில் லியன் சதுரக் கிலோ மீற்றராகும். இங்குள்ள மக்கள் தொகை 30.1 மில் லியனாகும். இவர்களில் 22.7 மில் லியன் மக்கள் இம்முறை வாக்களிக கத் தகுதி பெற்றிருந்ததாக தேர்தல் திணைக்களம் அறிவித்திருந்தது. 2000ம் ஆண்டு கனடாவில் தேர்தல் நடைபெற்றபோது 61 சதவீதத்துக் கும் சற்று அதிகமானவர்களே வாக் களித்திருந்தனர். கனடாவில் வர லாற்றில் இதுவே அதிகுறைந்த வாக்களிப்பு வீதம் என்பது குறிப் பிடத்தக்கது.

கனடாவில் தலைநகர் ஒட்டாவா வில் உள்ள பாராளுமன்றத்திற்கான தேர்தல் அழைப்பு விடுக்கப்பட்ட போது லிபரல் கட்சிக்கு 168, கன டிய பழமைவாதக் கட்சி 73, கியூ பெக் கட்சி 33, புதிய மக்களாட்சிக் கட்சி 14, சுயேட்சைகள் 9 என ஆச னங்கள் நிறைந்திருக்க 4 ஆசனங் கள் வெற்றிடமாக இருந்தன. இது வரை காலமும் 301 ஆக இருந்த பாராளுமன்ற உறுப்பினர்களின் ஆச னங்கள், இம்முறை தேர்தலுக்கு முன் னர் மேற்கொள்ளப்பட்ட தேர்தல் தொகுதிகளில் மீள்வரைவின் பின் னர் 308ஆக அதிகரித்திருந்தது

1993, 1997, 2000 என நடை பெற்ற கடந்த மூன்று தேர்தல்களி லும் லிபரல் கட்சியே பெருன்பான் மைப் பலத்துடன் முன்னாள் பிரதமர் ஜுன் கிரிச்சியன் தலைமையில் ஆட்சிப் பொறுப்பை வெற்றிபெற்றது.

ஜுன் மாதம் 28ம் திகதி கன டாவின் 34வது பாராளுமன்றத் தேர் தல் நடைபெற்றது. இதற்கான அறி விப்பை லிபரல் கட்சியின் தலை வரும், பிரதமருமான போல் மாட்டின் மே 23ம் திகதி வெளியிட்டிருந்தார். 36 நாட்கள் தொடர்ந்த கடுமையான பிரச்சாரத்தின் பின்னர் நடைபெற்ற தேர்தலில் கனடியர்கள் மீண்டும் லிபரல் கட்சிக்கு ஆட்சியமைக்கும் சந்தர்ப்பத்தை வழங்கியுள்ளனர். ஆனாலும் 168 ஆசனங்களுடனும் பெரும்பான்னைப் பலத்துடன் தேர் தலை எதிர்கொண்ட லிபரல் கட்சி, தனது பெரும்பான்மையை இழந்தது டன் 135 ஆசனங்களை மாத்திரமே இம்முறை பெறமுடிந்தது.

2000ம் ஆண்டு மூன்றாவது தட வையாக பெரும்பான்மை பலத்தை பெற்று பாராளுமன்றத்தில் ஆட்சி யைப் பிடித்தவர் ஜுன் கிரிச்சியன். கடந்த வருடம் டிசம்பர் மாதம் 12ம் திகதி அவர் பிரதமர் பதவியை பரிமாறிக்கொண்டு சென்றுவிட, லிப ரல் கட்சியின் தலைவர் என்ற முறை யில் மீதமிருந்த ஆட்சிக்காலத்தை நிரப்புவதற்காக எதிர்காலப் பிரதமர் என்ற அடைமொழியோடு ஆட்டத் துக்கு வந்தவர் முன்னாள் நிதி அமைச்சர் போல் மாட்டின்.

ஆட்டத்தை ஆரம்பித்த வேகத் திலேயே போல் மாட்டினின் ஆடு களத்தில் ஊழல் பந்தும் வீச்சலாக வீசியது. இதுவே இம்முறை தேர்த லில்போது அவரது பாராளுமன்ற ஆசனங்களில் இழப்பிற்கு முக்கிய காரணியாகவும் அமைந்தது.

ஆனாலும் அவர் தனது கட்சி மட்டத்தில் கொண்டுவந்த சில மாற் றங்கள், பத்து ஆண்டுகளுக்கு மேலாக நீடித்த பெரும்பான்மை லிபரல் ஆட்சி யிலிருந்து கனேடியர்கள் எதிர்பார்த்த ஒரு மாற்றம், மற்றும் இடதுசாரி களான லிபரல் கட்சியின் ஆட்சியை உடைத்தெறியும் பலம் பெறுவதற் காக கைகோர்த்த இரண்டு வலது சாரிக் கட்சிகள் என வேறு சில காரணங்களும் இங்கே கவனத்தில் கொள்ளப்படவேண்டியது. தேர்தல் அறிவிப்பு வெளியாகிய நிமிடத்தில் இருந்தே லிபரல் கட்சி தோல்வி முகம் நோக்கிச் சென்றுகொண்டிருந ததை பல கருத்துக் கணிப்புக் களும் சுட்டிக்காட்டியிருந்தன என்று குறிப்பிடத்தக்கது.

(தொடரும்)

பொதுசன நூலகம்
யாழ்ப்பாணம்

# ஷியா மதக் குழுவின் மீது யேமன் படைகள் முற்றுகை

## மோதல்களில் 100 பேருக்கு மேல் பலி



யேமனில் ஹுசேய்ன் - அல் ஹெனதி என்ற மதப் பிரிவைச் சேர்ந்தவர்களுக்கும், அரச படைகளுக்கும் இடையில் இடம்பெற்ற மோதல்களில் நூற்றுக்கும் அதிகமானவர்கள் கொல்லப்பட்டதாக அதிகாரபூர்வ வட்டாரங்கள் தெரிவித்தன.

யேமன் நாட்டின் உள்துறை அமைச்சர் ரஷாட் அல் - அலிமி இந்த மோதல்கள் குறித்து நாடாளுமன்றத்தில் பேசுகையில் -

கடந்த ஜுன் மாத நடுப்பகுதியில் இங்கு நடந்த மோதல்களில் ஹுசேய்ன் அல் - ஹெனதி மதக் குழு ஆதரவாளர்கள் 86 பேரும், இராணுவத்தினர் மற்றும் பொலிஸார் 32 பேரும் கொல்லப்பட்டனர்.

ஷியா மதப் பிரிவினர் ஆயுதக் குழுவொன்றை அமைத்து, அனுமதி பெறாத மத நிலையங்களை நடத்தி வருவதாக அரசாங்கம் குற்றஞ்சாட்டியுள்ளது.

யேமனின் வடக்குப் பகுதி மலைப் பிரதேசத்தில் இந்த மதக் குழுவினர் முற்றுகைக்கு உள்ளாக்கப்பட்டிருப்பதாகவும் உள்துறை அமைச்சர் மேலும் தெரிவித்தார்.

ஹெனதிக்கு நெருக்கமான வட்டாரங்கள் இந்த மோதல்களில் 200 பேர் கொல்லப்பட்டதாகத் தெரிவித்தாக ரொய்ட்டர் செய்தி வெளியிட்டது.

சாதா மாகாணத்தில் நடந்த மோதல்களில் 120 அரச படையினரும், 21 மதக் குழு ஆதரவாளர்களும் காயமுற்றதாக அரசாங்கம் அறிவித்துள்ளது.

அத்துடன் 185 மதக்குழு ஆதரவாளர்கள் தம்மால் கைது செய்யப்பட்டிருப்பதாகவும் அரச படையினர் தெரிவித்தனர்.

உலக நோக்கு



ரஷ்யாவின் தலைநகர் மொஸ்கோவில் இருந்து 50 கிலோமீற்றர் தொலைவிலுள்ள நகர் ஒன்றில் கடந்த 2 ஆம் திகதி மாலை சூரிய அஸ்தமனத்தின்போது சிறிய விமானமொன்று பறந்து செல்வதைக் காணலாம்.

ஈராக்கில் கடத்தப்பட்ட

# அமெரிக்கக் கடற்படை வீரர் சிரச்சேதம் செய்யப்பட்டார்



ஈராக்கில் வைத்து இஸ்லாமிய ஆயுதபாணிகளால் கடத்தப்பட்ட அமெரிக்கக் கடற்படையைச் சேர்ந்த வசீப் அலி ஹஸன் சிரச்சேதம் செய்யப்பட்டார்.

இவர் சிரச்சேதம் செய்யப்பட்டதான தகவலை, தாம் ஆராய்ந்து வருவதாக அமெரிக்க அதிகாரிகள் தெரிவித்தனர். இவரது சிரச்சேதம் தொடர்பான தகவலை இஸ்லாமிய இணையத்தளம் நேற்று முன்தினம் ஒளிபரப்பியது.

சிரச்சேதம் செய்யப்பட்டவரான அலி ஹஸன் - லெபனான் நாட்டைப் பிறப்பிடமாகக் கொண்டவர். இவர், அமெரிக்காவில் குடியேறி அங்கு அமெரிக்கப் பிரஜாவுரிமை பெற்றவராவார்.

சிரச்சேதம் செய்யப்பட்டது உறுதிப்படுத்தப்பட்டுள்ளதாகவும், ஆனால் இந்தச் சம்பவம் எங்கு நடந்ததென்பது தெரியவில்லையெனவும் லெபனான் வெளிநாட்டமைச்சு தெரிவித்தது.

# எண்ணெய் விநியோகக் குழாய்மீது பாக்தாத்தின் தென்பகுதியில் தாக்குதல்



பாக்தாத்தின் தென்பகுதியில் துறைமுகத்திற்கு எண்ணெய் விநியோகத்தை வழங்கும் எண்ணைக் குழாய்களில் இரண்டில், ஒன்றை நேற்று முன்தினம் இஸ்லாமியக் கிளர்ச்சிவாதிகள் தாக்கி சேதப்படுத்தியுள்ளனர்.

இதனால் நாளாந்தம் ஒரு கோடியே 92 லட்சமாக பரல்கள் விநியோகம் செய்யப்படும் எண்ணெயின் அளவு தறபோது 96 லட்சமாக குறைவடைந்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.



கடந்த மாதத்தில் எண்ணெய்க் குழாய்கள் மீது நடத்தப்பட்ட தாக்குதலின் பின், பாதுகாப்பு அதிகரிக்கப்பட்டுள்ள நிலையிலும் ஈராக்கில் ஸ்திரத் தன்மையை ஏற்படுத்தப் போவதாக, ஈராக் இடைக்கால அரசின் பிரதமர் அயட் அலாவி தெரிவித்திருந்த நிலையிலுமே இந்தத் தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது.

இது கிளர்ச்சிவாதிகளின் திட்டமிட்ட தாக்குதலென எண்ணெய்க் கம்பனியில் தொழில் புரியும் பெயர் குறிப்பிட விரும்பாத ஊழியர் ஒருவர் தெரிவித்தார்.

சம்பவ இடத்துக்கு நேற்றுச் சென்ற பொறியியலாளர் குழு சேத விபரங்களை மதிப்பிட்டதுடன் எவ்வளவு காலத்திற்குள் இந்த விநியோகக் குழாய் திருத்தி முடிக்கப்படுமென்பதையும் ஆராய்ந்தனர்.

தாக்குலுக்கு முன்னர் 70 ஆயிரம் பரல்கள் எண்ணெய் விநியோகத்தை மேற்கொண்ட இந்தக் குழாய்மூலம் தாக்குதலின் பின்னர் நாற்பதாயிரம் பரல்களே விநியோகிக்கப்படுவதாக தெரிவிக்கப்படுகிறது.

கலாலயா
பயிற்சியகம்
(பெருமாள் கோவிலுக்கு அண்மையில்)
யாழ்ப்பாணம்.
மனைப்பொருளியலும் கைத்திறனும் பயிற்சிகள்
கேக் ஐஸிங் - சகலவிதமான ஐஸிங் மற்றும் மாச்சீனி மலர்கள் (SUGAR CRAFTING)
உணவுகள் தயாரித்தல் - மேலைத்தேய, கீழைத்தேய உணவுகள், சிற்றுண்டிகள் VEGETABLE CRAFTING செய்தல்
கூந்தல் அலங்காரம் - 20 விதமான கொண்டைகள் போடுதல்.
FABRIC PAINTING - SAREE PAINTING, POT PAINTING, EMBOSS PAINTING, கைக்குட்டை, கதிரை விரிப்புக்களில் வர்ணந்தீட்டுதல்
☆ மேற்குறித்த பயிற்சிகள் 3 மாத காலம் நடைபெறும். பயிற்சி முடிவில் சான்றிதழ் வழங்கப்படும்
உடை தயாரித்தல - குழந்தைகள், சிறுவர், மகளிருக்கான உடைகள் தைத்தல்.
கைவேலை - பேப்பர் அலங்காரம், SOFT TOYS, கழிவுத்துணி வேலை, றிபன் வேலை, முத்துமாலை கோத்தல், CRYSTAL வேலை.
மலர்கள் செய்தல் - கடதாசியிலும் துணிகளிலும் மலர்கள் செய்தல், மலர்ச்செண்டு (BOUQUET) செய்தல்.
மேற்குறித்த பயிற்சிகள் 6 மாதகாலம் நடைபெறும்.
இத்துடன் அடிப்படை FACIAL அழகுக்கலையும், மணப்பெண் அலங்காரமும் வித்தியாசமான முறையில் சேலை அணியும் முறையும் 2 நாள் வகுப்புகளாக நடைபெறும்.
கிழமைநாள் மற்றும் சனி – ஞாயிறு புதிய வகுப்புக்களுக்கு மாணவிகளுக்கான அனுமதிகள் வழங்கப்படுகின்றன.
மேலும் விவரங்களை வியாழன். வெள்ளி தவிர்ந்த ஏனைய நாள்களில் பி.ப 1.30 மணிவரை அறிந்துகொள்ளலாம்.
(சி-2744) - பதிவாளர்.

நாகம்ஸ் சுன்னாகம்
மாற்றியமைக்கப்பட்ட டொல்பி ஒலி அமைப்புடன
அநேக ரசிகர்களின்
வேண்டுகோளுக்கிணங்க
ரஜினி, சௌந்தர்யா, ரம்யா கிருஷ்ணன் நடித்த
படையப்பா
நாளை முதல் ஜே ஜே (சி-2723)
தினசரி காட்சிகள் : 11.00, 3.00, 7.00 (பு.நே)

நிறைஞ்சனாஸ் சங்கானை
விஜய், திரிஷா, பிரகாஷ்ராஜ் நடித்த
கில்லி

காட்சி நேரம் : 11.00. 2.45. 6.00.(பு.நே.)
வெள்ளி,சனி, ஞாயிறு இரவு 8.45(பு.நே)
EHTREMITIEH (சி-2723)

ராஜா யாழ்ப்பாணம்.
சூரியா, ஜோதிகா, விவேக் மற்றும் பலர் நடித்த
பேரழகன்

(சி-2623)
காட்சிநேரம்:-10.30, 2.30, 6.30 (பு.நே)

சிறு விளம்பரம்

இயந்திர நண்டுகள்
விஞ்ஞானியைக் கொலை செய்தது யார்? இயந்திர நண்டு! விபரம் அறிய வாசியுங்கள் 'இயந்திர நண்டுகள்' விலை ரூபா அறுபது. சாவகச்சேரியில் கிடைக்குமிடம் : செந்தூர் புத்தக நிலையம், பஸ் நிலையம். யாழ்ப்பாணத்தில் - மண்டேலா புத்தகசாலை பஸ் நிலையம், உயர் கல்லூரி புத்தக நிலையம் ஆரிய குளம் சந்தி. (773)

வீடு விற்பனைக்கு
கொழும்புத்துறை சுவாமிநாதர் லேன், வளன்புரத்தில் 2 1/2 பரப்பில் - ஒன்பது அறைகள் கொண்ட விசாலமான வீடு விற்பனைக்குண்டு. விலை 30 லட்சத்துக்கு மேல். பார்வையிடத் தொடர்பு: T.P:0776005425, 2226682. (777)

ஸ்ரீ ஸ்ரீ அந்தியகால சேவை
CLINTON FUNERAL SERVICE

548, ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்.
தொலைபேசி: 021-2223518 (சி-2737)

பாடசாலை அதிபர்களே! மாணவ மணிகளே!
எமது ஸ்தாபனத்தின் 45ம் வருட பூர்த்தியை முன்னிட்டு 20%-50% வரையிலான கழிவுகள் பாடப்புத்தகங்களுக்கும், புத்தகங்களுக்கும் வழங்கப்படும்.
உங்கள் பிள்ளைகளுடன் இன்றே விஜயம் செய்யுங்கள்
மாணவர்களுக்கான பாடசாலை, பல்கலைக்கழக பாடப்புத்தகங்கள், புலமைப்பரிசில் மாதிரி வினாத்தாள்கள், பாடசாலை உபகரணங்கள், அலுவலக உபகரணங்கள், தர உள்ளீட்டுப் பொருட்கள், மூலதனப்பொருட்கள், அழிபொருட்கள், வாத்தியக் கருவிகள், விளையாட்டுப் பொருட்கள், அலுவலக அலுமாரிகள், மேசைகள், பயில் அலுமாரிகள், புத்தக றாக்கைகள், ஆய்வுகூட இரசாயனப் பொருட்கள், ஆய்வுகூட உபகரணங்கள், O.H.P. புறஜெக்ரர், றோணியோ மெசின், மனித உடற்கூறுகளின் கனவுருத் தொகுதிகள், தொலைநோக்கி கருவிகள், (வானியல்) நுணுக்குக்காட்டிகள், கணினி நூல்கள் மற்றும் அறிவமுது, அந்திவானம் பதிப்பகங்களின் பதிப்புக்கள், வெளியீடுகள் யாவும் நீங்களே தெரிவுசெய்து பெற்றுக்கொள்ள நாடவேண்டிய ஒரே இடம்
ஆல் சிலோன் டிஸ்ரிபியூட்டர்ஸ்
212, கே.கே.எஸ். வீதி, யாழ்ப்பாணம்.
(சி-2736)

நமது ஈழநாடு
The Namathu Eezhanadu
The Leading Daily of Tamils' Homeland

# நீருக்கடியிலான ஊடுருவல்களை தடுக்கும் பாதுகாப்புச் சாதனங்களை கொள்வனவு செய்ய அரசு நடவடிக்கை!

(கொழும்பு)

துறைமுகங்களின் பாதுகாப்பைப் பலப்படுத்துவதற்காக - நீருக்கடியிலான ஊடுருவல்களைத் தடுக்கும் பாதுகாப்பு சாதனங்களைக் கொள்வனவு செய்வதற்கு கடற்படை கேள்விப் பத்திரங்களை கோரவுள்ளது.

துறைமுகங்களின் பாதுகாப்பை தொடர்ச்சியான திட்டம் ஒன்றின் அடிப்படையில் பலப்படுத்துவதற்கு கடற்படை நடவடிக்கை எடுத்துவருவதாக கடற்படை உயரதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

அண்மையில், அமெரிக்காவுக்கான விஜயத்தை மேற்கொண்ட கடற்படைத் தளபதி வைஸ் அட்மிரல தயா சந்தகிரி - இலங்கையிலுள்ள துறைமுகங்களின் பாதுகாப்புக் குறித்து அமெரிக்க அதிகாரிகளுடன் பேச்சு நடத்தியிருந்தார்.

இந்தப் பேச்சுக்களில், கடற்படையின் பொதுச்சேவைகள் இயக்குநர் கொமடோர் திசர சமரசிங்கவும், கடற படையின் நடவடிக்கை இயக்குநர் கொமடோர் ஜெயந்த பெரேராவும் பங்கேற்றிருந்தனர்.

இந்தப் பேச்சுக்களில் பல்வேறு விடயங்கள் குறித்து ஆராயப்பட்ட போதும் - குறிப்பாக - இலங்கையிலுள்ள துறைமுகங்களுக்கு சர்வதேச நடைமுறைகளுக்கேற்ப பாதுகாப்பு வழங்குவது தொடர்பாகப் பேசப்பட்டது.

இதன்போது இலங்கைத் துறைமுகங்களின் பாதுகாப்புக் குறித்து ஆராய்ந்து அறிக்கை சமர்ப்பிக்க குழுவொன்றைத் தாம் அனுப்பிவைத்ததாக அமெரிக்க கரையோரக் காவல் படைத் தளபதியான அட்மிரல் தொமஸ செ.கொலின்ஸ் தெரிவித்தார்.

இதேவேளை - துறைமுகங்களின் பாதுகாப்பை அவசரமாக பலப்படுத்தவேண்டியிருப்பதாக கடற்படை அதிகாரிகள் தெரிவித்தனர்.

அத்துடன் - திருகோணமலை, கொழும்பு, காங்கேசன்துறை, காலி, ஆகிய துறைமுகங்களின் பாதுகாப்பை பலப்படுத்துவது குறித்து ஆராய்ந்து அறிக்கை சமர்ப்பிக்க கடற்படை குழுவொன்றை அமைத்திருப்பது குறிப்பிடத்தக்கது.

## தமிழீழ இளையோர் விளையாட்டு விழாவில் மாவட்டங்கள் பெற்ற புள்ளிகள்!

| மாவட்டம் | 14வயதுப் பிரிவு | 16வயதுப் பிரிவு | 18வயதுப் பிரிவு | மொத்தப் புள்ளிகள் |
|---|---|---|---|---|
| யாழ்ப்பாணம் | 12 | 56 | 81 | 149 |
| திருகோணமலை | 19 | 45 | 54 | 118 |
| மன்னார் | 13 | 23 | 35 | 71 |
| அம்பாறை | 29 | 11 | 23 | 63 |
| மட்டக்களப்பு | 03 | 17 | 28 | 48.7 |
| வவுனியா | 28 | 16 | 4.5 | 48.5 |
| கிளிநொச்சி | 18 | 26 | 12 | 56 |
| முல்லைத்தீவு | 09 | 13 | 10 | 32 |

# ஐ.தே.க - ஜே.வி.பி. ஆதரவாளர்கள் பொலனறுவையில் நேற்று மோதல்!

(கொழும்பு)

பொலனறுவை - திம்புலாகலப் பிரதேசத்தில் ஐக்கியத் தேசியக் கட்சி ஆதரவாளர்களுக்கும், ஜே.வி.பி. ஆதரவாளர்களுக்கும் இடையில் நேற்று கலவரம் ஒன்று இடம்பெற்றது.

ஜே.வி.பி யின் கூட்டம் ஒன்று நேற்றுமாலை திம்புலாகல பிரதேசத்தில் நடைபெறவிருந்தது. அவ்வேளை ஐக்கிய தேசியக் கட்சியின் போராட்டமொன்று நடைபெற்றுக் கொண்டிருந்தது.

விவசாயிகளின் பிரச்சினைகளை வலியுறுத்தியே ஐக்கிய தேசியக் கட்சியினர் போராட்டத்தை நடத்தியிருந்தனர். அந்தவேளை ஐக்கிய தேசியக்கட்சியினரின் பேரணி ஜே.வி.பியினரின் கூட்டம் நடைபெற்ற இடத்தைக் கடந்து செல்கையில் இரு கட்சி ஆதரவாளர்களுக்குமிடையில் முறுகல் நிலை தோன்றியது.

இதனையடுத்து இரு பகுதியினருக்குமிடையே உருவான கைகலப்பில் பலர் காயமடைந்தனர்.

சம்பவ இடத்திற்கு வருகைதந்த பொலிஸார் கைகலப்பில் ஈடுபட்டவர்கள் மீது கண்ணீர்புகை குண்டுத்தாக்கு தலை நடத்தி விரட்டியடித்தனர்.

இதனையடுத்து நேற்று மாலை அப்பகுதி வெறிச்சோடிக் காணப்பட்டதுடன் பொலனறுவைப் பிரதேசம் எங்கும் பதற்றநிலை காணப்பட்டது.

பொலிஸார் தொடர்ந்து பாதுகாப்புக் கடமையில் ஈடுபட்டிருந்தனர்.

### ஈ.பி.டி.பி...

பின் கூரிய ஆயுதமொன்றினால் தாக்கியுள்ளார்.

இதனால், ஆத்திரமடைந்த பொது மக்கள் அவ்விடத்தில் ஒன்றுதிரண்டு ஈ.பி.டி.பி. உறுப்பினரைத் தாக்க முற்பட்டுள்ளனர்.

அவ்வேளை - கைத்துப்பாக்கியைக் காட்டிய ஈ.பி.டி.பி. உறுப்பினர் பொதுமக்களை அச்சுறுத்தியுள்ளார். இதனால் ஆத்திரமடைந்த பொது மக்கள் அவரைத் தாக்கியுள்ளனர்.

அவ்வேளை பொதுமக்களில் ஒருவர் அவரை கூரிய ஆயுதமொன்றினால் தாக்கியபோது, அவருக்கு மார்புப் பகுதியில் சிறு காயம் ஏற்பட்டுள்ளது என்றனர். (ப)

### ராணுவ உளப்....

ரங்கள் தம்மிடம் இருப்பதாகவும் தெரிவித்தார்.

கடந்த மார்ச் மாதம் சச்சு மாஸ்ரருடன் சேர்த்து நால்வரை சட்ட விரோத ஆயுதங்கள் வைத்திருந்தமைக்காக காத்தான்குடிப் பொலிஸார் அவர்கள் பிரயாணம் செய்த வாகனத்துடன் கைதுசெய்து மட்டக்களப்பு சிறையில் வைத்தனர்.

ஆனால், இவர்களது வாகனத்தை விடுவிக்குமாறு இவர்களைக் கைது செய்த அன்றே இராணுவப் புலனாய்வுத் துறையினர் வற்புறுத்தியதை அடுத்து அந்த வாகனம் விடுவிக்கப்பட்டதாக மட்டக்களப்புப் பொலிஸார் தெரிவித்தனர்.

சச்சு மாஸ்ரர் உட்பட நால்வரைக் கைதுசெய்த அன்று மாலையே விடுதலை செய்யுமாறு இராணுவப் புலனாய்வுத் துறையினர் கேட்டதா

### 30 ஆயிரம்...

வர்களுக்குக்கூட பொருத்தமான வேலைகளை வழங்குவதற்கு அரசு கவனத்தில் கொண்டுள்ளது.

இதுவரை சில அரச நிறுவனங்களில், தேவையான ஊழியர்கள் இன்மையால் அவற்றின் நடவடிக்கைகளை உரிய விதத்தில் நடத்துவதற்கு இயலவில்லை.

இதன்படி அரச நிறுவனங்களில் இருக்கும் அனைத்து வெற்றிடங்களையும், எதிர்வரும் காலத்தில் நிரப்பி அரசசேவையை மிகவும் செயற்திறனோடு நடத்திச் செல்வதற்கு அரசாங்கம் தீர்மானித்துள்ளது.

கடந்தகால அரசைப் போன்று அரச பிரிவுகளின் வெற்றிடங்களை முறையற்ற விதத்தில் நிரப்புவதற்கு எவ்விதத்திலும் இடமளிக்கப்படமாட்டாதென்றும், பூரணமான தகுதியுடை

## தமது நாட்டுக்கு வருமாறு இந்தியா விடுத்த அழைப்பை ஏற்றுக்கொண்டார் பிரதமர்!

(கொழும்பு)

இந்தியாவிற்கு விஜயம் செய்யுமாறு பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவிற்கு இந்திய அரசினால் விடுக்கப்பட்ட உத்தியோகபூர்வ அழைப்பினை பிரதமர் ஏற்றுக் கொண்டுள்ளதாக பிரதமரின் அலுவலக அதிகாரிகள் தெரிவித்தனர்.

ஆனாலும், பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ இந்தியாவிற்குச் செல்வதற்கான திகதி மற்றும் பயண விபரங்கள் போன்றவை 'இன்னமும் முடிவு செய்யப்படவில்லையெனவும் அவர்கள் தெரிவித்தனர்.

பிரதமர் பதவியை ஏற்ற பின்னர் மஹிந்த ராஜபக்ஷ மேற்கொள்ளவிருக்கும் முதலாவது வெளிநாட்டு விஜயம் இதுவென்பது குறிப்பிடத்தக்கது.

### விடுதலை...

றுள்ளது.

இரு பகுதியினருக்கும் இடையிலான உறவை மேம்படுத்த வேண்டுமெனில் இவ்வாறான சந்திப்புக்களை

# கூரைத்தகடு மோசடி சம்பந்தமான மொத்தப் பெறுமதி 350 கோடியாம்!

## ஜே.வி.பி தெரிவிப்பு

வறிய குடும்பங்களுக்கு வழங்கவென இறக்குமதி செய்யப்பட்டு, கடந்த ஐக்கிய தேசிய முன்னணி அரசின் நாடாளுமன்ற உறுப்பினர்கள், மாகாண சபை அதிகாரிகள் மற்றும் உயரதிகாரிகளால் மோசடி செய்யப்பட்ட கூரைத்தகடுகளின் மொத்தப் பெறுமதி 350 கோடியென, ஜே.வி.பி சார்பான வாரப்பத்திரிகையொன்று செய்தி வெளியிட்டுள்ளது.

அந்தப் பத்திரிகைச் செய்தியில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது -

கொழும்பு மாவட்டத்தில் மட்டும் 32 கோடி பெறுமதியான மோசடியும், கொழும்பு தவிர்ந்த வெளிமாவட்டங்களில் இந்த மோசடி குறித்த விபரங்களும் கிடைக்கப்பெற்றுள்ளன.

இவர்களில் முன்னாள் சுகாதார அமைச்சர் பி.தயாரத்ன, சமுர்த்தி அமைச்சர் ஆர்.சிறிசேன, மக்கள் தொடர்பாடல் அமைச்சர் இம்தியாஸ் பாக்கீர் மாக்கார், வடமேல் மாகாண அபிவிருத்தி அமைச்சர் ரி.எம்.பண்டார, விவசாய உற்பத்தி அமைச்சர் ஜெயதிலக பொடி நிலமே, மற்றும் நாடாளுமன்ற உறுப்பினர்களான ஏ.டி.பிரேமதாஸ தம்பிக்க (கேகாலை), எட்வேர்ட் குணசேகர (கம்பஹா), அன்ரன் திசேரா (புத்தளம், அஜித் குமார மத்தேகம (இரத்தினபுரி) ஆகியோரே இந்த மோசடியில் ஈடுபட்டவர்களாவர்.

இதனைவிட முன்னாள் நீதியமைச்சரும் தற்போதைய நாடாளுமன்ற உறுப்பினருமான டபிள்யு ஜே.எம். லொக்குபண்டாரவின் ஹப்புத்தளை தொகுதிக்கு வழங்கவென வைத்திருந்த கூரைத்தகடுகள் காணாமற் போயிருந்ததாகவும் அப்பத்திரிகை தெரிவித்தது. (தே)

# அரசாங்க அச்சக தீ விபத்து; விசாரணை அறிக்கை இன்று!

(கொழும்பு)

அரசாங்க அச்சகத்தில் தீப்பிடித்தமைக்கு அதிகாரிகளின் பொறுப்பற்ற தன்மையே காரணமென அரசாங்க அச்சகர் நெவில் நாணயக்கார தெரிவித்தார்.

அச்சகத்தில் தீப்பிடித்த சம்பவம் தொடர்பாக விசாரணைகள் நடத்துவதற்காக அமைக்கப்பட்ட குழு விசாரணைகளை பூர்த்தி செய்துள்ளது.

இன்று இந்த விசாரணை அறிக்கைகள் கிடைக்கும் எனத் தெரிவிக்கப்படுகிறது.

இந்த தீவிபத்து தொடர்பாக அரசாங்க பகுப்பாய்வுத் திணைக்களமும், குற்றப்புலனாய்வுத் திணைக்களமும் விசாரணைகளை மேற்கொண்டிருந்தன.

அச்சகத்தில் கடமையாற்றிய பொறுப்புவாய்ந்த அதிகாரி ஒருவரின் நடவடிக்கையினாலேயே தீவிபத்து ஏற்பட்டதாக விசாரணைகள் மூலம் அறிந்துள்ளதாக அச்சகர் தெரிவித்தார். (01)

தெரிவித்தனர்.

சச்சு மாஸ்ரர் உட்பட நால்வரைக் கைதுசெய்த அன்று மாலையே விடுதலை செய்யுமாறு இராணுவப் புலனாய்வுத் துறையினர் கேட்டதாகவும், அதற்கு எழுத்து மூலம் அனுமதியை தாம் கேட்டதாகவும் காத்தான்குடிப் பொலிஸார் தெரிவித்தனர்.

விடுதலைப் புலிகள் அமைப்பில் இருந்த சச்சு மாஸ்ரர் கஞ்சிக்குடிச்சாறுப் பகுதியில் அமைந்துள்ள புலிகளின் முகாமிற்கு பொருட்கள் கொள்வனவில் ஏற்பட்ட நிதி மோசடியால் விடுதலைப் புலிகள் அமைப்பிலிருந்து 2002 ஆம் ஆண்டு விலக்கப்பட்டார்.

விடுதலைப் புலிகள் அமைப்பிலிருந்து நீக்கப்பட்ட கருணா, இந்த வருடம் மீளவும் சச்சி மாஸ்ரரை அழைத்து அம்பாறை மாவட்ட இராணுவத் தளபதியாக நியமித்திருந்தார்.

இதேவேளை, கைது செய்யப்பட்ட சச்சு மாஸ்ரர் உட்பட நால்வரும் கடந்த மாதம் 31 ஆம் திகதி மட்டக்களப்பு மாவட்ட நீதிமன்றில் ஆஜராக்கப்பட்டபோது, சட்டவிரோத ஆயுதங்களை வைத்திருந்த காரணத்தால் பிணை வழங்க முடியாதென்பதனால் இவர்களின் விளக்கமறியல் மேலும் நீடிக்கப்பட்டுள்ளது.

அதேவேளை, தற்போதைய விடயங்கள் தொடர்பாக நாம் மிகவும் கவனமாக அவதானித்து வருகிறோம். நாம் கட்டிக்காத்துவரும் பொறுமையை படையினர் தப்பாக எடைபோட்டு விடக்கூடாதென விடுதலைப் புலிகளின் கிழக்கு மாகாணத் தளபதி கேணல் ரமேஷ் தெரிவித்துள்ளார்.

கடந்தகால அரசைப் போன்று அரச பிரிவுகளின் வெற்றிடங்களை முறையற்ற விதத்தில் நிரப்புவதற்கு எவ்விதத்திலும் இடமளிக்கப்படமாட்டாதென்றும், பூரணமான தகுதியுடையவர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டு, தொழில்கள் வழங்கப்படும் என்றும் அமைச்சர் ஜெயராஜ் பெர்னாண்டோ புள்ளே மேலும் கூறினார்.

## கரும்புலிகள்....

குளம் பொதுவிளையாட்டு மைதானத்திலும் இடம்பெறவுள்ளது.

திருகோணமலை மாவட்டத்துக்கான நிகழ்வுகள் திருகோணமலை மாவட்டத்திலுள்ள மூதூரில் நடைபெறவுள்ளன.

கிளிநொச்சி மாவட்டத்துக்கான நிகழ்வு, கிளிநொச்சியில் அமைக்கப்பட்டுள்ள கரும்புலிகள் நினைவு மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

மட்டக்களப்பு மாவட்டத்துக்கான பிரதான கரும்புலிகள் நினைவு நாள் பழுகாமம் பொது மைதானத்திலும், மட்டக்களப்புநகரிலும் அம்பாறை மாவட்டத்துக்கான நிகழ்வு அம்பாறை சங்கமம் பள்ளியிலும் நடைபெறவுள்ளன.

இன்றுகாலை 8.05 க்கு பொதுச்சுடர் ஏற்றப்படும். 9 மணிக்கு கரும்புலிகள் நினைவு நாள் நிகழ்வுகளுக்கு தமிழீழ தேசியக்கொடி ஏற்றப்பட்டு தொடர்ந்து நிகழ்வுகள் இடம்பெறவுள்ளன.

யாழ்ப்பாணத்தில் இடம்பெறவுள்ள கரும்புலிகள் நாள் நிகழ்வுகளில் அனைத்து மக்களையும் அணிதிரண்டு பங்கேற்குமாறு யாழ் மாவட்ட தேசிய எழுச்சிப்பேரவை பொதுஅமைப்புக்களின் ஒன்றியம் மற்றும் பல்வேறு பொது அமைப்புக்களும் அழைப்பு விடுத்துள்ளன.

## விடுதலை...

றுள்ளது.

இரு பகுதியினருக்கும் இடையிலான உறவை மேம்படுத்த வேண்டுமெனில் இவ்வாறான சந்திப்புக்களை தொடர்ந்து நடத்த வேண்டும் எனக் குறிப்பிட்டார்.

## இளையோர்....

மோகனதாஸ், தமிழீழ விளையாட்டுத்துறை பொறுப்பாளர் பாப்பா, யாழ். மாவட்ட மகளிர் அரசியற்துறைப் பொறுப்பாளர் கலைவிழி மற்றும் வணபிதா கிளி ஆகியோர் சிறப்பு விருந்தினர்களாக கலந்துகொண்டனர்.

தொடர்ந்து தேசிய ரீதியில் பங்குபற்றி பதக்கங்களை வென்ற மாணவர்களுக்கு ஊக்குவிப்பு பரிசுகள் வழங்கப்பட்டன. இதனைத் தொடர்நது இளையோர் தடகள விளையாட்டு விழாவில் சாதனை படைத்த வீரர்களுக்கு வெற்றிக் கிண்ணங்கள் வழங்கப்பட்டன.

தொடர்ந்து முதலாம் இடத்தைப் பெற்ற யாழ் மாவட்ட அணிக்கு வெற்றிக்கிண்ணத்தை தமிழீழ விளையாட்டுத்துறைப் பொறுப்பாளர் பாப்பா வழங்கினார். இரண்டாம் இடத்தைப் பெற்றுக்கொண்ட திருகோணமலை மாவட்டத்திற்கு யாழ்.மாவட்ட அரசாங்க அதிபர் செ.பத்மநாதன் வெற்றிக்கிண்ணத்தினை வழங்கி கௌரவித்தார். இதனைத் தொடர்ந்து தேசியக்கொடி இறக்கத்துடன் அரங்க நிகழ்வுகள் நிறைவுபெற்றன.

பின்னர் வாண வேடிக்கைகளும், வெடிகளும் முழங்கின. இந்நிகழ்வில் ஆயிரக்கணக்கான மக்கள் கலந்துகொண்டு வீர வீராங்கனைகளை உற்சாகப்படுத்தினர்.

தொடர்பாக விசாரணைகள் நடத்துவதற்காக அமைக்கப்பட்ட குழு விசாரணைகளை பூர்த்தி செய்துள்ளது.

இன்று இந்த விசாரணை அறிக்கைகள் கிடைக்கும் எனத் தெரி

பொறுப்புவாய்ந்த அதிகாரி ஒருவரின் நடவடிக்கையினாலேயே தீவிபத்து ஏற்பட்டதாக விசாரணைகள் மூலம் அறிந்துள்ளதாக அச்சகர் தெரிவித்தார். (01)


## பிரதேச செய்தியாளர் தேவை

'நமது ஈழநாடு' பத்திரிகை நிறுவனத்தில் பணியாற்றுவதற்கு பிரதேச செய்தியாளர் தேவை. ஆர்வமுள்ள துடிதுடிப்பான ஆண், பெண் இருபாலாரும் விண்ணப்பிக்கலாம்.

சுய விபரத்துடன் உறவினர் அல்லாத இருவரின் நற்சான்றிதழுடன் விண்ணப்பங்களை -

பிரதம ஆசிரியர்,
நமது ஈழநாடு,
267, நாவலர் வீதி, யாழ்ப்பாணம்
என்னும் முகவரிக்கு அனுப்பிவைக்கவும்

### செய்தியாளர் தேவைப்படும் பிரதேசம்

அல்வாய்
கரவெட்டி
உடுப்பிட்டி
வல்வெட்டித்துறை
பருத்தித்துறை
கரணவாய்

கைதடி
வரணி
நாவற்குழி
கொடிகாமம்
பளை

குருநகர்
கல்வியங்காடு

உரும்பிராய்
அச்சுவேலி
நீர்வேலி
இருபாலை
நவக்கிரி
கோப்பாய்

உடுவில்
இளவாலை
பண்டத்தரிப்பு
வட்டுக்கோட்டை
சங்கானை
மாதகல்

மல்லாகம்
தெல்லிப்பளை
ஏழாலை

கோண்டாவில்
புன்னாலைக்கட்டுவன்
இணுவில்
கொக்குவில்
சுன்னாகம்

ஊர்காவற்துறை
மண்டைதீவு
வேலணை



இப்பத்திரிகை இல.267, நாவலர் வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள நமது ஈழநாடு அச்சகத்தில் 05.07.2004 அன்று பொன்னுத்துரை குருதேவ் அவர்களால் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

பொதுசன நூலகம்
யாழ்ப்பாணம்

# கரும்புலிகளுக்கு கவிதாஞ்சலி...

## என் பிரிய போராளிக்கு...

எப்போதாவது தான்
உன் சேதி வரும்
மண்வாசனையும் கடலோசையும்
சுமந்து வரும் காற்று.
எப்போதாவது தான்
உன் சேதி கொண்டு வரும்
அப்போதெல்லாம்
சிங்கள தேசம் சிலிர்த்துக் கொள்ளும
பெற்ற ஆயுதங்கள்
முடிந்த பயிற்சிகள்
கேட்ட ஆலோசனைகள் தவிடுபொடியாக
கையாலாகாத்தனத்துடன் மௌனிக்கும்.
எமதேசமோ
வார்த்தைகள் தொலைத்த கண்ணீருடன்
பெருமைப்பட்டுக் கொள்ளும்.
என் பிரிய போராளியே
ஆத்மாவிலும் புன்னகை ஏந்த
நீ எங்கே கற்றாய்........?
எப்போதாவது தான்
உன் சேதி வரும்
மண்வாசனையும்கடலோசையும்
சுமந்து வரும் காற்று
எப்போதாவது தான்
ஆத்மாவில் புன்னகை ஏந்திய
உன் சேதி கொண்டு வரும்.
என் பிரிய போராளியே
விரிந்து கிடக்கும்
எம் தேச நிலத்தில்
நடக்கிறேன்.
தொலைவில்
கண்படும் தொலைவில்
வானுயர்ந்த கரும்பனைகள்.
என் கால்கள் தள்ளாடுகிறது
எம் தேசமண் தொட்டமர்கிறேன்.
தொண்டைக்குழி காய்ந்து
விழிநீர் பெருக்கெடுத்தோடுகிறது.
வித்தான இடமெல்லாம்
தேடித் தேடிவந்து
முழந்தாழ் மண்டியிடவே
துடிக்கிறது மனசு.
ஒரு வார்த்தை சொல்லாமல்
ஆத்மாவில் புன்னகை ஏந்தி
துயிலச் சென்றவர்கள் நீங்கள்
சிதறுண்டு போனது
எங்கள் மனங்களல்லவா கரும்புலிகளே........?

நாம் காத்திருக்கிறோம்
எமதூர்ப் பாதைகள் காத்திருக்கின்றன.
கடல் அலைகளும் காத்திருக்கின்றன.
கொண்ட உன்
வேட்கையின் முடிவுகளுக்காய.

-துளசி-

## தற்கொடை தந்தவர் தாழ் பணிவோம்...

புன்னகை ரதங்கள்
புதிராய்த் தம்மை யாகுதியாக்கிய
சலிக்காத போர் முகங்கள்
சாதித்தமர்ந்த கல்லறைச் சிற்பங்கள்...!'

காலத்தால் லழியாத
உணர்வோவியங்கள்
காவியத் தலைவன் நினைவிலெரியும்
சுடரோவியங்கள்...!

கயவர் மெய் கலங்க வீறுகொண்டு
வெற்றிகளை விளைத்த பேராயுதங்கள்

சூரியத்தேவன்
பார்வையில் மலர்ந்த
சூசியப் புதல்வர்கள்
வீரியத்தில்....
விளைந்த ஆவணங்கள்
விடுவிக்க புறப்பட்ட
வீர சரித்திரங்கள்....!

நீதிக்காய் நிமிர்ந்து
நீறுபூத்த நெருப்பாய்
நீக்கமற மலர்ந்த உணர்வுப் பூக்கள்
உயர் கவிப் பாக்கள்...!

இருளகற்றி ஈழத்துக்கு
இன்வொளழி பாச்ச
தம் வாழ்வை
இருளாக்கி சென்ற
இரும்பு மனிதர்கள்...!

தீஞ்சுரைத் தீண்டிய தீப்பந்தங்கள்
திசையெட்டு தாவிய
தசைநார் கட்டுக்கள்
தீண்டும் ஞாபகச் சொட்டுக்கள்

தலைவர் சொல்படி மில்லர் வழிப்படி
சமாதானத்தின் முதல்படி
கரும்புலிகள் தூக்கிய போர்க்கொடி.

தற்கொடை தந்தவர்
தாழ்பணிந்து...
பொற்குடை கொண்டவர்
புகழ் பாடுவோம்...!

ஆக்கியோன்:
இனுவை சக்திதாசன்
டென்மார்க்.

## யூலைப் பூக்களில் - இது ஒருவகைப் பூக்கள்

87ம் ஆண்டின்
யூலை மாதத்தின்.
5ம் நாள் மலர்ந்த - ஒரு
பூவின் சிதறல்களிலிருந்து.
எம் மண்ணில் பிறந்தவைகள் தான்
யூலைப் பூக்கள்.

இப் பூக்களின் - உயிர்
உடலைவிட்டுப பிரியும்
போதுதான்...........
கரும்பூக்களாகின்றன.
அதுவரைக்கும் - எந்த
உடல்பரப்பினுள்,
கரும்பூக்களின் மொட்டுக்கள்
உள்ளனவென்பது.
இவ்வுலகமே அறிந்திட முடியாது.
அது ஒரு வகையாகும்.

இது இன்னோர் வகையாகும்.
கரும் பூக்களாகி
பிறந்த பின்னும், பூக்கள்
பிறந்தென்பதை
வெடியோசைதான் கூறும்.
எந்த மேனியிலிருந்து - இந்தப்,
பூக்கள்பிறந்ததென்பது,
ஒரு சிலருக்கு மட்டும் தான்
தெரியும்............

இதை
மனிதப் பூக்களால்
பிரசவித்த தாய்ச்
செடிகூட அறிந்திடாது.
அப்படியறிந்தாலும் கூட
ஐயோ வென்று
அயலையழைத்து அழுதிடவும்
முடியாது.

இடி தாங்கியைப் போல்
இதயத்தில் தாங்கிக் கொண்டு
விழிகளிலிருந்து பூக்கள் பறித்து
உள்ளத்தினால் மட்டும்
விளக் கேற்ற முடியும்.

வெற்றிக்கு இரகசியம்
முக்கியமென்பதால்
முகம் தெரிந்தும்
முகவரியிட முடியாது
வாழுகின்றனர் - இந்த
ஒரு வகைப் பூக்களுக்காய்.

ஆக்கம்:-
கி.கலையுஷா, யாழ்.

## தமிழர் நெஞ்சத்துள்... எரியும் தீபங்கள்...

தீபத்தில் பொறியான துளிகள் - ஈழ
தேசத்தின் விதையான கரும்புலிகள்.
தியாகத்தின் ஒளியான பொறிகள் - தமிழர்
தேசத்தின் நிலையான உயிர்கள்.

பெண்ணுக்கும் பொன்னுக்கும்
ஆசைப்பட்டு
கண்தேடி அலைகின்ற இளவயதில்...!
தாய்
மண்ணுக்காய்த் தம்முயிரை வித்தாக்கி
- தலைவன்
நெஞ்சத்தில் முளைகொண்ட பயிர்கள்
கரும்புலிகள்...!

தமிழர் நெஞ்சத்து குருதிக்குள்
கலந்தவர்கள்
கால வெள்ளத்தில் அழியாது
வாழ்பவர்கள்.
தமிமீழ தேசியக் கொடியாய்
உயர்ந்தவர்கள்.
தமிழ்தேசம் தெய்வமாய்ப் போற்றும்
கரும்புலிகள்...!

இறப்பை மறைத்து எழுதிய
பிரமாவின்
எழுத்தை மாற்றிய கரும்புலி வீரர்
தமிழீழ தேசத்தின் சுதந்திர விடியல்
தாகத்தில் குண்டைச் சுமக்கும்
புலிவீரர்...!
அலைவீரம் உடைக்கும் கருவீரர் -
எதிரி
படைவீரம் எரிக்கும் மறவீரர்
தமிழ்மறவீரர்...!

எதிரி கண்ணுக்கு இவர்கள்
ஜெமன்கள்
விடியும் ஈழதேசத்தின் குருதித்
தளங்கள்...!
தமிழர் தேசத்தின் விடியல் தூண்கள்
தமிழர் நெஞ்சத்துள் எரியும்
தீபங்கள்...!

அன்புடன் கவிஞர்
வேலணையூர் பொன்னண்ணா
டென்மார்க்.

## கரும்புலிக ளாலீழம் உயர்ந்ததுவே

உள்ளத்து உணர்வுகளை யிறுக்கமாக்கி
உறவுகளி னிசைவுகளி னின்றுநீங்கி
எள்ளிநகை யாடுநிலை எம்மவர்க்கு
எதிர்காலத் தொருபொழுதும் தோன்றாவண்ணம்
துள்ளியெழுந் தசையாத இலட்சியத்தோ
டுறுதியுடன் தம்முயிரி னாயுதத்தால்
நள்ளிரவில் களம் நுழைந்து பகை முடிக்கும்
கரும்புலிக ளாலீழம் உயர்ந்ததுவே.




அதிகார மமதையினா லழிவைநாடும்
ஆட்சியினைச் சுவைத்துநிற்கும் சந்திரிகா
விதியழுத்தத் தடுமாறிப் பழிக்கஞ்சாது
வேதனையை விலைகொடுத்த வாங்குவதால்
சதிவினையு முள்ளத்துச் சூதினாலே
சினமூட்டிப் புலிகளோடு முட்டிமோதின்
பதிகாக்கும் கரும்புலிகள் கணம்திரண்டு
பதைபதைக்கச் சிங்களத்தைத் தகர்த்தெறிவார்.

வேங்கைகளின் வல்லமையால் நிமிர்ந்தெழும்பும்
வெல்லதற்கு மரியதான தமிழீழத்தின்
வீங்குகின்ற தோள்முறுக்கும் புலிகள் படை
வீணர்களி னினவாதச் சதிகளெல்லாம்
ஓங்கியொலி மழங்குகின்ற அதிரடியால்
தகர்த்தெறியும் போதினிலே யுள்நுழைந்து
ஏங்கிமுழ வுலகுமொன்றா யதிரும் வண்ணம்
சிங்களத்துப் படைதுடைக்கும் கரும்புலிகள்.

மாரீசன்.

## புதுச்சரித்திரம் படைத்தவர்கள்

கரும்புலிகள்
தாய்திருநாட்டை
தாயினும் மேலாய் நேசித்தவர்கள்
தானைத் தலைவனின் கரத்தினிலே
தன்மான உணர்வோடு
தயார் படுத்தப்பட்டவர்கள்

உயிரை ஆயுதமாக்கி
உள்ளத்தில் துணிவோடு
உலகையே ஆட்டங்காண
வைத்தவர்கள்

தமிழீழ மண்ணெங்கும்
தன்னிகரில்லா தற்கொடையாளராய்
தலை நிமிர்ந்து நிற்பவர்கள்
தமிழர் தம் இதயங்களில்
தனி இடம் பிடித்து
தனித்துவமாய் வாழ்பவர்கள்

சிதறுண்டு போனாலும்
சிந்திய குருதியினால்
சுதந்திரத்தைப் பெற்றுத் தந்தவர்கள்

புறநானூற்று வீரத்தில்
புதுச்சிரித்திரம் படைத்தவர்கள்.

இ.அ.அமலரட்ணம்
யாழ்ப்பாணம்.

## உமக்காக இரு நிமிடம்

களத்தில் இறங்கிய வீரர் என்னும்
களம் கண்ட ஞ்சியதில்லை
கரும் புலியாய் பாய்ந்தவர் என்றும்
மரணித்த மாவீரர் பாதை நீண்டதேயன்றி
முற்றுப் பெற்றிட வில்லை
மண்ணுள் மௌனித்த வீரரே
மௌனமாய் இரு நிமிடம் உமக்காக

யு,லைத் திங்கள் ஐந்தாம் நாளில்
காலைக் கதிரவன் ஒரு கணம் குனிவான்
சாலைச் சேவலும் மௌனம் காக்கும்
நாளை யெம்நிலை எதுவென வினவும்

ஏட்டுக் கல்வி தந்தது அறிவு
எடுத்த பயிற்சி கொடுத்தது உறுதி
எழுதிய பேனா உடைந்து போனது
எடுத்திட்ட ஆயுதம் உன்பெயர் கூறுது

அன்னையின் மடியில் உறங்கிய குழவி
அன்னை மண்ணில் சிந்திய குருதி
மண்ணிட்டு மூடினர் உன் புகழுடலை
மண்மேடு இயம்புது உன்சரிதை யதனை

தொடர்ந்துமே செல்கின்ற வீரா - என்னும்
தமிழ் நிலை உயர்ந்திடச் செய்வாய் தோழா
சாதனை படைத்திட வேண்டாம மகனே - நம்
சரித்திரம் நிலை பெற வேண்டும்.

சௌமி பூ.பாலபாஸ்கரன்
யாழ்.பொது அலுவலகம்.

# வெடி சுமந்து பகை முடித்த கருவேங்கைகள் நாளிது

தமிழீழப் போராட்ட வரலாற்றில் தமக்கெனத் தனித்துவமானதும், மகத்துவமானதுமான இடத்தினைப் பெற்று எம் நெஞ்சங்களிலெல்லாம் நிறைந்து விளங்குபவர்கள் கரும்புலிகளெனும் தியாக மறவர்கள் ஆவர். இவர்களை நினைவுகூரும் அரிய நாள் இன்றாகும்.

முதல் கரும்புலிவீரனான கப்டன் மில்லர் வீரகாவியமான இந்த நாளில் ஈடு இணையற்ற தியாகத்தைப் போற்றுவோம். வீரகாவியமான அந்த மறவர்களின் ஒவ்வொரு தியாகத்திலும் தமிழீழப் போராட்டத்தின் வலிமை, இலக்கு என்பன திடமாக வெளிப்படுத்தப்பட்டுள்ளன.

இலங்கையின் இனவெறிபிடித்த சிங்கள இராணுவமோ, ஆட்சியாளர்களோ இன்று தமிழருக்கென ஓர் கௌரவத்தை வழங்குவதற்கும், தமிழர்களைக் கண்டால் தீண்டிப் பார்க்காது! விலகிச் செல்வதற்கும் இந்த வீரவிழுதுகளே அடிநாதமாய் நிற்கின்றன.

சர்வதேசத்திற்கும் எமது போராட்டத்தின் நோக்கம், எமது மக்களின் துயரங்கள், சிங்களவர்கள் இழைத்து வந்த அநீதிகளின் வரம்பற்ற தன்மைகள் முதலானவற்றை வெளி உலகிற்கு உணர்த்தியது இந்த மறவர்களின் தியாகங்களே. ஏனெனில் ஒவ்வொரு கரும்புலியும் வெடித்த போது உலகம் எம்மை உற்று நோக்கியது.

ஏன் மனித உயிரைத் துச்சமென நினைத்து தியாகசிந்தையுடன் உயிர் துறக்கின்றனர். இவர்களின் நோக்கம்தான் என்ன இப்படியானதொரு தியாகசிந்தை துயரங்களை அனுபவித்து மரத்துப்போன உள்ளங்களின் மனங்களிலிருந்து தான் வரும். அப்படியானால் இலங்கையில் தமிழர் மீது அடக்குமுறை எந்தளவிற்குக் கட்டவிழ்த்துவிடப்பட்டுள்ளது என்பதை சர்வதேச நாடுகள் அவதானிக்கச் செய்தது, இந்த மனித வெடிகுண்டுகளின் தியாகம்.

காற்றோடும், கடலோடும், தரையோடும் கலந்துவிட்ட நூற்றுக்கணக்கான கரும்புலிகள் தம்மை எமக்குத்தந்தபோது, எம்மண் விடிய வேண்டும் எதிர்காலச்சந்ததி நிம்மதியுடன் வாழவேண்டும் என எண்ணினார்களேயன்றி சர்வதேசம் எமது போராட்டத்தைப் பார்க்கவேண்டும், எமக்கு வேற்றுநாட்டு உதவிகிடைகக வேண்டும் என்று எண்ணவில்லை.

இந்தத் தியாக மனிதர்களை நினைவுகூருகின்ற இந்த நாளில் ஒன்றை நாம் எல்லோரும் மனதில் கொள்ளவேண்டும். ஒவ்வொரு கரும்புலிகளின் இறப்பிலும் இலங்கையின அரசியலில் பல திருப்பங்களையும், தமிழீழ வரலாற்றில் புதிய பரிமாணத்தினையும் காணமுடியும். குறிப்பாக சர்வதேசம் அன்றிலிருந்து இன்றுவரை தமிழர்களுக்கு நேரடியாக எந்தவொரு நன்மையையும் செய்யவில்லை. அவை இலங்கைத் தீவில் கால் பதிப்பதற்காக அரசுக்கு ஆதரவாகவே செயற்படுகின்றன. எனினும் கரும்புலிகளின் தியாகத்தினையும், அத்தியாகத்தினூடாக உண்டாகும் தாக்கத்தினையும் அனைவருமே உணர்ந்துள்ளனர்.

முதல் கரும்புலி மாவீரன் மில்லர் தொடக்கம் இன்றுவரை தம்மை எமக்காக ஈர்ந்த கரும்புலிகள் அனைவரும் தமது உயிர் பிரியும் வேளை அறிந்து, பகைவரின் வாழ்விடங்களுக்குள் ஊடுருவி உயிர்துறந்தவர்கள். அவர்கள் தாம் உயிர்பிரியப் போவதையோ, தமது உடல் இறுதி ஊர்வலத்திற்குக் கூட இல்லாது போகப்போவதையோ எண்ணிப்பார்க்கவில்லை. அவர்கள் எண்ணியதெல்லாம் தமது இலக்கு, சரியான தாக்குதல் தாயக விடுதலை, தலைவனின் கட்டளை இவற்றைவிட வேறு எதுவுமல்ல.

இவர்களும் இம்மண்ணில் தமிழ்த் தாயின் வயிற்றில் பிறந்த எம்மைப் போன்றவர்கள் அவர்களுக்குப் பாசம், அன்பு, இரக்கம், காதல் அனைத்து உணர்வுகளுமே இருந்திருக்கும். ஆனால், அவற்றிற்கெல்லாம் மேலாக தாயகக்கடமை தெரிந்திருக்கிறது. அதனாலேயே அவர்கள் தம் இன்னுயிரை கணப்பொழுதில் கயவர்களை அழிக்க ஆகுதியாக்கியுள்ளார்கள்.

இவர்கள் தியாகம், எமது போராட்ட வரலாற்றில் ஏற்படுத்திய தாக்கம் பலமானது என்பதற்கு சில உதாரணங்களைக் கூறமுடியும். 1987 ஆம் ஆண்டு நெல்லியடியில் மில்லரின் பாய்ச்சல் மூலம் பெருமளவு சிங்களப் படையினர் கொல்லப்பட்டனர். இச்செயல் சிங்கள ஆட்சியாளர்களை மட்டுமல்ல இந்தியா உட்பட அனைத்து வெளிநாட்டு சக்திகளையுமே கிலிகொள்ளச் செய்தது.

இதன் ஒரு கட்டமாகவே இந்திய இராணுவத்தினர் சமாதானப் படைகளாக இலங்கைக்கு வந்து எமது விடுதலைப் போராட்டத்தினை நசுக்கமுயற்சித்தனர்.

தமிழீழக் கடற்பரப்பில் தமிழ் மீனவர்கள் துன்புறுத்தப்பட்டபோது கடற்கரும்புலி அமைப்பு உருவானது. இதில் பெண்களும் தம்மை இணைத்துக் கொண்டனர். முதலாவது பெண்கடற்கரும்புலியாக அங்கயற்கண்ணி பாய்ந்தாள். இன்று அவர்பின் ஏராளமான கடல், தரைக் கரும்புலிகளாக பெண் போராளிகள் சென்றுள்ளார்கள். இக்கடற் கரும்புலிகள் அமைப்பால் இன்று தமிழீழக் கடற்பரப்பில் பகைவன் நுழைய மிகுந்த அச்சமடைந்துள்ளான். இதனைவிட 1995 காலப் பகுதியில் பலாலிப் படைத்தளத்திற்கு உணவு விநியோகம் மேற்கொள்வதற்கே பயன்படுத்த முடியாத நிலையில் இலங்கைக் கடற்படை திண்டாடியது.

இன்று பெரும்படையாக அணிவகுத்து நிற்கும் கரும்புலிப்படையானது தமிழர் தேசத்தின் வலிமைக்கு எடுத்துக்காட்டாகும். மூன்றாம் கட்ட ஈழப்போரின் தொடக்கமும் கரும்புலித் தாக்குதல்தான், முடிவும் அத்தியாயத்தின் சாதனையால் உண்டான விளைவுதான்.

1995 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 19 ஆம் திகதி மூன்றாம் கட்ட ஈழப்போர் ஆரம்பமானது. அன்று அதிகாலை திருகோணமலைத் துறைமுகத்தில் தரித்து நின்ற றணசுறு, சூரயா எனும் இரண்டு கப்பல்கள் இந்தக் கரும்புலி மறவர்களால் நிர்மூலமாக்கப்பட்டன. அன்று தொடங்கிய யுத்தம் கட்டுநாயக்கா சர்வதேச விமான நிலையத்தில் நின்ற கோடிக்கணக்கான பெறுமதிமிக்க விமானங்களின் அழிப்பைத் தொடர்ந்து ஓய்ந்திருக்கிறது.

அதாவது, தனித்துவமான தியாகத்தின் சாதனையை இந்தக் கட்டுநாயக்கா விமானப்படைத் தளத்தின் மீதான தாக்குதல் எடுத்துக் காட்டியதுடன், இலங்கை அரசை ஆட்டம் காணவைத்தது. துல்லியமான தந்திரமும், சக்தியும் வாய்ந்த இந்தச் சக்தியுடன் போரிட முடியாது என்பதை உணர்ந்தனர். இன்று சமாதானப் பேச்சுவரை அரசை இழுத்துவந்து விட்டிருக்கிறது.

எனினும் இந்தப் பேச்சுக்கள் இன்று இரண்டு வருடங்களுக்கும் மேலாக இழுபட்டுச் செல்வதால் சிங்களவர்கள் தமக்கு விழுந்த அடிகளையெல்லாம் மறந்து வாயில் வந்ததையெல்லாம் பேசுகின்றனர். மீண்டும் ஓர் போர் தொடங்கினால் அதன் பாதிப்பை அனுபவிக்கப்போவது சிங்களவர்களாகத்தான் இருக்கமுடியும். அதனைவிட இன்று எமது தாயகவிடிவிற்காய் எமதினிய தலைவனின் பின்னால் இலட்சிய உணர்வோடு திரண்டிருக்கும் கரும்புலி அணி மிகவும் பலம் வாய்ந்ததாக உள்ளது.

இதனை உணர்ந்து சரியானதொரு தீர்விற்குச் சிங்களப் பேரினவாத சக்திகள் உடன்படாவிட்டால் தமிழீழம் அமையப்போவது உண்மையிலும் உண்மை. அதனை சர்வதேசமும் பார்க்கத்தான் போகிறது. இன்று இந்தப் பேச்சுவார்த்தையெனும் இழுத்தடிப்புக்களால் தமிழர் படைகளின் வலிமை, மனோதிடம் என்பன குறைக்கப்படுமென சிங்கள ஆட்சியாளர்கள் கனவு காணுகின்றனர் போலும். அது தவறான கணக்கு ஏனெனில் தியாகத்தையே மனதில் கொண்டு தம்மை நாட்டிற்காய் அர்ப்பணித்தவர்கள் என்றும் திடமானவர்கள் என்பதை எவரும் மறந்துவிடக் கூடாது.

இன்று நாம் உன்னத தியாகிகளை நினைவு கூரும் நாள் எமக்காக சாவைத் தேடிச்சென்று அணைந்துகொண்ட கரும்புலிகளுக்கு மலர் தூவி அர்ச்சித்து அவர்கள் தியாகத்தைப் போற்ற வேண்டியது நம் ஒவ்வொருவரினதும் இரத்த சம்பந்தப்பட்ட கடமையாகும். தமிழ் உணர்வும், தமிழ்ப் பற்றும் கொண்ட நாம் அவர்களுக்குச் செய்யும் மிகச் சிறிய கௌரவமாகும்.

என்றும் மனதில் நீங்கா இடம் பிடித்த இக்கரும்புலிகளுக்கு அஞ்சலி செய்திடத் தமிழர் தாயகமே எழுந்து நிற்கும் இவ்வேளை யாழ். மக்களும் தமது அஞ்சலிகளைச் செலுத்தி அந்த மறவர்களின் தியாகத்தைப் பணிந்து போற்றுவதுடன் அழகு மாணிக்கங்களாய் விளங்க வேண்டிய வய்தில் தேசவிடுதலைக்காய், அத்திவாரக்கற்களாய்த் தம்மை தந்த வேங்கைகளின் வழிதனைத் தொடர்ந்திட உறுதிகொள்வதும் அவசியம். அதுவே அவர் கனவுதனை நன வாக்கும் தமிழீழம் உருவாக்கும்.

**- செந்தணன்**


மனவுறுதிக்கு மறு பெயரானவர்களே
இன்றல்ல என்றும் உங்கள் நாளே

சமூக பொருளாதார அபிவிருத்தி வங்கி
SOCIO ECONOMIC DEVELOPMENT BANK

எம்முடன் இணைந்து கொள்ளுங்கள் உங்களின் எதிர்காலத்தை வளமாக்கிக்கொள்ளுங்கள்

- உங்களின் வாசலிலேயே சேமிப்பைத்தொடங்கும் வாய்ப்பு.
- பல்வகையான சேமிப்புத்திட்டங்கள்.
- சிறார்களுக்கான விசேட சேமிப்புத்திட்டம்.
- சேமிப்பிற்கு அதிகூடிய வட்டி.
- சுயதொழில் முயற்சிக்கான கடன்கள்.
- இலகுவான தவணைக்கால மீளளிப்புக்கள்.
- சேமிப்பு பழக்கத்தை வழக்கப்படுத்துவதற்காக கிராமம் தோறும் நடமாடும் சேவைகள்.
- விரைவான சேவை.

எதிர்காலத்தை உங்களுடையதாக்கிக் கொள்ளுங்கள்

எமது கிளைகள்:
கிளிநொச்சி. புதுக்குடியிருப்பு. மல்லாவி. உடையார்கட்டு. முழங்காவில்.
முல்லைத்தீவு நகரம். வடமராட்சி கிழக்கு. மூதூர்.




(சி-2740)





நாளும் சாகாவரம், சாவினை வேண்டியவர்கள் நீங்கள்

தெல்லிப்பளை. ப.நோ.கூ.சங்கம்
தலைவர்
பொது முகாமையாளர், பணிப்பாளர், பணியாளர்கள்.

(சி-2739)